# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**


மலர்: X இதழ்: 11 | மே 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: X Issue: 11 | May 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




மனிதன் ஆயுள் குறைய காரணம் என்ன?

நிதி! நீதி! நிர்வாகம்!

- ஆசிரியர் கடிதம்

காலநிலை மாற்றம் குழந்தைகளை பாதிக்குமா!

உடல் சூட்டை தணிக்கும் உபாயம்!

சொத்து பிரிக்க உயில் அவசியமா!

## போதையின் பாதையில் இளைஞர்கள்!

## வளர்ச்சி பாதைக்கு திரும்புமா நாடு!

# DEAR PARENTS



The holiday assignment given by a school in Chennai to its children is going viral all over the world.

The reason is simply that it has been designed very thoughtfully. Reading this makes one realize where we have actually arrived and what are we giving to our children?

School has given homework not for children but for parents, which every parent should read.

they wrote-

We enjoyed taking care of your children for the last 10 months. You must have noticed that they love coming to school. The next two months will be spent with their natural protector i.e. you. We are giving you some tips so that this time proves useful and happy for them.

- Eat meals with your children at least twice. Tell them about the importance of farmers and their hard work. And tell them not to waste their food.
- Let them wash their own plates after eating. Through such works, children will understand the value of hard work.
- Let them help you cook with you. Let them prepare vegetables or salad for them.
- Go to three neighbors' houses. Learn more about them and grow closer.
- Go to grandparents' house and let them mingle with the children. Their love and emotional support is very important for your children. Take pictures with them.
- Take them to your work place so that they can understand how hard you work for the family.
- Don't miss any local festival or local market.
- Motivate your children to sow seeds to create a kitchen garden. Knowing about trees and plants is also important for the development of your child.
- Tell children about your childhood and your family history.
- Let your children go out and play, let them get hurt, let them get dirty. It is good for them to fall occasionally and endure pain. A life of comfort like sofa cushions will make your children lazy.
- Play them some folk songs.
- Bring some story books with colorful pictures for your children.
- Keep your children away from TV, mobile phones, computers and electronic gadgets. He has spent his whole life for all this.
- Avoid giving them chocolates, jellies, cream cakes, chips, aerated drinks and bakery products like puffs and fried foods like samosas.
- Look into the eyes of your children and thank God for giving you such a wonderful gift. In the coming few years from now, they will be at new heights.

As a parent, it is important that you give your time to your children.

If you are a parent then your eyes must have become moist after reading this. And if your eyes are moist then the reason is clear that your children are really away from all these things. Every word written in this assignment tells us that when we were young, all these things were a part of our lifestyle with which we grew up, but today our children are away from all these things, due to which we ourselves Are...Happy Holidays.



Concept by:
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

# நிதி! நீதி! நிர்வாகம்!

**அ**ன்புடையீர் வணக்கம்!

இந்திய அரசியலமைப்பின் படி ஒரு அரசாங்கம் மூன்று அமைப்பின் கீழ் இயங்கும் அது சட்டத்துறை(legislative) ஆட்சித்துறை (executive) நீதித்துறை (Judicial) என்று மூன்று வகையாக இயங்கும். மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி முறை தான் நம்முடைய இந்திய நாட்டின் ஆட்சி முறை.அந்த வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் சட்டம் இயற்றுவார்கள். அது மாநில அளவில் சட்டமன்றம் என்றும் அகில இந்திய அளவில் நாடாளுமன்றம் என்றும் அழைக்கப்படும். அந்த சட்டங்களை அமல்படுத்துவது ஆட்சி நிர்வாகம் ஆகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமை மற்றும் உரிமைகள் மீறப்படும் போது அவற்றில் தலையிட்டு உரிய நிவாரணத்தை வழங்குவது தான் நீதித்துறையின் சிறப்பம்சமாகும்.

இப்படி சிறப்பாக செயல்படுகின்ற ஆட்சி முறை இந்தியாவின் ஆட்சி முறை.

இதில் மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வருபவர்கள் மத்தியில் உள்ள ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஒரே அரசியல் இயக்கத்தை சேர்ந்தவர்களாக இல்லாத போது அந்த மாநிலங்கள் நிதி பற்றாக்குறையால் அல்லது நிதி ஒதுக்கீடு பிரச்சனையால் எந்தவித முன்னேற்றமும் ஏற்பாடு தர முடியாமல் சிக்கலில் தவிப்பதும் அதிகார பங்கேற்றில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே விரிசல் ஏற்படுவதும் நிர்வாக சிக்கல்கள் ஏற்படுவதும் மக்களை வெகுவாக பாதிக்கும்.

சமீபகாலமாக மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் எதிர் அணியில் இருக்கும் வேறு கட்சியின் ஆட்சி நடைபெறும் மாநிலங்களில் நிதி வழங்கப்படுவது முறையாக இல்லை என்று கோரி சட்டத்தின் அடிப்படையில் அதை வழங்க கோரி நீதிமன்றத்தை நாடுவது என்பது வாடிக்கையாகிவிட்டது என்கிற செய்தி உண்மையிலே வருத்தப்பட வைக்கிறது.



தங்கள் மாநிலங்களை நிர்வகிக்க நிதி கோரி நீதிமன்றங்களை நாட வேண்டிய சூழல் பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் வேளாண் சாகுபடிபாதிப்பை ஈடுகட்ட ரூ.35,162 கோடி,தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.18,171 கோடி வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கர்நாடக அரசு கேட்டது.

இதுதொடர்பாக கர்நாடக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குதொடரப்பட்டது.

இதன்படி சில நாட்களுக்கு முன்பு கர்நாடகாவுக்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ.3,499 கோடியை மத்திய அரசு வழங்கியது.

இந்த வழக்கு இன்னமும் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது.

கேரளாவில் ஆளும் இந்தியாவின் ஒரே இடதுசாரி அரசுக்கு மத்தியில் ஆளும் பாஜக அரசு போதுமான நிதி வழங்குவது இல்லை என்பது அம்மாநிலத்தின் குற்றச்சாட்டு. கேரளா மாநில அரசு, திட்டங்களுக்கு இந்தியில் பெயர் வைக்க மறுப்பதால் மத்திய அரசு நிதி தர மறுக்கிறது என்பதும் மற்றொரு குற்றச்சாட்டு.

"இத்தகைய நிலைமைகளால் அனுமதிக்கப்பட்ட நிதி வரம்புக்குள் வெளியில் கடன் வாங்க கேரள அரசு முயற்சிக்கிறது. இதற்கும் மத்திய பாஜக அரசு அனுமதி தர மறுக்கிறது. இதனையடுத்து மத்திய அரசுக்கு எதிராக கேரளா மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது."

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, ரூ13,600 கோடி கடன் வாங்க கேரளாவுக்கு அனுமதி தர மத்திய அரசு

தயாராக உள்ளது; ஆனால் மத்திய அரசுக்கு எதிரான வழக்கை கேரளா திரும்பப் பெற வேண்டும் என மத்திய அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதனை கேரளா மாநில அரசு நிராகரித்தது.

அரசியல் சாசனத்தின் 293வது பிரிவு இதுவரை கேள்விக்குள்ளாக்கப்படவில்லை. இது மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான நிதி சார்ந்தது. இதனால் இந்த வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்சுக்கு மாற்றுவதாக உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழகத்தை பொறுத்தவரையில் ஆளும் திமுக தரப்பில் மத்திய அரசு போதிய நிதியை ஒதுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்டவும், சென்னை மெட்ரோ திட்டத்திற்கும் மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி தனது தேர்தல் பிரச்சாரங்களில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்ட நிதி ஒதுக்கவில்லை என்று சொல்லி அங்கு நட்டிருந்த செங்கல்லை தூக்கி வந்து தேர்தல் பிரச்சாரத்தில் காண்பித்து பரபரப்பை உண்டாக்கினார். இந்த தேர்தலில் அவர் மத்திய அரசு மாநில அரசு செலுத்தும் ஒரு ரூபாய்க்கு 29 பைசா மட்டுமே திருப்பி தருவதாக சொல்லி மோடி அவர்களை" 29 பைசா "என்று அழையுங்கள் என்று தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார். மத்திய அரசு நிதி வழங்காவிட்டால் தாங்களும் உச்ச நீதிமன்றத்தை நாட இருப்பதாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


எனவே மக்கள் பயன்பாட்டுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்ற உதவ வேண்டிய மத்திய அரசு மக்களின் எண்ணங்களை மனதில் கொண்டு மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு நிதியை ஒதுக்கி தங்களுக்கு மக்கள் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும். மத்திய மாநில அரசு மோதல் போக்குகளால் பாதிக்கப்படுவது மக்கள் தான் நிர்வாகம் தான் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்கள் என்று நம்புவோமாக!

- எம்.எஸ்.மூர்த்தி

# உள்ளே...




போதையின் பாதையில் இளைஞர்கள்! வளர்ச்சி பாதைக்கு திரும்புமா நாடு! 7




சென்னைக்கு குடிநீர் பற்றாக்குறை வருமா! 10




ஆனந்தம் தரும் தியானம் 24




இடி இடிப்பது இப்படித்தான்! 38



மனிதனை விட மரங்களை நம்பலாம்! 43



உலகின் ஏழு அதிசயங்கள் 50




# படிப்புக்கு வறுமை தடையல்ல!

## யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி பெற்ற இன்பா!

**பெ**ண்கள் அதிகம் படிப்பது இந்த நாளில் தான். ஒரு காலத்தில் படிப்பதற்கு சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கவில்லை. அப்படி அங்கீகாரம் கிடைத்தாலும் உயர் பதவிகளுக்கு செல்வதற்கு தேவையான அளவுக்கு தேர்வுக்கு தயாராகிற சூழல் பெண்களுக்கு குறைவாகவே அமைந்திருக்கிறது. அதற்குக் காரணம் குடும்ப சூழல் என்பதுதான். அதிகபட்சம் எல்லா குடும்பங்களிலும் பெரும்பாலும் பெண்களை பட்டதாரியாக மட்டுமே ஆக்கி பெருமை கொள்வார்கள். அதற்கே அவர்கள் பொருளாதார ரீதியாக சங்கடப்படுவார்கள். இந்த சூழலில் சாதாரண பீடி சுற்றும் தொழிலாளியின் மகள் மத்திய அரசின் குடிமைப் பணி தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்பது பெருமைக்குரிய ஒன்றாக கருதப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள 95 பணியிடங்களுக்கான குரூப் 1 தேர்வுக்கான முதல்நிலைத் தேர்வு கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து முதன்மை தேர்வுகள், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்றன. இதில் 1,333 ஆண்கள், 780 பெண்கள் என மொத்தம் 2,113 பேர் தேர்வெழுதினர். இதில் 90 பேர் தேர்ச்சி பெற்றனர்.

அப்படி தேர்ச்சி பெற்றவர்களில் ஒருவர், தென்காசி மாவட்டம், செங்கோட்டை அருகில் உள்ள விஸ்வநாதபுரத்தைச் சேர்ந்தமாணவி எஸ். இன்பா. இவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த, ‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெற்றவர் என்பது தெரியவந்துள்ளது. இன்பாவின் தாயார் பீடிச்சுற்றும் தொழிலாளி. இது ‘நான் முதல்வன்’ திட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகவும், இத்தகைய தேர்வுகளில் வெற்றி பெற்று சாதிக்க நினைப்பவர்களுக்கு ஊக்கமாகவும் பார்க்கப்படுகிறது.

இம்முறை குரூப்-1 தேர்வில் வெற்றி பெற்றவர்களில் பலர், மிகவும் ஏழ்மையான



நிலையில் தனது சொந்த முயற்சியில் வீட்டிலிருந்தே படித்து வெற்றி பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிகின்ற மூன்று பெண் ஊழியர்கள், ஒரேநேரத்தில் குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்று அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏறப்படுத்தியுள்ளனர். அதேபோல, தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பீடி சுற்றும் தொழிலாளியின் மகள் எஸ்.இன்பா, குடிமைப் பணிகள் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்.

பொருளாதார வசதி இல்லாததால், வீட்டிலிருந்தே படித்துள்ளார். இவர், ஏற்கனவே இரண்டு முறை ஒன்றிய அரசின்குடிமைப் பணிகள் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை. எனினும், இன்பா விடாமுயற்சியுடன் மூன்றாவது முறையாக தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் அகில இந்திய அளவில் 851வது இடத்தை பெற்றுள்ளார்.

'இன்பா, நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் மாதம் ரூ.7,500 உதவித்தொகை பெற்று இத்தேர்விற்கு படித்து வந்தார். 2023 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வின் முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றதையடுத்து, மாதம் ரூ.25,000 உதவித்தொகை பெற்றார். தமிழ்நாடு அரசின் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் கிடைத்த உதவித்தொகையால் பொருளாதார தேவை

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 09 மே 2024 டைம்ஸ்- 11

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
**கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுகந்தினா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com




பற்றிய கவலையின்றி, இன்பாவால் முழு கவனத்துடன் இத்தேர்விற்காக படித்து வெற்றி பெற முடிந்தது. படிப்புக்கு ஏழ்மை ஒரு தடையில்லை, முயன்றால் படித்து முன்னேறலாம். வெற்றி முகட்டைத் தொடலாம் என்பதை இன்றைய இளைஞர்களுக்கு உணர்த்துவதாக இன்பா வாழ்க்கையும், அவரது விடாமுயற்சியும் வழிகாட்டுகின்றன.

பீடி சுற்றும் ஒரு தொழிலாளியின் மகள் இன்பா விடாமுயற்சியுடன் படித்து, வென்று உயர் அதிகாரியாகப் பொறுப்பேற்கவிருக்கும் செய்தி அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது. மாணவி இன்பாவை மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் நேரில் அழைத்து பூங்கொத்து கொடுத்து பாராட்டியதுடன், தேநீர் விருந்து அளித்துள்ளார். மேலும், இதேபோன்று கிராமப்புற மாணவர்களும் அரசின் பல்வேறு திட்டங்களை பயன்படுத்தி தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் மாணவி இன்பாவுக்கு பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி தொடர்பாக இன்பா ஊடகம் ஒன்றிற்குக் கூறிய போது, “என் அம்மா ஸ்டெல்லா பீடி சுற்றும் தொழிலாளி. குடும்பத்தை நடத்த கூடுதல் பணத்திற்காக அருகில் உள்ள கடையில் பூக்களையும் கட்டி வந்தார். இரண்டு முறை முதல்நிலைத் தேர்வில் தோல்வியடைந்தாலும், என் அம்மா அளித்த ஊக்கமும், என் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும் என்னை தேர்வில் தேர்ச்சி பெறச் செய்தது,” என்றார்.

இன்பா நல்ல பணியில் அமர்ந்து தனது குடும்பத்துக்கும் இந்த நாட்டுக்கும் நற்பணி ஆற்ற மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!

*- சுஜாதா மூர்த்தி*

# போதையின் பாதையில் இளைஞர்கள்!
# வளர்ச்சி பாதைக்கு திரும்புமா நாடு!

சமீப காலமாக பத்திரிகைகளில் போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை பற்றியும் ,போதை பொருட்களால் இளைஞர்களின் எதிர்காலம் பாழாகிப் போனது பற்றியும், போதையில் இளைஞர்கள் நடத்துகின்ற ரகளை, கொலை, வழிப்பறி போன்றவை குறித்து செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சிகளிலும் பார்த்து மனம் வேதனைப்படுகிறோம்.

இது தமிழ்நாட்டில் மட்டும் நடக்கின்ற பிரச்சனை என்று எடுத்துக் கொள்ள முடியாவிட்டாலும் இதுவரை இந்த அளவுக்கு தமிழ்நாட்டில் இருந்ததில்லை என்பதையும் கருத்துக் கொள்ள வேண்டி உள்ளது ஒருவேளை வட இந்தியர்களின் ஆதிக்கம் தமிழ்நாட்டில் அதிகமாகிவிட்டபடியால் கஞ்சா போன்ற போதைப் பொருட்களுக்கு தமிழக இளைஞர்கள் அடிமையாகி விட்டார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

சமீபத்தில் குஜராத் அருகே அரபிக்கடலில் பல கோடி மதிப்பிலான போதைப் பொருள் கடத்தப்படுவதாக வந்த தகவலையடுத்து அந்த வழியாக வந்த பாகிஸ்தான் படகை சுற்றிவளைத்து இந்திய கடலோர காவல்படை, போதைப்பொருள் தடுப்பு பிரிவு, குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவு இணைந்து சோதனை மேற்கொண்டன.





அப்போது படகில் 86 கிலோ போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டன. உடனடியாக அவற்றை பறிமுதல் செய்த அதிகாரிகள் படகில் இருந்த 14 பாகிஸ்தானியர்களையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை போர்பந்தருக்கு அழைத்து வந்த அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் மதிப்பு ரூ.600 கோடி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பாகிஸ்தான் படகில் இருந்து என்ன வகையான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்பதை கடலோர காவல்படை இன்னும் வெளியிடவில்லை.

அண்மைக் காலமாக, தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்களில் போதைப்பொருள் புழக்கம் தொடர்பான செய்திகள் அதிகரித்திருக்கின்றன. கூடவே, போதைப் பழக்கத்தின் விளைவாகஏற்படும் குற்றங்களும் பெருகிக்கொண்டிருக்கின்றன. உண்மையில், போதைப் பழக்கம் அதிகரிப்பு ஓர் உலகளாவிய பிரச்சினை. பல்வேறு சமூக, கலாச்சாரக் காரணங்களால் மாணவர்களும், இளைஞர்களும் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகிறார்கள்.இதில் கஞ்சா (Cannabis) தான் உலகில் அதிகம்




பயன்படுத்தப்படுகிறது. கிட்டத்தட்ட 21.9 கோடிப் பேர் இதைப் பயன்படுத்துகிறார்கள். அடுத்ததாக, ஆம்பெடமைனை (amphetamine) 3.6 கோடிப் பேரும், கோகெய்னை (Cocaine) 2 கோடிப் பேரும், மருத்துவம் சாராத ஓபியாடுகளை (Opioids) 6 கோடிப் பேரும் பயன்படுத்துகிறார்கள்.மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே போதைப் பழக்கம் அதிகரிக்கப் பல்வேறு காரணங்கள் உண்டு. நகர்ப்புறங்களில் குடும்ப அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள், குழந்தைகள் மீதான பெற்றோர்களின் கவனக்குறைவு போன்றவை முக்கியக் காரணங்கள்.

சக மாணவர்கள், சக இளைஞர்களுடன் இணைந்துதான் பொதுவாகப் பலரும் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகிறார்கள். இவற்றை ஆரம்பத்திலேயே பெற்றோர்கள் கவனிக்கத் தவறுகிறார்கள். இது குறித்துப் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு இல்லாததும் ஒரு காரணம்.

பள்ளி, கல்லூரிகளில் உள்ள நிர்வாகம் / ஆசிரியர்களுக்கு மாணவர்கள் மீது உள்ள அக்கறையின்மை இன்னொரு காரணம். குறிப்பாக, பெரும்பாலான தனியார் கல்லூரி நிறுவனங்களில் மாணவர்களின் மதிப்பெண்களில் காட்டப்படும் அக்கறை அவர்களின் நல்லொழுக்கத்திலும், ஒட்டுமொத்த நலனிலும் அதிகம் பிரதிபலிப்பதில்லை.இன்றைய காலகட்டத்தில் பல தனியார் கல்லூரிகளில் விளையாட்டு போன்ற செயல்களுக்குக்கூட முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

இது தவிர, சமூகத்தில் ஏற்படுகின்ற கலாச்சாரச் சீரழிவும் ஒரு முக்கியக் காரணமாக உள்ளது. குறிப்பாக, நுகர்வுக் கலாச்சாரம் மாணவர்களையும், இளைஞர்களையும் தவறாக வழிநடத்துகிறது. சமூகத்தைப் பற்றியோ, சமூகச் செயல்பாடுகளில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்பது பற்றியோ சிந்திக்கத் தூண்டுவதில்லை. சமூகச் செயல்பாடுகளில் பங்கெடுக்கும் மாணவர்களும், இளைஞர்களும் போதை போன்ற தீய பழக்கத்துக்கு அடிமையாக மாட்டார்கள்.

இளைஞர்கள் மற்றும் மாணவர்களைப் பாதுகாக்க வேண்டியது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும். அரசுடன் சேர்ந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள், நிர்வாகத் துறைகள், சமூக ஊடகங்கள், தன்னார்வ நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினரும் முழு ஒத்துழைப்பு செலுத்தினால் மட்டுமே வளர்ச்சி பாதையில் இளைஞர்களை அழைத்துச் செல்ல முடியும்.

# தமிழகத்தில் உதகை, கொடைக்கானல் இ-பாஸ் முறை!

இந்திய சுற்றுலாத்துறை 2023ம் ஆண்டு வெளியிட்ட பட்டியலின்படி, இந்திய அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்து இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்குப் பிடித்தமான மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது.

தற்போது, கோடைக்காலம் என்பதால் வெப்ப அலையில் மக்கள் வாடி வதங்கி வருகின்றனர். பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டு உள்ளது. வெப்பத்திலிருந்து தப்பிப்பதற்காக மக்கள் மலைப் பிரதேசங்களை நோக்கிப் படையெடுத்து வருகின்றனர்.

உதகை, கொடைக்கானல் போன்ற சுற்றுலாத் தலங்களில் கோடை விடுமுறை காலத்தில் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் குவிவதால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறி, கொரோனா காலத்தைப் போல இ-பாஸ் நடைமுறையை பின்பற்ற சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

நீதிமன்றம் இ-பாஸ் நடைமுறையை பின்பற்ற பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகத்திடம் சுற்றுலாவுக்காக வரும் மக்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் அளிக்கப்பட்டு இருக்கின்றன.

சுற்றுலாத்துறை, காவல்துறை, வனத்துறை, மாவட்ட நிர்வாகம் இணைந்து இ-பாஸ் நடைமுறையை எப்படி முறைப்படுத்தி செயல்படுத்தலாம் என்பது குறித்து பேசப்பட்டு இருக்கிறது.

இ-பாஸ் பதிவு செய்யும் இணையதள பக்கம் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மே 7ஆம் தேதி முதல் இ-பாஸ் பதிவு செய்த வாகனங்கள் மட்டுமே கொடைக்கானலுக்குள் அனுமதிக்கப்படும்.

அதற்கு முன்னதாகவே இந்த இணையதள பக்கம் பயன்பாட்டுக்கு வரும். இதில் முன்பதிவு செய்துவிட்டு கொடைக்கானலுக்கு சென்று மக்கள் சுற்றிப் பார்க்கலாம்.

ஒருநாளைக்கு எத்தனை வாகனங்கள் செல்லலாம், அரசுப்பேருந்துகளில் செல்பவர்களுக்கு அனுமதி எப்படி உள்ளிட்ட அனைத்து விஷயங்களும் விரிவாக விவாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஓரிரு நாட்களில் அதற்கான அறிவிப்புகள் முறையாக அறிவிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை நம்பி ஹோட்டல்கள், தங்கும், விடுதிகள் சிறு வியாபாரிகள், சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் வாகன ஓட்டுநர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் என அனைத்துத் தரப்பு தொழிலும் இ-பாஸ் நடைமுறையால் பாதிக்கும் சூழல் ஏற்படும்.




கொடைக்கானலுக்கு ஒரு நாளைக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு மட்டுமே இ-பாஸ் வழங்கப்படும். இதனால் குறைந்த அளவிலான சுற்றுலாப் பயணிகள் மட்டுமே கொடைக்கானலுக்கு வருவார்கள். இவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு செல்வதால், சீசனை நம்பி பல ஆயிரக்கணக்கில் முதலீடு செய்து தொழில் செய்யும் சிறு வணிகர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

எனவே, இதனை நடைமுறைப்படுத்த அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

# சென்னைக்கு குடிநீர் பற்றாக்குறை வருமா!



இந்தியாவின் ஆறாவது பெரிய நகரமான சென்னை மாநகரம், தமிழ்நாட்டிலேயே அதிக மக்கள் அடர்த்தி கொண்டதாகும். சென்னையில் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 26,000 முதல் 27,000 பேர் வரை வசிப்பதாக சென்னை மாநகராட்சி தரவுகள் கூறுகிறது. இது லண்டன் மாநகரத்தின் சராசரி மக்கள் அடர்த்தியை விட ஐந்து மடங்கு அதிகம்.

இந்நிலையில் சென்னையின் குடிநீர் தேவை தற்போது ஒரு நாளுக்கு 1,070 மில்லியன் லிட்டராக உள்ளது. இதில் 1,040 மில்லியன் லிட்டர் நீரை சென்னை குடிநீர் வாரியம் வழங்குவதாகக் கூறுகிறது. சென்னையின் குடிநீர் தேவைக்கும், குடிநீர் வழங்கலுக்கும் இடையிலான வித்தியாசம் வரும் நாட்களில் அதிகரிக்கப் போகிறது என்று அண்ணா பல்கலை கழகம் மற்றும் ஐ.ஐ.டி மெட்ராஸ் இணைந்து நடத்திய ஆய்வு கூறுகிறது.

இந்த ஆய்வை நடத்திய சென்னை ஐ.ஐ.டியின் பகுதி நேர பேராசிரியர் முனைவர் எல்.இளங்கோ தனியார் ஊடகத்தில் பேசுகையில், "சென்னையில் 2030ஆம் ஆண்டில் ஒரு நாளுக்கு 2,365 மில்லியன் லிட்டர் நீர் தேவைப்படும். அப்போது ஒரு நாளுக்கு 466 மில்லியன் லிட்டர் நீர் குறைபாடு இருக்கும்.

அதேபோன்று சென்னையில் 2040ஆம் ஆண்டு ஒரு நாளுக்கு 717.5 மில்லியன் லிட்டர் குறைவாக இருக்கும், மேலும் 2050ஆம் ஆண்டு 962 மில்லியன் லிட்டர் நீர் ஒரு நாளுக்கு தட்டுப்பாடாக இருக்கும். சென்னையின் சராசரி மழை அளவு, நிலத்தடி நீர் என பல்வேறு அளவுகோல்களை கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது," என்றார்.

குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, சென்னைக்குக் கை கொடுக்கும் 'ஆபத்பாந்தவன்' கடல் நீரை குடிநீராக்கும் திட்டமாகும்.

சென்னையில் கடல்நீரை குடிநீராக்கும் ஆலை முதன் முதலாக 2010ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. சென்னையின் வடக்கில் மீஞ்சூரில் அமைக்கப்பட்ட அந்த ஆலை ஒரு நாளுக்கு 100 மில்லியன் லிட்டர் நீரை அப்பகுதியில் உள்ள 10 லட்சம் மக்களுக்கு வழங்கி வருகிறது.

சென்னையின் தென் திசையில் நெம்மேலியில் அமைக்கப்பட்டுள்ள ஆலை 110 மில்லியன் லிட்டர் ஒரு நாளுக்கு வழங்கக் கூடியது.

நெம்மேலியில் ரூ.1,516 கோடி மதிப்பீட்டில், 150 மில்லியன் லிட்டர் தரக்கூடிய மற்றொரு ஆலை கடந்த மார்ச் மாதம் திறக்கப்பட்டது.

நான்காவது ஆலை, சென்னையிலிருந்து புதுச்சேரி வரை வங்கக் கடலை ஒட்டிய கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரூரில் ரூ.4,276 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டின் இறுதிக்குள் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்ப்பார்க்கப்படும் இந்த ஆலை ஒரு நாளுக்கு 450 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கும் திறன் கொண்டது. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரிய ஆலையான இதிலிருந்து சென்னையின் தென் பகுதியில் உள்ள 22 லட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்க முடியும் என்று அரசு கூறுகிறது.

இதன் மூலம் இந்தியாவிலேயே 750 மில்லியன் லிட்டர் குடிநீரை கடல் நீரிலிருந்து பெறக் கூடிய நகரமாக சென்னை இருக்கும் என தமிழக அரசு கூறுகிறது.

இந்த ஆண்டும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாது என்று அதிகாரிகள் நம்பிக்கையுடன் கூறுவதற்கு இந்த ஆலைகளே முக்கிய காரணம்.

சென்னையின் ஏரிகளில் 50%க்கும் குறைவான நீர் இருப்பு இருந்தாலும், மார்ச் மாதத்துக்கு முன் எவ்வளவு தண்ணீர் வழங்கப்பட்டதோ, அதே அளவு நீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. சென்னையின் ஏரிகளிலிருந்து ஒரு நாளுக்கு 42 மில்லியன் கனஅடி நீர் சென்னையின் தேவைக்காக எடுக்கப்படுகிறது. இப்போது உள்ள நீர் இருப்பைக் கொண்டு, கிட்டத்தட்ட 150 நாட்களுக்கு நீர் வழங்க முடியும். கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகளிலிருந்து 360 மில்லியன் லிட்டர் ஒரு நாளுக்கு பெறமுடியும். தற்போது 250 மில்லியன் லிட்டர் பெறப்படுகிறது. அடுத்த சில நாட்களில் இந்த அளவு அதிகரிக்கப்படும். எனவே செப்டம்பர் முதல் வாரம் வரை சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை," என்று அதிகார வட்டத்தில் சொல்லப்படுகிறது. ஒரு பக்கம் வெள்ளம் ஏகப்பட்ட பாதிப்பை ஏற்படுத்திய சூழலில் குடிநீர் பற்றாக்குறையும் சென்னை மக்களை கவலையடையச் செய்துள்ளது.


# பாராளுமன்றத் தேர்தல் : ஒரு பார்வை

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவைக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் வெற்றி பெறுபவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இந்த காலகட்டத்தில் பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சர்கள் குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், உறுப்பினர்களின் பதவிக்காலமும் முடிவுக்கு வரும்.

நாடு சுதந்திரம் அடைந்தபிறகு முதல் பொதுத்தேர்தல் 1951-52ல் நடத்தப்பட்டது. கடைசியாக 2019ல் 17வது மக்களவைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. தற்போது 18வது மக்களவைக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க ஏப்ரல் 19ம் தேதி தொடங்கி 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது.

இதுவரை நடைபெற்ற 17 பொதுத் தேர்தல்களில் 10 முறை காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் ஆட்சி அதிகாரத்தில் இருந்துள்ளது. பா.ஜ.க. ஐந்து முறை வெற்றி பெற்றுள்ளது. தேர்தல் முடிவுகள் தொடர்பான சுருக்கமான விவரத்தை பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 1951-52 | காங்கிரஸ் | பிரதமர் ஜவகர்லால் நேரு |
| 1957 | | ஜவகர்லால் நேரு |
| 1962 | | நேரு, லால் பகதூர் சாஸ்திரி |
| 1967 | | இந்திரா காந்தி |
| 1971 | | இந்திரா காந்தி |
| 1977 | ஜனதா கட்சி | மொரார்ஜி தேசாய் |
| 1980 | | இந்திரா காந்தி |
| 1984 | | ராஜீவ் காந்தி |
| 1989 | ஜனதா தளம் | வி.பி.சிங் |
| 1991 | காங்கிரஸ் | பி.வி.நரசிம்ம ராவ் |
| 1996 | பா.ஜ.க. | வாஜ்பாய் |
| 1998 | | வாஜ்பாய் |
| 1999 | | வாஜ்பாய் |
| 2004 | காங்கிரஸ் | மன்மோகன் சிங் |
| 2009 | | மன்மோகன் சிங் |
| 2014 | பா.ஜ.க. | நரேந்திர மோடி |
| 2019 | | நரேந்திர மோடி. |






அடுத்த மாதம் முதல் வாரத்தில் புதிய பிரதமர் யார் என்று தெரிந்துவிடும்.



# எளிமையாகவும், இனிமையாகவும் இலங்கைக்கு பயணம் செய்யலாம்!

**த**மிழ்நாட்டிலிருந்து இலங்கை செல்வதற்கு ஏராளமான விமான வசதிகள் உள்ளன. அதிலும் குறைவான பயண செலவிலேயே இலங்கை சென்று வர முடியும்.

சென்னையைச் சேர்ந்த பிரபல பயண நிறுவனத்தின் நிறுவனர் , "தமிழ்நாட்டுக்கு மிகவும் அருகில் இருப்பதாலும் விமான கட்டணம் குறைவாக இருப்பதாலும் இங்குள்ள மக்கள் சுற்றுலாவுக்காக இலங்கையை அதிகம் தேர்ந்தெடுக்கின்றனர்.

இலங்கை செல்வதற்கான நடைமுறை எளிதானது. விசா தேவையில்லை. இ-விசாவை ஆன்லைன் மூலமாகவே பெறலாம். ஒருவர் இலங்கை சென்றுவர 15,000-18,000 ரூபாய் இருந்தாலே போதுமானது," என்கிறார்.

விமானப் போக்குவரத்து மட்டுமின்றி, நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து அவ்வப்போது பயணப்படகு ஒன்றையும் அரசு இயக்கி வருவதாக அவர் தெரிவித்தார். மேலும், சென்னையிலிருந்து தனியார் கப்பல் மூலமாகவும் ஜூன் மாதத்தில் இலங்கைக்கு பயணிக்கலாம், கடல்வழிப் போக்குவரத்து எப்போதும் இருக்காது என்பதால், விமானப் பயணமே இலங்கை செல்ல ஏற்றது என்றும் அவர் பரிந்துரைக்கிறார்.

எந்தவொரு வெளிநாட்டுக்குச் செல்லும்போதும் இந்திய ரூபாயை அந்த நாட்டுப் பணமாகவோ அல்லது அமெரிக்க டாலர்களாகவோ மாற்றினால்தான் நாம் அதைச் செலவுகளுக்குப் பயன்படுத்த முடியும். ஆனால், இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கென இதிலும் இலங்கை அரசு சலுகை வழங்கியிருக்கிறது.

அதாவது, இந்திய ரூபாயை அப்படியே யூபிஐ மூலமாக இலங்கையில் நாம் பயன்படுத்த முடியும். அதற்கென பெரும்பாலான இடங்களில் க்யூஆர் கோடு வசதியும் செய்யப்பட்டுள்ளது. அதை நாம் ஸ்கேன் செய்தால், இந்திய ரூபாய் மதிப்பு, இலங்கை ரூபாய் மதிப்புக்கு மாற்றி அப்படியே பணத்தைச் செலுத்திவிடலாம்.

இதுதொடர்பாக சுற்றுலாத்துறை அமைச்சக அலுவலர்"இது இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கென இலங்கை அரசு செய்துள்ள சலுகை. இதற்கென பல்வேறு இடங்களில் க்யூஆர் கோடு வசதி செய்யப்பட்டுள்ளது. என்று தெரிவித்தார்.

இலங்கையில் தங்குவதற்கு ஒரு நாளைக்கு ரூ.3,000 3,500 செலவிலேயே நல்ல ஹோட்டல்கள் கிடைக்கும் என்றும், "பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மெல்ல மீண்டு வருவதால், இன்னும் சில இடங்களில் சுற்றுலா வசதிகளுக்கான சேவைகள், பொருட்களின் விலை அதிகமாகத்தான் இருக்கிறது. இந்திய ரூபாயின் மதிப்பு இலங்கை பணத்தைவிட அதிகம் என்பதால், அதிக செலவு இருக்காது," என்று சுற்றுலா சென்று வந்த ஒருவர் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.



இலங்கையில் நிச்சயம் காண வேண்டிய மலைப்பிரதேசங்களும் உண்டு. தேயிலைத் தோட்டங்களால் நிரம்பிய எல்லா, நுவரெலியா போன்ற மலைப் பகுதிகளின் அழகை அவசியம் காண வேண்டும்.

இலங்கையின் கலைப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படும் சிகிரியா கோட்டை, தம்புள்ளை குகை கோவில், அனுராதபுரம் போன்றவற்றுக்கு இலங்கையின் கலை அழகை ரசிக்கச் செல்லலாம்.

# கொரோனாவில் போட்ட ஊசி இப்போது பக்கவிளைவு ஏற்படுத்துமா?

**ம**றக்க முடியுமா?

2019 ல் தொடங்கிய கொரோனா என்னும் பெரும் தொற்றால் உலகம் மிகப்பெரிய உயிர் சேதத்தை சந்தித்ததை மறப்பதற்கு இல்லை

2019 ஆம் ஆண்டு சீனாவின் வூஹான் மாநிலத்தில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் அதற்கு அடுத்ததாக உலகம் முழுவதும் பரவியது. இந்தியாவில் அடுத்த இரு ஆண்டுகளில் அதன் பாதிப்பு எண்ணிப் பார்க்க முடியாத அளவு இருந்தது.

லட்சக்கணக்கில் உயிரிழப்பு இருந்த நிலையில், இந்தியாவில் கொரோனா தடுப்பூசி திட்டம் தீவிர படுத்தப்பட்டது. மருத்துவ கட்டமைப்புகள் மத்திய மாநில அரசுகளின் தீவிர முயற்சி காரணமாக கொரோனா கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.



கொரோனா காலத்தில் இளைஞர்களின் திடீர் மரணம் மாரடைப்பு போன்றவற்றை தொடர்பு படுத்தி அவை தடுப்பூசியால் தான் நிகழ்ந்தது என சமூக ஊடகங்களில் கூறப்பட்டது. இளம் வயது மரணங்கள் அதிகரித்த நிலையில் கொரோனா தொற்றுக்கு எதிராக மத்திய அரசு மக்களுக்கு அளித்த தடுப்பூசிகளால் சாதாரண அறிகுறிகளை தவிர தீவிரமான பக்க விளைவுகள் ஏற்படுவது உண்மைதான் என ஐசிஎம்ஆர் ஒப்புக்கொண்டது.

மேலும் தடுப்பூசிகள் பக்கவிளைவை ஏற்படுத்தின என மத்திய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு அமைப்பான சிடிஎஸ்சிஓ ஒப்புக்கொண்டதாக கடந்த சில மாதகளுக்கு முன் சில ஊடகங்களில் செய்தி வெளியானது. இந்நிலையில் இதுகுறித்து அஸ்ட்ராஜெனகா விளக்கம் அளித்துள்ளது.கோவிஷீல்டு கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் சிலருக்கு ரத்த உறைவு மற்றும் ரத்த பிளேட்லெட் குறைவு பிரச்சனை ஏற்படலாம் என அஸ்ட்ராஜெனகா நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் கோவிஷீல்டு போட்டுக் கொண்ட மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இந்த நிலையில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த தடுப்பூசியால் பக்க விளைவுகள் ஏற்படுமா என்ற அச்சம் மக்களிடையே எழுந்திருக்கும் நிலையில் இது குறித்த விளக்கத்தை மருத்துவர்கள் தெரிவித்து இருக்கின்றனர். அலோபதி மருத்துவத்தை பொறுத்தவரை பலகட்ட சோதனைகளுக்கு பிறகு அது நோயாளிகளுக்கு வழங்கப்படுகிறது. குறிப்பாக கொரோனா காலத்தில் தயாரிக்கப்பட்ட அனைத்து தடுப்பூசிகளும் நீண்ட சோதனை மற்றும் தன்னார்வலர்களுக்கு செலுத்தப்பட்டு அதன் பிறகு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

ஏற்கனவே உடல்நிலை பாதிப்பு இருந்தவர்கள் குறிப்பாக இதய நோய் உள்ளிட்ட பிரச்சனைகள் இருந்தவர்கள் தடுப்பூசி போட்டதற்கு பிறகு மரணம் அடைந்ததும், அதற்கு பிறகாக இளம் வயது மரணங்கள் அதிகரித்ததும் தடுப்பூசியே காரணம் என சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை அப்படி அல்ல. அலோபதி மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்றாலும் அது குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் தான். தற்போது கோவிஷீல்டு தடுப்பூசி 25 லட்சத்தில் ஒருவருக்கு மட்டுமே ரத்த உறைவு போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்துவதாக அஸ்ட்ராஜெனகா கூறி இருக்கிறது. அப்படி பார்க்கும்போது தடுப்பூசி போட்டுக் கொண்ட நபர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் தான் இந்த பக்க விளைவுகள் ஏற்பட்டிருக்கிறது.

10 முதல் 15 வழக்குகள் மட்டுமே இங்கிலாந்தில் பதிவாகி இருக்கிறது. அதே நேரத்தில் தற்போது தடுப்பூசி போட்டுக் கொண்டு மூன்று வருடங்களுக்கு மேல் ஆகி இருக்கும் நிலையில் தடுப்பூசிகள் இனியும் பக்க விளைவு ஏற்படுத்தும் என மக்கள் அச்சப்படத் தேவையில்லை. பொதுவாக தடுப்பூசிகள் உடலில் குறிப்பிட்ட ஆண்டிஜென்களை உருவாக்கிவிட்டு உடலில் இருந்து வெளியேறிவிடும். அதாவது எதிர்ப்பு ஆற்றலை உடலில் உருவாக்கி விட்டு மருந்துகள் செயலிழந்து விடும். எனவே இனிய தடுப்பூசியால் பக்கவிளைவு ஏற்படும் என மக்கள் அஞ்சத் தேவையில்லை' என விளக்கம் அளித்துள்ளனர்.

வளர்ந்துவிட்ட தொழில் நுட்ப இணையதளங்களால் இந்த செய்தியை வேகமாக பரப்பி பொதுமக்களை அச்சத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும். அப்படி செய்ய அரசுகள் தவறும் பட்சத்தில் வதந்திகளுக்கு கால் முளைத்து அது ஊர் சுற்று கிளம்பி பெரும்பாலான மக்களை மனரீதியாக குழப்பி உடல் ரீதியாக பாதிப்படையச் செய்யும். அரசு ஆவண செய்யுமா?

# வாழ்க்கையை புரிந்து வாழ்வோம்!

**நீ**ங்கள் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், எவ்வளவு சம்பாதித்தாலும், நம் வயிறுக்கு எவ்வளவு சாப்பிட முடியுமோ, அவ்வளவு தான் சாப்பிட முடியும். அதன் கொள்ளளவு அப்படித் தான்.

நீங்கள் எவ்வளவு ஓடியும், வாழ்க்கை எதற்காக வாழ்கின்றோம் என்று அறியாமல் மரணிக்கின்றோமே அதை விடக் கொடுமை ஒன்று இருக்க முடியாது.

நாம் எவ்வளவு பெரிய வசதி படைத்தவராக இருந்தாலும், நாம் உண்பதும், உடுத்துவதும் மட்டும் தான் நாம்.. சம்பாதித்ததில் அனுபவித்தது. மற்றவை அடுத்தவர்களுக்குத் தான். நாம் எல்லோரும் ஏதோ காரணமாகத் தான் உழைக்கிறோம் ; ஓடியாடி சம்பாதிக்கிறோம். ஆனால், அந்தக் காரணம் பிற்காலத்தில் வெற்றுக் காரணம் ஆகிவிடுகிறது.

நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும்.. பிற்காலத்தில் உட்கார்ந்து சாப்பிடலாம். நம் பிள்ளைகள் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். என்றெல்லாம் எண்ணி உழைக்கிறோம்.

சம்பாதித்தது போதும் ஓய்வெடுக்கலாம் என்று எண்ணுகிற போது உடல் நலம் கெட்டு இருக்கும்.

பிள்ளைகள் வசதி வாய்ப்புகளைப் பெற்று விட்டு ஒதுங்கி விடுவார்கள்.

வேறு சிலர் தேவைக்கு அதிகமாக ஆசைப்பட்டு அதற்காக உழைப்பார்கள்.

அம்முயற்சிகளில் தோல்வியுற்று வாழ்க்கையைத் தொலைப்பார்கள். நீங்கள் சற்று நிதானமாக உட்கார்ந்து, நன்றாக மூச்சை இழுத்து விட்டு, சுவையாகப் போட்ட இஞ்சி டீயை ஒரு மடக்கு அருந்திக் கொண்டு, வாழ்வின் யதார்த்தத்தை நினைத்துப் பாருங்கள், எத்தனையோ கோடி மக்கள் வந்து போன இந்த உலகத்திற்கு நாமும் வந்து இருக்கின்றோம். ஆனால் நமக்கு முன்பு வந்தவர்களை நினைத்துப் பாருங்கள்?

அவர்கள் வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து, உணர்ந்து, வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவித்து , நிம்மதியாகக் கண்மூடிப் போய் விட்டார்கள். ஆனால் நம்மால் ஒவ்வொரு இரவும் நிம்மதியாக உறங்கக் கூட முடியவில்லையே, ஏன்?

வாழ்க்கை (life style) அப்படியே மாறி விட்டது. இதற்குக் காரணம் இது இன்றைய சூழ்ச்சியாளர்கள் தான் என்பது தான் உண்மை.

ஆனால் நாம் தான் இன்னும் உணர்ந்த பாடு இல்லை அதை உணரும் போது நாம் இங்கே இருக்கப் போவது இல்லை. வாழும் போதே முழுமையான கவனத்துடன் நமது வாழ்க்கையைத் துவங்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும், ஏன் ஒவ்வொரு நிமிடத்தையும், நாம் என்ன செய்யப் போகிறோம் என்று தீர்மானிப்பது நீங்கள் தான். விழிப்புணர்வோடு வாழ்க்கையை அணுகுங்கள்.


நன்றாகச் சிந்தித்து, வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து, ஆனந்தமாக வாழ்வதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்.

பொறுமையைவிட மேலான தவமுமில்லை.திருப்தியை விட மேலான இன்பமுமில்லை.இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை.மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை...! தோல்விகள் சூழ்ந்தாலும். இருளை விளக்கும் கதிரவன் போல அதனை நீக்கி அடுத்தடுத்த வெற்றி படியில் கால் அடி எடுத்து வையுங்கள். முடியும் வரை அல்ல, உங்கள் இலக்கினை அடையும் வரை. இந்த விடியல் உங்கள் வாழ்விலும் விடியட்டும்...!

முக மலர்ச்சியோடும், நம்பிக்கையுடனும் எழுந்து புதிய நாளை துவங்க இறைவன் அருள் புரியட்டும்...! வாழ்க்கையை புரிந்து வாழ்வோம்!



# உள்ளம் ஒன்றி மகிழ்ந்து இருப்போம்!



**ஆ**னந்த வாழ்க்கை. அன்பையும் மரியாதையையும் தயங்காமல் ஒவ்வொருவருக்கும் கொடுப்பவன் இந்த உலகத்தில் எதையும் சாதித்து விடுவான்.

பந்தயக் குதிரை ஓடும் போது அருகிலுள்ள புல்லையோ, கொள்ளையோ பார்ப்பதில்லை.. ஏனெனில் அது தன் வெற்றி இலக்கை மட்டுமே மனதில் கொண்டு ஓடுகிறது...

நிஜமானது ஏமாற்றாது. ஏமாற்றுவது நிஜமானதல்ல. "அன்பு" சந்தோஷம் என்பது யாதெனில் வண்ணத்துப்பூச்சி மாதிரி. அதை நாம துரத்தினா ஓடி ஒளிஞ்சிக்கும். அதை கண்டுக்காம விட்டுட்டா அதுவா வந்து நம்ம கையில் அமரும்.

அற்புதங்கள் அது நம்புபவர்களுடைய நம்பிக்கையின் அளவைப்பொறுத்தே நிகழ்கிறது." இதை இன்னும் விளக்கமாகப் பார்க்கலாம். இப்பிரபஞ்ச இயக்கமே அதிர்வுகளால் தான் நடக்கிறது என்பதை அனைவரும் அறிவோம்.

ஆனால், அந்த அதிர்வுகளைப் பயன்படுத்தி நம்மால் வெற்றிபெற முடியுமா, அல்லது அந்த அதிர்வுகளை எப்படி நாம் பயன்படுத்த வேண்டும், நம்மால் அது முடியுமா , என்பது போன்ற கேள்விகளுக்கான பதில்கள் தான் நமக்குத் தெரியாமலேயே உள்ளது.

நமக்குத் தெரியவில்லை என்பதற்காக அந்த அதிர்வுகள் நம் வாழ்க்கையில் வேலை செய்யாமலா இருக்கும்.

நம்முடைய அதிர்வுகள் எப்படி உள்ளதோ அப்படியே தான் இதுவரை நம் வாழ்க்கையும் நகர்ந்து வந்துள்ளது. இனியும் நம் அதிர்வுகளுக்கு ஏற்றபடியே தான் நம் வாழ்க்கையும் அமைய உள்ளது.

நம்முடைய அதிர்வுகள் அபரிமிதமாக இருந்தால் நம்முடைய வாழ்க்கையும் அபரிமிதமாகவே மாறிவிடும். அந்த அதிர்வுகள் நம் வாழ்க்கையில் எப்படி வேலை செய்கிறது என்பதை அடுத்ததாகப் புரிந்துகொள்வோம்.

நமது ஆழ்மனம் இருக்கும் பொழுது நமது எண்ணங்கள் அல்லது உணர்வுகள் அபரிமிதமாக இருக்கும் எனில் நம் வாழ்க்கையும் அபரிமிதமாகவே இருக்கும் என்று பலரும் நிரூபித்து உள்ளனர்.

எனவே, நமது எண்ணங்கள் மற்றும் நமது உணர்வுகளை சரியாகக் கவனிக்க, புரிந்துகொள்ள மற்றும் அவற்றை சரியாகக் கையாளக் கற்றுக்கொண்டால் மட்டுமே நம்மால் அபரிமிதமாக வாழ முடியும் என்கிற நம்பிக்கை நமக்கே தோன்றும்.

நம்மால் முடியும் என்பதை நாம் முழுமையாக நம்பினில் நம் வாழ்க்கையில் அற்புதங்கள் தானாகவே நிகழத் தொடங்கும்.

நம்மால் நிச்சயமாக அபரிமிதமான வாழ்க்கையை வாழ முடியும். அந்த கணத்தில் இருந்து நம் வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்வதை கண்டு நாமே வியப்படைவோம்.

ஏனென்றால், அற்புதங்கள் தானாக நிகழ்வதில்லை. அது நம் நம்பிக்கையின் அளவைப் பொறுத்தே நிகழ்கிறது. நமக்கு சில பதில்கள் தெரிந்து இருந்தாலும், புரிதல் இல்லாதவர்கள் முன் மௌனமாக இருப்பதே நம் உயரிய பண்பாகும்.

கரை சேர்க்கும்கப்பலுக்குத் துணையாவோம் துடுப்பெனவே,ஒருவருக்கொருவர் அனைவருமே நாம் கொடுத்து வாங்கும் கொள்கையுடன், நல்லுறவு கொண்டிருப்போம், உள்ளம் ஒன்றி மகிழ்ந்திருப்போம்.

எளிமை என்பது எதன் மீதும் ஏக்கம் கொள்ளாதிருப்பது அல்ல, எது இருக்கிறதோ,அதனை அந்த நேரத்தில் ஏற்றுக் கொண்டு ஆனந்தமாய் வாழ்வதே...!

# நேர மேலாண்மை எனும் கலை

**வா**ழ்க்கையில் இரண்டே இரண்டு விஷயங்களை கடைபிடித்தால் வெற்றி நிச்சயம்ங்க.

ஒன்னு...வெற்றியைத் தேடி ஓடணும்...

இரண்டு...தோல்வியை மனதில் இருந்து ஓட்டணும்.

எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும், எவ்வளவு நேரத்தில் அதை செய்து முடிக்க வேண்டும் என்கிற சூட்சுமம்தான் நேர மேலாண்மை.

செய்கிற பணியிலேயே முழுமையாக திளைத்திருப்பவர்கள் மூன்று நிமிடங்களில் முடிய வேண்டியதை முக்கால் நிமிடத்தில் செய்து விடுவார்கள்.

நாய் எப்போதுமே சுற்றிக் கொண்டு இருப்பதற்கு காரணம், கண்டதிலும் வாய் வைப்பதுதான். முனைப்பு என்பதை வேட்டையாடும்போது பல்லியிடம் காணலாம். ஒவ்வொரு அடியையும் கவனமாக முன் வைத்து, சிறு சலனத்தைக்கூட ஏற்படுத்தாமல், முன்னேறி பூச்சியினை விழுங்க எந்த பள்ளியிலும் பல்லிக்கு பாடம் கற்றுத் தரப்படவில்லை.

எழுத்தில் தீவிரம், முழுமையாய் கவனம், அதன் மையத்தில் ஆர்வம் என்கிற கலவையுடன் செயலை மேற்கொள்பவர்கள், மேன்மை அடைவார்கள்.

சாப்பிடும்போது உணவே உலகம், படிக்கும்போது புத்தகமே வேதம், விளையாடும்போது பந்தே உலக உருண்டை, குளிக்கும்போது தண்ணீரே அபிஷேகம் என எந்த நேரத்தில் எது செய்கிறோமோ அந்தச் செயலில் முழுமையாக ஐக்கியமாகிற மனப்பான்மையே நல்ல நேர மேலாண்மைக்கு இலக்கணம்.

காலையில் எழவேண்டியபோது எழுந்தால், நேரம் போதவில்லை என புலம்ப வேண்டியதில்லை.

பறவைகள் பாடலாலும், தேனீக்கள் ரீங்காரத்தாலும், பட்டாம்பூச்சிகள் சிறகசைப்பாலும், வண்டுகள் இன்னிசையாலும் விடியலை வரவேற்கும்போது, மனிதன் மட்டுமே படுக்கையில் புரண்டு, பொழுது புலரும்போது புலம்பித் தீர்க்கிறான்.

படிக்கிற நேரத்தில் படிப்பு, பல் துலக்கும் பொழுதில் பல் துலக்குதல், விளையாடும்போது விளையாட்டு என வகைப்படுத்தி கொள்கிறவன் வாழ்வு, முன்னேற்றத்தை நோக்கி ஓடுகிற வாய்க்காலின் நீராக வளர்கிறது.

அவசரத்தில் உண்டால் உணவும் விஷம். ரசித்துக் குளித்தால் கொப்பரை நீரே குற்றாலமாகும்.

சுற்றுலா போகிற இடத்தில் பாடத்தை பற்றி சிந்திக்கிறவர்கள், இரண்டையும் தவறவிடும் இருண்ட பிரதேசத்தின் பிரஜைகள். சோம்பலில் சுகம் காண்கிறவர்களுக்கு ஓராண்டு கூட ஒரு மாதத்தின் அடர்த்தியையே பெற்றிருக்கும். சுறுசுறுப்புள்ளவர்களுக்கு ஒரு வாரம், ஒரு மாதத்தின் பலனை தரும்.



இன்று என்ன செய்ய வேண்டும் என குறித்துக் கொண்டும், ஒரே மாதிரியான பணிகளை தொகுத்துக்கொண்டும், செய்பவற்றை திருப்தியுடன் செய்து கொண்டும் நாட்களை திட்டமிடுபவர்களுக்கு அனைத்து நாளும் திருநாளே அனைத்து நேரமும் நல்லநேரமே.

நொடிகளை வீணடிப்பவர்கள் நொடிந்து போவார்கள். அவற்றை பயன்படுத்துபவர்கள் கோடீஸ்வரர்களா ஆவார்கள்! வாழ்க்கையில் சில மனிதர்களிடம் கேள்வியையும். சில மனிதர்களிடம் பதில்களையும் எதிர்பார்க்காமல் இருப்பது மிகவும் நல்லது. சில கனவுகள் நாம் உயரும் வரை நம்மை உறங்க விடுவதில்லை சில துரோகங்கள் நம்மை நிம்மதியாக வாழ விடுவதில்லை.

வாழ்க்கை என்பது நமக்கு திணிக்கப்பட்ட பாடம் தான் அதற்காக அதை வெறுத்துவிடாதே விரும்பி படித்து பார் ஒவ்வொரு பக்கமும் சுவாரஸ்யம்தான்.

உங்கள் வாழ்க்கை ஒரு நெடுங்கதைப் புத்தகம். அதை பலர் விரும்பி வாங்கி படித்து பயனுறும் வகையில் எழுதுங்கள்.

– ஏ.கே.முருகானந்தம்

# பிள்ளைகளை கல்லூரியில் சேர்க்க போகிறீர்களா!

2024 ஆண்டுக்கான +2 தேர்வு முடிவுகளை எதிர்நோக்கி காத்திருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு சில ஆலோசனைகள்!

இந்த 2024-25 கல்வியாண்டில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் சட்டக் கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க வேண்டும் என்று உள்ளவர்கள் கீழ்கண்டவற்றை முதலில் சரிசெய்து வைத்து கொள்வது கடைசி நேர அலைச்சலையும் நேரத்தையும் மிச்சப்படுத்தும்.

மாணவர்களின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ 10 ம், ஸ்டாம்ப் சைஸ் போட்டோ 4 ம் எடுத்து வைத்துக் கொள்ளவும். மேலும் அவற்றை டிஜிட்டல் வடிவிலும் வாங்கி வைத்துக்கொள்ளவும்.

மாணவர்கள் பெயரில் ஏதேனும் ஓர் தேசிய மயமாக்கபட்ட வங்கியில் [Nationalized bank] சேமிப்பு கணக்கு ஒன்று துவக்கி வைத்துகொள்ளவும், வங்கி கணக்கு துவங்க பான் கார்டு றிகிழி CARD இல்லாதவர்கள் விடுமுறையில் விண்ணப்பித்து எடுத்துக் கொள்ளவும்.



பிறப்பு சான்றிதழ் (Birth certificate) ஒரிஜினல் இல்லாதவர்கள் பஞ்சாயத் போர்டு /நகராட்சி/ மாநகராட்சி ஏதேனும் ஒன்றில் விண்ணப்பித்து புதிய பிறப்பு சான்றிதழ் வாங்கி வைத்து கொள்வது நல்லது.

சாதி சான்றிதழ் (Community certificate) இல்லாதவர்களும் / ஒரிஜினல் தங்கள் கைவசம் இல்லாதவர்ககளும் இது சமயம் புதியது ஒன்று வாங்கி வைத்து கொள்ளவும். இச்சான்று தற்போது QR code-உடன் கூடிய டிஜிட்டல்/பிடிஃஎப் வடிவில் கொடுக்கப்படுகிறது.

இந்த சான்றிதழ் கல்லூரியில் அரசு இடஒதுக்கீட்டில் இடம் கிடைக்க தேவை. மேலும் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இது தேவை.

பிறப்பிட சான்றிதழ் (Nativity certificate) இல்லாதவர்கள் புதியது ஒன்று வாங்கி வைத்து கொள்ளவும். இச்சான்று தற்போது QR codeஉடன் கூடிய digital வடிவில் கொடுக்கப்படுகிறது.

இந்த சான்றிதழ் நீங்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர் தான் என்பதை உறுதிபடுத்தி, பொறியியல்/ மருத்துவ கல்லூரியில் அரசு இடஒதுக்கீட்டில் இடம் கிடைக்க அவசியமானதாகும்!

முதல் தலைமுறை பட்டதாரி (First generation graduate certificate) சான்றிதழை, தகுதியானவர்கள் வாங்கி வைத்துக்கொள்ளவும். முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்லூரி கட்டணத்தில் சிறப்பு சலுகை வழங்கப்படுகிறது.

வருமான சான்றிதழ் (Income certificate) தேவையுள்ளவர்கள் வாங்கி வைத்துக்கொள்ளவும். இது பள்ளி, கல்லூரிகளில் கல்வி உதவித்தொகை மற்றும் வருவாய்வழி தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க தேவை.

முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ், வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ், பிறப்பிட சான்றிதழ் தேவையுள்ள மாணவர்கள் இப்பொழுதே இ சேவை மையங்கள் மூலம் விண்ணப்பித்து வாங்கி வைத்து கொள்ளவும். 12 வாரங்களுக்குள் கிடைத்துவிடும்.

நீட் தேர்வு மற்றும் மருத்துவ சேர்க்கைக்கு (MBBS/ BDS) விண்ணப்பிக்க விரும்புவர்கள், போட்டோ மற்றும் கைரேகைகளை டிஜிட்டல் வடிவில் ஸ்கேன் செய்து வைத்திருக்கவேண்டும். மேலும் பெற்றோர்களின் சாதி சான்றிதழும் தேவை.

மாணவர்களின் பெயர்கள் இதுவரை ரேஷன் கார்டு எனும் குடும்ப அட்டையில் சேர்க்காதவர்கள் இப்பொழுதே சேர்த்து கொள்வது நல்லது.

மாணவர்களின் மாற்று சான்றிதழ் (TC), மதிப்பெண் சான்றிதழ் (10th, 11th and 12th Mark sheets) மற்றும் எல்லா சான்றிதழ்களையும் ஜெராக்ஸ் எடுத்து வீட்டிலும் அல்லது எல்லா சான்றிதழ்களையும் கணிப்பொறியில் PDF/ JPEG வடிவில் சேமித்து வைத்துகொள்ளவும். குறைந்தது எல்லாவற்றிலும் 10 காப்பிகள் (ஜெராக்ஸ்) தேவை.

பிள்ளைகளுக்கு +2 பரிட்சை முடிவுகள் வரும் முன்பாக தாங்கள் பிள்ளைகளை எந்த கல்லூரியில்/ எந்த பாடப்பிரிவில் சேர்ப்பது என பேசி தீர்மானம் செய்து வைத்து கொள்வது நல்லது.

மாணவர்களின் பெயர்கள், பிறந்த தேதி, முகவரி, பெற்றோர்களின் பெயர்கள் எல்லா சான்றிதழ்களிலும், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் போன்ற ஆவணங்களிலும், எழுத்துப்பிழை இன்றி சரியாக, ஒரே மாதிரியாக உள்ளதா என்று சரிபார்க்க வேண்டும்.

கல்லூரி சேரக்கை தகவல்களை நாளிதழ், டிவி மற்றும் தொடர்புடைய இணையதளம் மூலம் அறிந்து வரவும்.

தற்பொழுது பெரும்பாலான கலை/அறிவியல்/ பொறியியல் /சட்டக் கல்லூரி படிப்புகளுக்கு சேருவதற்க்கு ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

பெரும்பாலான தனியார் கலைஅறிவியல் கல்லூரிகள் சேர்க்கை விண்ணப்ப விநியோகம்/ ஆன்லைன் பதிவை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. பிளஸ் 2 ரிசல்ட் வெளியான சில தினங்களில் பொறியியல் கலந்தாய்வு, பொது மருத்துவ கலந்தாய்வு மற்றும் வேளாண் படிப்புகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப்படலாம்.

**- செம்போடை. குணசேகரன்**


KRM 99 DELIGHTS




















**FLAT INTERIOR FINISHES**

- LED Light Fittings- Panasonic/GM
- 32-inch LEDTV-Sony/Croma
- 1.5-ton Hitachi Inverter AC
- 15-ltr Storage Haier Water Heater
- King Size Cot
- Designer Wardrobe
- StudyTable with Chair
- Duroflex / Nilkammal Spring Mattress
- Jaquar Bathroom Fittings

**SAFETY FEATURES**


- CCTV Security Cameras
- Security Guards
- Gate Security24x7
- Fire Safety HooterSystem
- Boom Barriers
- Speed Breakers
- Surveillance Room
- Fire Hydrant System
- Fire Extinguishers

**AMENITIES**

- Gym
- Spa
- Beauty Parlor
- Restaurant
- Party Hall Event Booking
- Boating Restaurant
- 99 Kitchen
- International Party Clubs and PUB
- Indoor Games
- Yoga Space
- Lake View
- Boating
- Fishing
- HomeTheaters
- Association Room
- Eco Tourisms
- Multipurpose hall
- Conference Room
- Business Motivation Hall
- Covered Car parking
- Power Backup24x7
- STP 24x7
- Stand by Motors and Pump
- Johnson Lift 15nosCapacity







KRM 99 DELIGHTS



KITCHEN





STP







KRM
Home Makers Pvt. Ltd.

No. 1, Jawaharlal Nehru Road ( 200 ft Inner Ring Road )
Ponniamman Medu, Kolathur , Chennai – 99
Tel : 044 - 2374 3007/ 8, 2374 4661

**LOCATION ADVANTAGES**

- Retteri 8 Metro Station – Door Step
- Retteri Lake, Madhavaram – Behind Property (Door Step)
- 3 Minutes from satellite Bus Terminal (A.P)
- 2 Minutes from Reliance Mart
- 8 Minutes fromAnna Nagar
- 5 Minutes fromSaravanastores
- 2 Minutes fromVijayapark hotel
- 7 Minutes fromPerambur railway stations
- 10 Minutes fromCMBT Terminal
- 25 Minutes from International Airport
- 20 Minutes fromCentralrailwaystation
- Well connectedmetro network for futurecommunication
- 30 Minutes from OMR
- 5 MinutesAmbatturIT park
- Few Minutes from MeridianHospital
- Few minutes fromshellfuelstation
- Temple schoolat1km
- 3 minutes from Garodiaschool
- 7kmfrom siruvapurimrugantemple
- 10 kmfromMadhaschool
- 2km fromJaintemple
- ChennaiRTOat1km
- 3kmfrom vellammalEnggCollege
- Greenfield Chennai International School – 1 k.m.
- Hotel srivalli park – 1.5 k.m..
- ABT Parcel Service – 1.5 k.m..
- Essar KLS fuel station – 1.8 k.m.
- Bharat petrol bunk – 1.9 k.m.
- HP Petrol Pump – 2.4 k.m.
- Indian Oil Petrol Bunk – ½k.m.
- Umiya Mahal – ½ k.m.
- Sree M Dasartha Naidu Kasthuri Mahal – Opposite
- J.S. Malini Mahal – ¼k.m.
- Muthu Malai Hall – ½ k.m.
- Indian Oil Petroleum Station -1/4k.m.
- Retteri Fish Market – ¼ k.m.
- PADI SARAVANA STORE – 5k.m.
- Ganga Theatre – 2 k.m.
- Hotel SRM Grands – 2.5 k.m.
- DR. Sendhil (Dental CXlinic) – 2.5 k.m.
- Sri RangaMahaal – 2.5 k.m.
- DRJ Hospital – 2.9 k.m.
- Anna Nagar Metro – 10 Minutes

# காலநிலை மாற்றம் குழந்தைகளை பாதிக்குமா!



**மா**றிவரும் பருவநிலை மனிதனின் உடல் நிலையை அசைத்துப் பார்க்கிறது. வயதில் மூத்தவர்கள் எதையும் சமாளித்து விடுவார்கள் என்கிற காலம் இருந்தது ஆனால் இப்போது குழந்தைகள் அந்தக் காலங்கள் மாற்றத்தினால் பாதிப்பு ஆளாகும் வகையில் அச்சம் நிலவுகிறது.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பெரியவர்களைவிட குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுவர். அதீத வெப்ப அலை அவர்களுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். ஆகையால் இந்த கோடை காலத்தில் நாம் குழந்தைகளைப் பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான யுனிசெப் இயக்குநர் டெபோரா கோமினி தெரிவித்துள்ளார். அதிக வெப்ப அலை காரணமாக குழந்தைகளுக்கு சுவாசப் பாதை நோய்கள், வெப்பம் சார்ந்த நோய்கள், ஆஸ்துமா, இருதய நோய்களால் ஏற்படலாம் என்றும் அவர் எச்சரிக்கிறார்.

சர்வதேச சராசரி வெப்பநிலை கடந்த மார்ச் மாதத்தோடு தொடர்ச்சியாக 10வது மாதமாக அதிகமாக பதிவாகியுள்ளது. இதனால் புவியின் வடக்கு மற்றும் தெற்கு அரைக்கோளம் பகுதிகளில் உள்ள நாடுகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் உச்சம் கண்டுள்ளது. இந்நிலையில் தான் யுனிசெப் குழந்தைகளுக்கான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது

குழந்தைகளை வெப்ப பாதிப்பில் இருந்து பாதுகாக்க வீடுகளிலும், பள்ளிகளிலும் அவர்கள் விளையாட நிழல் நிறைந்த குளிர்ச்சியான இடங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற யுனிசெப் அறிவுறுத்துகிறது. பெற்றோர்கள் குழந்தைகள் தளர்வான ஆடைகள் அணிவதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. குழந்தைகளுக்கு வெப்ப அலை பாதிப்பால் உடல்நலம் குன்றினால் உடனடியாக அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

உலகில் நெருக்கடி ஏற்படும் ஒவ்வொரு முறையும் மிகவும் பாதிக்கப்படகூடியவர்கள் குழந்தைகள்தான். காலநிலை மாற்றமும் அதற்கு விதிவிலக்கல்ல. வறட்சியினாலும் வெள்ளத்தினாலும் ஏற்படும் உணவு உற்பத்தி பாதிப்பு, குழந்தைகளின் பசி, ஊட்டச்சத்து குறைபாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

தண்ணீர் பற்றாக்குறையும் காற்று மாசுபாடும், வெப்பநிலை உயர்வும் குழந்தைகளிடையே பரவும் தொற்றுநோய்களுக்கும் ஆபத்தான சுவாச நோய்களுக்கும் காரணமாக அமைகின்றன.





எஸ்.ஜானகி

வானிலை மாற்றம் போன்ற காலநிலை ஏற்படுத்தும் இடப்பெயர்வு குழந்தைகளின் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் பாதிப்புக்குள்ளாகிறது. 2050ஆம் ஆண்டிற்குள் பருவநிலை நெருக்கடியால் இன்னும் 14.3 கோடி குடும்பங்கள் இடம்பெயரலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

காலநிலை நெருக்கடியால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3.8 கோடி குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக 'குழந்தைகளைக் காப்போம்' (சேவ் தி சில்ட்ரன்) என்ற அமைப்பின் தரவு கூறுகிறது

# நண்பர்கள் பற்றி கவியரசர் கண்ணதாசன் தரும் விளக்கம்!



கண்ணதாசன் தன்னுடைய திரைப்பட பாடல்களில் நண்பர்கள் எப்படி ஒருவருக்கு வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகிறார் என்பதை பாடல்கள் மூலம் தெளிவுபடுத்திருக்கிறார் . ஒரு கட்டுரையில் நண்பர்கள் எப்படி அமைவார்கள் என்பதை மரங்களோடு ஒப்பிட்டு எழுதி இருக்கிறார்.

அதில் கவியரசர் கண்ணதாசன் இன்றைய நண்பர்கள் பற்றி எளிமையாக சொல்லியிருப்பார். அதாவது பனைமரம், தென்னைமரம், வாழைமரம். ஆகிய மரங்களை குறிப்பிட்டு நண்பர்களோடு அந்த மரங்களின் குணங்களை இணைத்து சிறப்பாக சொல்லி இருப்பார்.

**பனைமரம்:**

தானாக முளைத்து, தனக்கு கிடைத்த நீரை குடித்து தன் உடம்பையும், ஓலையையும் மற்றும் நுங்கையும் உலகத்திற்கு தருகிறது. நம்மிடம் எந்த உதவியும் கேட்காமல் உதவுபவன் பனைமரம் போன்ற நண்பன்.

**தென்னை மரம்:**

தென்னை நம்மால் நடப்பட்டு தண்ணீர் ஊற்றி வளர்த்தால் பலன் தருகிறது.

அதுபோல நிமிடம் உதவி பெற்று நண்பனாக இருப்பவன் தென்னை மரத்துக்கு இணையானவன்.

**வாழைமரம்:**

தினமும் தண்ணீர் ஊற்றினால் தான் பலன்தரும். அதுபோல நம்மிடம் தினமும் உதவி பெற்று வாழ்பவன் வாழைமரம் போன்றவன். இந்த மூவரில் பனைமரம் போன்றவனை தேர்ந்தெடுக்க வேண்டும். இது ஒரு பாடலின் வரிகள் என்கிறார் கண்ணதாசன்.

நண்பர்களில் நூற்றுக்கு ஒருவர் இருவர் தான் அப்படி கிடைத்தனர். மற்றவர்கள் பணம் பறிக்க என்னிடம் இருந்தனர் இப்போது அவர்கள் கோழி மேய்க்கின்றனர் என கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

நமது வாழ்விலும் இம்மூன்று வகையான வர்களை பார்க்கின்றோம்

# என்னவள்!



மழை ஓய்ந்த
மாலைப்பொழுதின்
மனம் வருடும்
தென்றல் அவள்...

மடிசாய்ந்த
மழலை சிந்தும்
புத்தம்புதிய
பாஷை அவள்...

கற்பனைக்கு
கைசேரா
கருபொதிந்த
கவிதை அவள்...

பனி இரவில்
குளிர் பொருந்த
நிலவு சொட்டும்
வெளிச்சம் அவள்...

வனம்சேர்ந்த
மலர்களெல்லாம்
வரம்கேட்கும்
வாசம் அவள்...

பிரித்ததுமே
படிக்கின்ற
பிடித்தமான
கடிதம் அவள்...

தினந்தோறும்
நான் காணும்
சொப்பனத்தின்
சுபிக்ஷம் அவள்...

தூரிகையை
தொட்டிடாத
ஓவியத்தின்
நளினம் அவள்...

இதயமெங்கும்
கொக்கரிக்கும்
விடியற்கால
சேவல் அவள்...

கண்களுக்குள்
கபடியாடும்
வானவில்லின்
தங்கையவள்...

மலரினும்
மெல்லிய
பூவினத்தின்
புதல்வி அவள்...

தனிமையிலே
இதயம் பாடும்
கற்கண்டு
கீதமவள்...

இளநீரின்
முதற்சுவையாய்
நான் பருகும்
மிடறு அவள்...

விடியற்கால
போர்வைக்குள்
நான் அணியும்
சோம்பல் அவள்...

நகம் கழித்த
பொழுதொன்றில்
அகம் சேர்ந்த
அழகு அவள்...

இதயத்தின்
பெருவெளியில்
நிரம்பி கிடக்கும்
நினைவு அவள்...

தூக்கம் அவள்
துயரம் அவள்
துவண்டுபோனால்
துணையும் அவள்...

இரவும் அவள்
பகலும் அவள்
இரண்டிலுமே
இம்சை அவள்

எழுதிடாத
கவிதை அவள்
என்னை எழுதும்
கவிஞை அவள்...

முப்பொழுதும்
கிறுக்கனாக்கி
சுற்றவிடும்
சிறுக்கி அவள்...

யாரிங்கு
வந்தாலும்
எப்போதும்
எனக்கு அவள்...

என்னை மயக்கிய
விழிகள் அவள்...
நான் ரசித்த
இசை அவள்...

என் பாலைவனச் சோலை
அவள்...
மலரும் நினைவுகளாய்
அவள்...

– சுந்தரமூர்த்தி

# உயிரைக் காத்த உழைப்பு!

இரு வழிப்போக்கர்கள் பேசிக்கொண்டே சென்ற போது வழியில் ஒரு நதி குறுக்கிட்டது. அந்த நதியில் பாலம்எதுவும் கட்டப்படவில்லை.

நீந்திக் கடப்பதைத் தவிர வேறு வழியில்லை. நதியும் குறுகலாகத்தான் இருந்தது. எனவே இருவரும் தைரியமாக நீந்திக் கடக்க முடிவு செய்தனர்.

இருவரில் ஒருவருக்குத்தான்நீச்சல் நன்றாக வரும்.அடுத்தவர் அரைகுறை தான்.இருவரும் நீந்த ஆரம்பித்தார்கள். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் நன்றாக நீந்தக் கூடியவன் ஒரு சுழலில் மாட்டிக் கொண்டு திணறினான்.

அனுபவம் அதிகம் இல்லாதவனோ விறுவிறுவென்று நீந்தி சென்று மறு கரையை அடைந்தான். திரும்பிப் பார்த்தபோது தன உடன் வந்தவன் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

உடனே மீண்டும் நீரில் குதித்து நீந்தி,அவனைக் காப்பாற்றி கரை கொண்டு வந்து சேர்த்தான்.

மெதுவாக தன்னிலை அடைந்த முதல்வன், தன்னைக் காப்பாற்றியதற்கு அடுத்தவனுக்கு நன்றி சொன்னான்.

பின் ஆச்சரியத்துடன் அவனிடம் கேட்டான்.

உனக்கு நீச்சலில் அதிக அனுபவம் இல்லைஎன்று சொன்னாயே பின் எப்படி சிரமம் எதுவும் இல்லாமல் தைரியமாக நதியைக் கடந்தாய்?



இரண்டாமவன் தனது இடுப்பிலிருந்தஒரு பையைத் தொட்டுக் காண்பித்தவாறு சொன்னான். 'இந்தப் பையில் நான் உழைத்து சம்பாதித்த தங்கக் காசுகள் உள்ளன.என் மனைவிக்காகவும் குழந்தைகளுக்காகவும் ஒரு வருடமாகப் போராடி உழைத்து சேர்த்த சேமிப்பு இது.இதன் கனம் தான் என்னை நதியை கடந்து வர உதவியது.

நான் நீந்தும்போது என் மனைவியும் என் குழந்தைகளும் என் தோளில் அமர்ந்தவாறு எனக்கு வழி காட்டினார்கள் என்றான்.


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

| |
|---|
| ஆயுள்சந்தா : ரூ.2400.00 |
| ஆறாண்டு சந்தா : ரூ.1440.00 |
| ஆண்டு சந்தா : ரூ.240.00 |

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



# ஆனந்தம் தரும் தியானம்

தியானம் : தி = பேரறிவு

யானம் = பயணம்.

தியானம் என்றால் பேரறிவை நோக்கிய பயணம். இறைவனாகிய பேரறிவு, பெரும்சக்தி நம் இதயத்தில் வாழ்கிறது. அந்தப் பேரறிவை, பேராற்றலை, தியானப் பயிற்சியால் வெளிக் கொணர்ந்து, பெருக்கி பெரும் வல்லமை பெற்று, பேரானந்தம் (Eternal Bliss) பெற வேண்டும்.

தியானம் என்பது ஒரு

* ஒரு முகப் பயணம் (CONCENTRATION)

* உள் முகப் பயணம் (KNOW THYSELF)

* விழிப்புணர்வுப் பயணம் (AWARENESS)

புத்தி கூர்மை கூடுகிறது (INTELLIGENCE ++)

முடிவு எடுக்கும் திறமை வளர்கிறது (DECISION MAKING ++), மனம் நிம்மதி பெறுகிறது (PEACE OF MIND ++), மனம் நிறைவு பெறுகிறது (SENSE OF SATISFACTION), இரத்தக் கொதிப்பு குறைகிறது (REDUCES HIGH BLOOD PRESSURE), நோய் எதிர்ப்புச் சக்தி கூடுகிறது (IMMUNITY ++), புதுச் சிந்தனை, புதிய ஆற்றல், புதிய கலைத்திறன் வளர்கிறது (DISCOVERY AND INVENTION ++), அகப்பொலிவு (தேஜஸ்) பெருகுகிறது (ENLIGHTENMENT OF BODY) மன நோய்கள் அகல்கிறது (CURES PSYCHOSTS), இறைநிலை கைகூடுகிறது (ACHIEVE DIVINE STATUS)

உடல், கை, கால், முகம் அலம்பி தியானத்தை துவங்க வேண்டும். உணவுவயிறு காலியாக இருக்க வேண்டும். உகந்த நேரம் சந்தியா வேளை - காலை, மாலை உகந்த இடம்காற்றோட்டமான அமைதியான சூழல் ஆசன ம்சுகாசனம் அல்லது பத்மாசனம், அர்த்த பத்மாசனம், சித்தாசனம் அல்லது வஜ்ராசனம் முத்திரைசேஷ்டா முத்திரை அல்லது சின் முத்திரை யோகம்சகஜ யோகம் ரு தசைகளை தளர்த்தி நாம் விரும்பியபடி அமர்தல் (RELAXED POSTURE) உடல் நிலைதலை, கழுத்து, முதுகு மூன்றும் ஒரே நேர் கோட்டில் இருக்க வேண்டும். முதுகு நிமிர்ந்து உட்கார வேண்டும். வாய்அங் என்று சொல்லி நாக்கால் அன்னத்தைத் தொட்டு உதடுகளை லேசாக மூடுங்கள். கண்கள்கண்களை புருவ மத்தியை நோக்கி இயல்பாகக் குவியுங்கள். (புருவ மத்தியில் ஆன்மா உள்ளது. தியானத்தின் பக்குவ நிலையில் ஆன்ம ஒளி ஜோதியாகத் தெரியும்.)

எண்ணக் குவிப்புஞான தீபம் நம் புருவ மத்தியில் இருப்பதாக பாவித்து வேறு நினைப்பின்றி மனதால் அதைத் துதியுங்கள்.

எண்ணங்கள் பின் செல்ல வேண்டாம்நம் எண்ணங்கள் அங்கும் இங்கும் ஓடும். கவலை வேண்டாம். கஷ்டப்பட்டு எண்ணங்களை கட்டுப்படுத்த வேண்டாம். மனம் அலைந்தால் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டு, பிறகு தியானத்தை தொடருங்கள். எண்ணங்கள் தானே திரும்பி வரும். தியான காலம்ஆரம்பத்தில் தியான நேரத்தை 5 நிமிடங்கள், பின் 10 நிமிடங்கள், பின் 15,பின் 30 நிமிடங்கள் எனப் படிப்படியாகக் கூட்டுங்கள். ஒருமாத காலம் இத்தியானத்தை தொடர்ந்து செய்தால் ஒரு இனம் தெரியாத மன மகிழ்ச்சி, மனநிறைவு, மன நிம்மதி, அபரிமிதமான மன ஆற்றல் எல்லாவற்றையும் விட ஒரு புது மனிதராக நாம் மாறியிருப்பதை உணர்வீர்கள். வாழ்க்கையில் தியானம் ஒரு மறு பிறப்பு.

வாழ்க்கையில் நமது ஒவ்வொரு செயலும், தியானத்தின் பின் அர்த்தம் உள்ளதாக, ஆனந்தம் தருவதாகத் தெரியும்.

- ப.முத்துராஜ்





# மழலை வரம் தரும் மகத்தான ஆலயம்!

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் வட்டத்தில் அணைக்கரை மீன்சுருட்டியில் இருந்து சேத்தியாத்தோப்பு வழியே வடலூர் செல்லும் சென்னை நெடுஞ் சாலையில் சோழதரம் என்றொரு ஊர் வரும். அங்கிருந்து சுமார் 12 கிலோமீட்டர் துரத்தில் விருத்தாசலம் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊர் ஸ்ரீ முஷ்ணம்.

இங்கு எழுந்தருளி பக்தர்களுக்கு வரம் அளிக்கும் அருள்மிகு பூவராக சுவாமி பெருமாள் திருக்கோயில்.

இக்கோவிலில் நாராயணன் வராஹ அவதாரத்தில் காட்சியளிக்கிறார். தினமும் காலை மூலவருக்கு திருமஞ்சனம், மக்கட்பேறு வேண்டுபவர்கள் அரச மரத்தை வலம் வந்து ஸ்ரீசந்தான கிருஷ்ணனை மடியில் எழுந்தருளச் செய்துகொள்வதினால் பயன் பெறுவார்கள். நெய் தீபம் ஏற்றுவதினால் ஐஸ்வர்யம் உண்டாகும், குடும்பம் தழைக்கும், பெண்களுக்கு திருமணம் நடக்கும். குழந்தை பாக்கியமும் உண்டாகும். தானே தோன்றிய மூர்த்திகளை கொண்ட வைணவ தலங்களில் இதுவும் ஒன்று (1. ஸ்ரீரங்கம் 2. ஸ்ரீமுஷ்ணம் 3. திருப்பதி 4. வானமாமலை).



இந்த கோவில் புருஷசுகாரா மண்டபம் எனப்படும் மண்டபம் ஒன்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. 17வது நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த தேர் வடிவ மண்டபத்தை குதிரைகளில் போர் வீரர்கள் இழுத்துச் செல்ல, பின்னால் யானைகள் தொடர்ந்து வருமாறு வடிவமைக்கப் பட்டுள்ளது. ஸ்ரீ முஷ்ணத்தில் நாயக்கர் வம்சத்தவர்களால் கட்டப்பட்டுள்ள இந்த கோவில் அவர்களின் படங்களை முற்றத்திலுள்ள ஒவ்வொரு தூணிலும் தாங்கி நிற்கிறது.

முன்னொரு காலத்தில் நாராயணன் மிகப் புனிதமான வராஹஅவதாரம் எடுத்து, பூமியைக் கவர்ந்து சென்ற ஹிரன்யாஹூசன் என்னும் அசுரனை கொன்று, அப்பூமியை தனது கோரைப் பற்களினால் சுமந்து வந்து, அதிஷேஷன் மேல் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். அச்வத்த விருஷத்தையும், துளசியையும் உண்டாக்கி, தனது வியர்வை நீரின் பெருக்கை கொண்டு நித்ய புஷ்கரணி என்ற புனித தீர்த்தத்தையும் ஏற்படுத்தி, ஸ்ரீமுஷ்ணம் என்னும் இத்தலத்தை இருப்பிடமாக ஏற்று பிரம்மன் முதலானோர் பூஜிக்க ஸ்ரீபூவாராகவன் என்ற திருநாமத்துடன், பக்தர்களுக்கு அருள்பாலிப் பவராக இத் திருக்கோவிலில் எழுந்தளியுள்ளார்.

மித்ரா டாக்கீஸ்

# வெள்ளித் திரையில் வலம் வரும் படங்கள்!

சுந்தர் சி-யின் அரண்மனை 4 படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் மேலும் ஐந்து படங்கள் திரையரங்குகளில் வெளியாகிறது.

இளன் இயக்கத்தில் கவின் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் "ஸ்டார் " இதுவரை நடித்திராத வித்தியாசமான பரிமாணத்தில் கவின் இந்த படத்தில் நடித்திருக்கிறார்.

இயக்குனர் சாந்தகுமார் இயக்கத்தில் அர்ஜுன் தாஸ், தன்யா ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடிப்பில் உருவாகி இருக்கிறது "ரசவாதி" படம்.

சந்தானம், அமீர், ஆனந்த்ராஜ், இமான் அண்ணாச்சி ஆகியோர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் "உயிர் தமிழுக்கு" . இந்தப் படத்தின் இயக்குனர் ஆதம் பவா.







சந்தானம் நடிப்பில் வெளியான வடக்குப்பட்டி ராமசாமி படம் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் அடுத்ததாக "இங்க நான்தான் கிங்கு" என்ற படம் உருவாகி இருக்கிறது. அதாவது திருமணம் செய்ய பெண் தேடும் இளைஞன் கல்யாணத்திற்கு பிறகு என்னென்ன பிரச்சனையை சந்திக்கிறான் என்பதுதான் இந்த படத்தின் கதை.

ராஜேஷ் இயக்கத்தில் சிக்கல் ராஜேஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் மாயவன் வேட்டை படமும் அதே நாளில் வெளியாகிறது. இப்படம் முழுக்க முழுக்க ஹாரர் கதையாக எடுக்கப்பட்டிருக்கிறது.

வெங்கட் பிரபு மற்றும் விஜய் கூட்டணியில் கோட் படம் உருவாகி வருகிறது. விஜய்யின் நடிப்பில் கடைசியாக வெளியான லியோ படத்தில் சஞ்சய் தத், மிஷ்கின், சாண்டி மாஸ்டர், அர்ஜுன் என ஏக்கசக்க பிரபலங்கள் வில்லனாக நடித்திருந்தனர். அதே போல் கோட் படத்திலும் நிறைய வில்லன் நடிகர்கள் இடம்பெற இருக்கின்றனர்.

மேலும் கேப்டன் விஜயகாந்த் ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த படத்தில் சில காட்சிகளில் நடிக்க வைக்க உள்ளனர். மேலும் கோட் படத்தில் பிரசாந்த், பிரபுதேவா, ஜெயராம், வைபவ், பிரேம்ஜி, அஜ்மல், சினேகா, மீனாட்சி சவுத்ரி, லைலா என எக்கசக்க பிரபலங்கள் நடிக்கின்றனர்.

இந்நிலையில் இந்தப் படத்தில் கிட்டத்தட்ட மூன்று வில்லன்கள் நடிக்க உள்ளனர். அப்பா மற்றும் மகன் என விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். அப்பா விஜய்யுடன் இருக்கும் மோகன் இந்த படத்தில் வில்லனாக நடிக்கிறார். அதேபோல் அஜ்மலும் இதில் கொடூர வில்லனாக நடிக்கிறார்.

திருப்பாச்சி படத்தில் நடித்த யுகேந்திரன் கோட் படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். 18 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் விஜய்யுடன் இவர் இணைந்துள்ளார்.





கோமாளி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் பிரதீப் ரங்கநாதன். இப்படத்தில் ஜெயம் ரவி, காஜல்அகர்வால் ஆகியோர் நடித்தனர். இந்த திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. இந்தப் படத்தை தொடர்ந்து பிரதீப் ரங்கநாதன் 'லவ் டுடே' படத்தை இயக்கி நடித்தார். இந்த படம் மிகப்பெரிய ஹிட்டானது.

பிரதீப் ரங்கநாதன் தற்போது இயக்குனர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் 'எல்ஐசி' படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். இந்த படத்தில் கீர்த்திஷெட்டி, எஸ்.ஜே. சூர்யா, மிஷ்கின், யோகிபாபு ஆகியோர் நடிக்கின்றனர். லலித் தயாரிக்கும் இந்த படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். இந்த படத்தை தொடர்ந்து ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தில் நடிக்க பிரதீப் ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த படத்தை 'ஓ மை கடவுளே' படத்தை இயக்கிய அஸ்வத் மாரிமுத்து இயக்குகிறார். இந்த நிலையில் இந்த படத்தின் டைட்டில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த படத்துக்கு 'டிராகன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனை வீடியோ ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது. இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. 'டிராகன்' படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

## அரண்மனை – 4 விமர்சனம்



பேய் கதை எத்தனை முறை எடுத்தாலும் ரசிகர்கள் சளைக்காமல் பார்க்கிறார்கள் ராகவா லாரன்ஸ் காஞ்சனா என்ற தலைப்பில் எடுத்தது போல சுந்தர் சி அரண்மனை என்ற தலைப்பில் படம் எடுத்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

அரண்மனை என்பது தமிழ் சினிமாவில் முக்கியமான பிராண்ட்ஆக மாறிவிட்டது. இந்த தலைப்பில் இதுவரை வெளிவந்த மூன்று பாகங்களும் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இதை தொடர்ந்து இன்று உலகளவில் அரண்மனை 4 திரைப்படம் வெளியாகியுள்ளது.

சுந்தர் சியின் தங்கையான தமன்னா தனது வீட்டின் சம்மதம் இல்லாமல் காதலித்து திருமணம் செய்துகொள்ளவதால், பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

10 வருடங்கள் கடந்த நிலையில் கணவர், மகன், மகளுடன் அரண்மனையில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் தமன்னா வாழ்க்கை தலைகீழாக மாறுகிறது. தமன்னாவும் அவரது கணவரும் திடீரென இறந்து போக, இந்த செய்தி சுந்தர் சிக்கு தெரிய வருகிறது.

தங்கையின் மரண செய்தியை கேட்டு ஊருக்கு வரும் சுந்தர் சி, தனது தங்கையின் மரணத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது என உணர்கிறார்.

தமன்னாவின் மரணத்திற்கு பின் அந்த ஊரில் என்னென்ன விஷயங்கள் நடந்தது, இதன் பின்னணி என்ன என்பதே படத்தின் மீதி கதை.

திகில் காட்சிகளை பக்காவாக வடிவமைத்த விதம் படத்தின் பிளஸ் பாயிண்ட். மொத்த படத்தையும் தனது தோளில் தாங்கி நிற்கிறார் தமன்னா. எமோஷனல் காட்சிகளில் அனைவரையும் கவர்ந்து விட்டார்.

சுந்தர் சி படம் என்றாலே கிளாமர் இருக்கும் என விமர்சனத்தை இப்படத்தில் தகர்த்துள்ளார். தமன்னா அளவிற்கு ராஷி கன்னாவிற்கு ஸ்கோப் இல்லை என்றாலும் கூட, தனக்கு கிடைத்த கதாபாத்திரத்தில் கச்சிதமாக நடித்துள்ளார் நடிகை ராஷி.

நகைச்சுவை காட்சிகள் சில இடங்களில் தொய்வை ஏற்படுத்தினாலும், கோவை சரளா, யோகி பாபு, விடிவி கணேஷ் ஆகியோரின் நடிப்பு பக்கா. படத்தின் மிகப்பெரிய பலம் பின்னணி இசை தான். ஹிப் ஹாப் ஆதி அதில் வெறித்தனமாக ஸ்கோர் செய்துள்ளார்.

அதே போல் படத்தை பிரமாண்டமாக காட்டிய ஒளிப்பதிவு மற்றும் எடிட்டிங் இரண்டுமே சூப்பர். குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சி, சுந்தர் சி பாணியில் மிரட்டலாக இருந்தது. சிம்ரன், குஷ்பூவின் நடனம் ஒரு பக்கமும், வில்லன் ஹீரோவுக்கு இடையே உள்ள மோதலும் வேற லெவல். மேலும் அதற்காக போடப்பட்ட செட் மிகவும் பிரம்மாண்டம்.

## ரத்னம் – படவிமர்சனம்

திரைப்பட இயக்குனர் ஹரி இயக்கும் படங்கள் அனைத்தும் பார்க்க ஆரம்பித்த நேரத்தில் ஏற்படும் விறுவிறுப்பு படம் முடியும் வரை இருக்கும் என்பது எல்லோருடைய எதிர்பார்ப்பு. சாமி படத்தில் விக்ரம் நடிப்பில் இயக்குனர் ஹரியின் அசாத்திய இயக்கம் ரசிகர்களை அசத்தியது. அவரது இயக்கத்தில் வெளியான விஷால் நடித்த படம் ரத்னம்.

சிறுவயதில் தாயை இழந்த ரத்னம் (விஷால்) தன்னை அரவணைக்கும் பன்னீர் செல்வத்துக்காக (சமுத்திரகனி) கொலை ஒன்றை செய்துவிட்டு சிறார் சீர்நோக்கு இல்லத்துக்குச் செல்கிறார். தண்டனைக் காலம் முடிந்து அவர் வெளியே வரும்போது, எம்எல்ஏவாக மாறியிருக்கிறார் பன்னீர்செல்வம். அவருடனேயே இருந்து உள்ளூரில் ‘நாலு பேருக்கு நல்லதுனா எதுவும் தப்பில்ல’ என்ற ரீதியில் அடிதடி, பிரச்சினைகளில் ஈடுபட்டு வருகிறார் ரத்னம்.

இப்படியான சூழலில் ஒருநாள் எதிர்பாராத விதமாக மல்லிகா (ப்ரியா பவானி சங்கர்) சந்திக்கும் ரத்னம் அவர் மீது அளவு கடந்த அன்பு காட்டுகிறார். அத்துடன் நிற்காமல், ஜனனியை கொல்ல வரும் வில்லன்களை அடித்து துவம்சம் செய்து, வான்டடாக சென்று அவரை பாதுகாக்கும் வாட்ச்மேன் வேலையும் பார்க்கிறார். மல்லிகா மீது அவர் கொண்டிருக்கும் அன்புக்கு என்ன காரணம்? மல்லிகாவை வில்லன்கள் கொல்லத் துடிப்பது ஏன்? அப்புறம் என்ன ஆகிறது? இதுதான் திரைக்கதை.

‘தாமிரபரணி’, ‘பூஜை’ படங்களுக்குப் பிறகு ஹரி விஷால் காம்போவுக்கு இது 3ஆவது படம். தமிழக ஆந்திர எல்லையில் கதைக்களத்தை அமைத்திருக்கும் ஹரி, நிலப் பிரச்சினை, நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றாலும் அரசு கல்லூரியில் இடம் கிடைக்காத சூழல், தாய்ப் பாசம், வழக்கமான காதலை தவிர்த்தது, பாஸ்ட் கட்டைை மூட்டை கட்டியது என காலத்துக்கேற்ற மாற்றங்களுடன் களமிறங்கியுள்ளார் ஹரி. இவையெல்லாம் இடைவேளைக்கு முன்பான காட்சிகளை ஓரளவு நகர்த்த உறுதுணையாக உள்ளன.

# மனிதன் ஆயுள் குறைய காரணம் என்ன?

ஒருவர் இறந்து விட்டால் முன்பெல்லாம் அவருடைய வயதை கேட்பார்கள் . குறைந்தது 60 வயதுக்கு மேலாவது இருக்கும் ஆனால் தற்சமயம் மனிதனின் ஆயுள் குறைவாக இருக்கிறது என்பதை கேள்விப்படும்போதும் நேரில் பார்க்கும் போதும் நமக்கு எதிர்காலம் பயத்தை உருவாக்குகிறது. இப்போதெல்லாம் மனிதனின் ஆயுட்காலம் சரியாக கணிக்க முடிவதில்லை. அதிகபட்சம் ஆயுள் காலம் 60 ஆண்டுகள் என்று வைத்திருந்த அந்த காலம் இன்று இல்லை .40 வருடத்தை கடந்தாலே பெரிய விஷயமாக கருதப்படுகிறது. அந்த நாளில் மனிதன் வாழ்வதற்கு தேவையான அளவுக்கு இயற்கையே உதவியாக இருந்தது ஆனால் மனிதன் இயற்கையை மறந்ததால் அவனுடைய ஆயுட்காலம் குறைந்தது.

உடல் உழைப்பு இல்லாமல் போனது இயற்கையை மறந்து செமிகலை நம்பிக் கொண்டு இருப்பது. ப்ரிட்ஜ், ஏசி இவைகளை அதிகம் உபயோகிப்பது.

அஞ்சறை பெட்டி பொருட்களை மறந்து போனது. முக்கியமாக வாதம் கபம் பித்தம் மூன்றுக்கும் மருந்தான மஞ்சளை மறந்து போனது.

மாவுபொருட்களை அதிகம் உட்கொள்ள ஆரம்பித்தது(பருப்பு வகைகளும் மாவு பொருட்கள் தான்).

ஹோட்டல் fast food தரமற்ற எண்ணெய் இப்படி சொல்லி கொண்டே போகலாம்.

முக்கியமாக விரதங்களில் டீ காபி குடிப்பது.

ஒரு சிறிய சோதனை ஒன்று செய்து பாருங்கள். இப்போது நாம் பயன்படுத்தும் அரிசியை எடுத்து அது மூழ்கும் அளவுக்கு நீரை ஊற்றி வையுங்கள். மற்றொரு பாத்திரத்தில் சிவப்பு புட்டரிசி கேழ்வரகு அல்லது பட்டை தீட்டப்படாத ஏதோ ஒருஅரிசியில் நீரை ஊற்றி வையுங்கள். ஒரு அரை மணி நேரம் கழிந்தது நீங்கள் பார்க்கும்போது உங்களுக்கு தெரிந்துவிடும் எதில் நீர் அதிகமாக எடுக்கப்படுகின்றது என்று.

இவ்வாறு தங்கிவிடும் கொழுப்பும் மற்ற பொருட்களும் முதலில் அபான வாயுவில் இருந்து நாற்றமடிக்கும் காற்றாக வெளிக்காட்டுகிறது. அதாவது வயிறு நான் கெட்டு கொண்டிருக்கிறேன்என்பதை வெளிப்படுத்துகிறது.

ஒரு சிலருக்கு சளி வெளிக்காட்டாமல் நாக்கில் சுவையின்மை மூக்கில் வாசனை இன்மை மூலம் தெரியப்படுத்துகிறது.

ஒரு சிலருக்கு தலையில் பொடுகு பேன் அதிகரித்து விடும்.

நாள்பட நாள்பட உடல் குண்டாகுதல் வியாதிகள் முற்றி நீரிழிவு ரத்த அழுத்தம் தோல் வியாதிகள் முடி கொட்டுதல் நரம்பு இழுத்தல் அடிக்கடி சுளுக்கு பிடித்தல்

மொத்தத்தில் சொன்னால் வாதம்பித்தம் கபம் மூன்றும் கெட்டு விடுகின்றது

ஒருவன் உடல் பருமனாக இருப்பதற்கும் பருமனின்றி இருப்பதற்கும் முறையே காற்று, நீர் அதிகரித்து விடுவதும் குறைவுக்கு காரணம

சூழ் தொட்டு கொள்ள நார்த்தங்காய் பயன்படுத்தினார்கள். (சூழ் மூலம் வரும் எதிர் விளைவுகளை முறியடிக்க).

அதே கேழ்வரகு அடை செய்த போது முருங்கை கீரை சேர்த்து செய்தார்கள். கீரை கழிவுகளை முற்றிலும்



வெளியேற்றி எலும்புகளில் சீரான பிராண சக்தியை கொடுத்து ரத்தம் சீராக பரவ வழி செய்கிறது. உணவில் என் எதை சேர்க்கிறோம் என்று தெரிந்து பயன்படுத்துங்கள்.

நம்மை போல் சூரியனை நம்பியே வெளி மண்டலத்தை நம்பியே மண்ணின் கனிமங்களை நம்பியே வானில் இருந்து பெய்யும் மழையை நம்பியே மரம் செடி கொடிகளும் இருக்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள்சூரியனை போல் எலும்பை யாராலும் பலப் படுத்த முடியாது. (மரத்தின் தண்டு,)

இயற்கை காற்றை போல் யாராலும் பிராண சக்தியை தர முடியாது.

மழை நீர் இல்லை என்றால் நீர் கிடையாது. சந்திரனின் குளிர்ச்சியை யாராலும் தர முடியாதுஎனவே இயற்கையை கொண்டாடுவோம். வாழ்க்கையின் வயதை கூட்டுவோம்.

# தொழிலாளர்களின் உரிமை தொகை பணிக்கொடை!



ஒவ்வொரு தொழிலாளரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய தகவல் இது. பணிக்கொடை எனப்படும் கிராஜுவிட்டி என்றால் என்னவென்று தெரியாமலேயே இன்னும் பல தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் பணியாற்றும் நிறுவனம் நமக்குத் தரவேண்டிய உரிமை தொகை இது. ஆனால், அந்த உரிமையை நாம் எப்படிப் பெறுவது? கிராஜுவிட்டி பற்றி நம்மில் பலருக்கு முழுமையாகத் தெரிந்திருக்க நிச்சயம் வாய்ப்பில்லை. கிராஜுவிட்டி என்றால் என்ன, அது எப்போது கிடைக்கும், அதை எப்படிக் கணக்கிடுவது என்பது பற்றி இந்தப் பதிவில் பார்க்கலாம்.

ஒரு ஊழியர் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்திருந்தால் அவருக்கு கிராஜுவிட்டி எனப்படும் பணிக்கொடை செலுத்தப்படும். சம்பளதாரர்கள் கிராஜுவிட்டி பெறுவதற்கு என விதிமுறைகளும், கிராஜுவிட்டி தொகையை கணக்கிடுவதற்கு தனி ஃபார்முலாவும் இருக்கிறது.

குறைந்தது 5 ஆண்டுகளாவது ஒரு நிறுவனத்தில் வேலை செய்திருந்தால் அந்த ஊழியர் கிராஜுவிட்டி பெற தகுதியானவர் ஆகிறார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அந்த நிறுவனத்தை விட்டு விலகினாலும் அவருக்கு கிராஜுவிட்டி கிடைக்கும். சம்பளதாரர்களுக்கான கிராஜுவிட்டி தொகையில் ஊழியரின் சம்பளத் தொகையில் இருந்து சிறு தொகை மட்டுமே எடுத்து சேர்க்கப்படும். பெரும்பகுதி தொகை நிறுவனத்தின் சார்பில் செலுத்தப்படும்.

பணிக்கொடை சட்டம் 1972 (Payment of Gratuity Act, 1972) விதிகளின்படி, குறைந்தது 10 ஊழியர்கள் வேலை செய்யும் நிறுவனத்தில் பணிபுரியும் எல்லா ஊழியர்களுமே கிராஜுவிட்டி பெற தகுதியானவர்கள். கிராஜுவிட்டி சட்டத்தின் கீழ் வராத நிறுவனங்களும் கூட விருப்பப்பட்டால் ஊழியர்களுக்கு கிராஜுவிட்டி செலுத்தலாம் என சட்டம் சொல்கிறது

கிராஜுவிட்டியை கணக்கிடும்போது, ஒரு ஊழியர் 6 மாதத்துக்கு வேலை செய்திருந்தால் அது ஒரு ஆண்டாகவே கருதப்படும். உதாரணமாக, ஒரு ஊழியர் ஒரு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் 7 மாதம் வேலை செய்திருக்கிறார் என வைத்துக்கொள்வோம். அவருக்கு கிராஜுவிட்டி கணக்கிடும்போது 7 ஆண்டுகளாகவே கணக்கிடப்படும். மறுபுறம், ஒரு ஊழியர் ஒரு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் 4 மாதம் வேலை செய்திருந்தால், அவர் 6 ஆண்டுகள் வேலை செய்ததாகவே கருதப்பட்டு கிராஜுவிட்டி கணக்கிடப்படும்.

அனைத்து ஊழியர்களுக்கும் கிராஜுவிட்டி கணக்கிடுவதற்கு ஒரே ஃபார்முலாதான் பயன்படுத்தப்படுகிறது. மொத்த கிராஜுவிட்டி தொகை = (கடைசியாக பெற்ற சம்பளம்) x (15 / 26) x (வேலை செய்த ஆண்டுகள்). உதாரணமாக ஒரு ஊழியர் ஒரு நிறுவனத்தில் ஏழு ஆண்டுகள் வேலை செய்ததாக வைத்துக்கொள்வோம். அவர் கடைசியாக பெற்ற சம்பளத் தொகை 40,000 ரூபாய் என வைத்துக்கொள்வோம்.

கிராஜுவிட்டி = (40000) x (15 / 26) ஜ் (7) = 161538 ரூபாய். ஆக, அந்த ஊழியருக்கு 1,61,538 ரூபாய் கிராஜுவிட்டி தொகையாகக் கிடைக்கும். மேற்கூறிய ஊழியர் ஏழு ஆண்டுகள், 8 மாதம் வேலை செய்திருந்தால் கிராஜுவிட்டி எப்படி கணக்கிடுவது? இப்போது அவரது பணிக்காலம் 8 ஆண்டுகளாகக் கருதப்படும். கிராஜுவிட்டி = (40000) x (15 / 26) x (8) = 1,84,615 ரூபாய். ஆக, அவருக்கு 1,84,615 ரூபாய் கிராஜுவிட்டி தொகையாக செலுத்தப்படும்.

- **ஆனைமலை முத்துராஜ்**



# திருமண விருந்தில் வீணாகும் உணவுகள்!

திருமணங்கள் மற்றும் மற்ற வீட்டு விசேஷங்களில் விருந்தினர்கள் அமரும்முன்பே இலயைப்போட்டு இனிப்புகள் மற்றும் கறிவகைகளை பரிமாறி வைக்கிறார்கள். இப்போது பெரும்பாலும் நடுத்தர வயதுக்காரர்களே சர்க்கரை நோயால் அவதிப்படும் போது வயதானவர்களை என்ன சொல்ல!

அப்படியே விலை உயர்ந்த இனிப்பு வகைகள் மற்றும் உணவுப் பொருட்கள் உண்ணப்படாமல் குப்பையில் கொட்டப்படுகின்றன.

இதை எத்தனையோ முறை உறவினர்களிடம் சொல்லி விட்டேன். சமையல் காண்டிராக்ட் என்பதால் சாப்பிட்டாலும் சாப்பிடா விட்டாலும் எல்லாவற்றுக்கும் பணம் கொடுத்துதானே ஆகவேண்டும்... இரண்டாவது டைனிங் ஹாலில் நுழையும்போது இலைமுழுவதும் அயிட்டங்கள் இருந்தால் அதுதான் பெருமை என்கிறார்கள்.




அதற்குள் தி நம்பர் ஆஃப் அயிட்டம்ஸ் இன் தி பனானா லீஃப் ஈஸ் டைரக்ட்லி புரபோர்ஷனல் டு தி கௌரவம் ஆஃப் தி ஹோஸ்ட் என்றார் அருகில் இருந்த ஒரு மேத்ஸ் புரஃபசர்.

கல்யாண காண்ட்ராக்டர்கள் நாங்கள் ஸ்வீட் இல்லாமல் இலைக்கு இவ்வளவு என்று பேசிவிட்டு ஸ்வீட் எக்ஸ்ட்ரா என்று கூட வாங்கிக் கொள்ளத் தயார் சார்.. ஆனால் நாங்களும் அவ்வளவு ஹானஸ்ட் இல்லை.. நீங்களும் எங்களை நம்பத் தயாராக இல்லை சார் ! எங்களுக்கு உணவுப் பண்டங்கள் வீணாவதால் நஷ்டம் இல்லைதான்.. ஆனால் எங்கள் ஆட்களுக்கு மாதம் ஏழெட்டு நாட்கள்தான் வேலை வருகிறது.. நல்ல சாப்பாடு சாப்பிடுகிறார்கள்.. மற்ற நாட்களில் ஏதோ சாதம் மோரு ஊறுகாய் என்று காலம் தள்ளுகிறார்கள்... இவ்வளவையும் அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து தயாரித்து வாரிக்கொண்டு போய் குப்பையில் கொட்டும்போது அவர்களுக்கு அப்படியே வயிறெல்லாம் எரிகிறது சார்! என்ன செய்ய? இவை பஃபேக்குத்தான் லாயக்கு என்றார்.

ஆனால் என்ன.. நம்ம உணவு வகைகள் பஃபேக்கு சரிவராது. நமக்கும் சாப்பிடத் தெரியாது. மற்றவர்கள் பஃபே சாப்பிடும் தட்டை நான் பார்ப்பதை தவிர்த்து விட்டு தலையை குனிந்து கொண்டுதான் போவேன். சாம்பார், கிரேவிகள், சாதம், தயிர் என்று எல்லாம் கலந்து ஈஸ்ட்மென்கலரில் ஒரு மாடர்ன் ஆர்ட் போல தட்டில் ததும்பி நிற்கும்.

பட்டினி கிடந்தவனுக்குதான் உணவின் அருமை தெரியும்! மிகப்பெரிய கொடுமை உணவுப்பொருட்களை அப்படியே குப்பையில் கொட்டுவதுதான்.

**- எம்.எஸ்.ராஜகோபால்**




**கொ**ளுத்தும் வெயிலில் பேண்ட் சர்ட் இன் பண்ணி கொண்டு தொப்பி கூலிங் கிளாஸ் சகிதமாக,

"காதல் என்னும் தேர்வெழுதி காத்திருக்கும் மாணவன் நான்" என்று பாடிக் கொண்டு உள்ளே வந்தார் கபாலி கான்.

வெயிலுக்கு இதமாக இளநீர் கொடுத்து உட்கார சொன்னோம் உறிஞ்சி குடித்தவர், தேர்வு முடிவுகள் மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது அரசியல்வாதிகள் எல்லோரும் தேர்தல் முடிவுக்காக காத்திருக்கிறார்கள்!

என்று நாம் கேட்காமலே தான் பாடிய பாட்டு காண விளக்கத்தை சொல்லாமல் சொன்னார் கபாலி கான்.

**தேர்தல் முடிந்தும் கூட தமிழக அரசியல் பரபரப்பில் தான் இருந்து கொண்டிருக்கிறது!**

**எப்படி?**

தேர்தலின் போது தங்கள் கட்சியின் நிர்வாகிகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது குறித்து ஒவ்வொரு கட்சியின் தலைமையும் விவாதித்துக் கொண்டுள்ளனர்.

எப்படி ஆயினும் தேர்தல் முடிவு ஏற்றுக்கொண்டு தானே ஆக வேண்டும்!

**ஆமா!**

இந்த தேர்தல் முடிவுகள் எப்படியாக இருந்தாலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முடிவுக்கு காத்திருக்கிறார்கள்!

**எப்படி சொல்றீங்க?**

தி.மு.க. எல்லா தொகுதிகளையும் வெற்றி பெற்று விடும் என்ற கருத்து கணிப்புகளும் உளவுத்துறை அறிக்கையும் முதல்வரை சந்திக்க வரும் நிர்வாகிகளும் நம்பிக்கையோடு சொல்லுகிறார்கள். ஆனாலும் ஒரு சில இடங்களில் இருந்து வருகின்ற கோஷ்டி பூசல் இந்த தேர்தலில் எதிரொலிக்காமல் இல்லை அதனால் போன தேர்தலில் வாங்கிய வாக்குகள் வித்தியாசம் குறைய வாய்ப்புண்டு அப்படி குறைகின்ற தொகுதிகளில் அதற்கு தொகுதிக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டவர்கள் அது அமைச்சர்களே இருந்தாலும் நடவடிக்கை உண்டு என்று ஏற்கனவே கட்சித் தலைவரும் முதல்வருமான மு .க. ஸ்டாலின் சொன்னது நினைவிருக்கலாம்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு, பூத்வாரியாகப் பதிவான வாக்கு சதவிகிதத்தையும், நிர்வாகிகளின்






செயல்பாடுகளையும் பட்டியல் எடுத்து வந்தார் அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

உண்மைநிலை என்னவென்றால், எடப்பாடியின் பேச்சை முக்கியமான சீனியர் நிர்வாகிகள் யாரும் கேட்பதில்லை. நடவடிக்கை, கடுமையான பேச்சு என இறங்கினால் கட்சிக்குள் மீண்டும் கீறல், கிழிசல்கள் வந்துவிடக் கூடாது என்று பயப்படுகிறார் அவர்.

எடப்பாடி பொறுத்தவரை இந்த பாராளுமன்றத் தேர்தலை சந்தித்த விதத்தை விட எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தான் தன்னுடைய பலத்தை காட்ட வேண்டும் என்று தெளிவாக இருக்கிறார் ஆகையினால் இந்த தேர்தல் முடிவு எப்படி வந்தாலும் அவர் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

பா.ஜ.கவை பொறுத்தவரை இந்த தேர்தலை கட்டி இழுத்து இருக்கிறார்கள். இழப்பதற்கு ஒன்றுமில்லை ஆனாலும் வந்தால் மலை என்ற நிலையில் இருக்கிறார்கள். அதற்கேற்றார் போல் வாக்காளர் பட்டியலில் ஒரு லட்சம் பேருக்கு மேல் நீக்கப்பட்டு விட்டார்கள் என்று ஒரே மாதிரியாக அண்ணாமலை தொடங்கி அடிமட்ட தொண்டர் வரை பேச ஆரம்பித்து விட்டார்கள். வெளிநாட்டில் இருக்கும் வாக்காளரான ஒருவர் தான் ஓட்டு போடாததால் மறுவாக்குப்பதிவு நடத்த வேண்டும் என்று சர்க்கார் படபாணியில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் நீதிமன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது .வாக்காளர் பட்டியலில் சரி பார்க்கும் அறிவிப்பை அரசு வெளியிடும்போது அதை அலட்சியப்படுத்திவிட்டு இப்போது வழக்கு தொடுப்பதில் அர்த்தமில்லை என்று அவருக்கு பதில் சொல்லியிருக்கிறது நீதிமன்றம்.

இப்படி ஒவ்வொரு கட்சியும் இந்த தேர்தல் முடிவை தமிழகத்தில் உள்ள மாநில கட்சிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்க தேசிய கட்சிகள் அகில இந்திய அளவில் தேர்தல் நடந்து முடிந்த பிறகு என்ன நடக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் அடுத்த இதழ் தயாரிக்கும் போது புதிய நாடாளுமன்றத்திற்கு புதிய அரசு பொறுப்பேற்று இருக்கும்! என்று சொல்லிக் கொண்டு கையசைத்து வெளியேறினார் கபாலிகான்

# இந்திய கிரிக்கெட் அணியில் தமிழ்நாடு புறக்கணிப்பா?

அடுத்த மாதம் ஜூன் 2ம் தேதி தொடங்கும் டி20 உலகக்கோப்பைக்கான இந்திய அணி கடந்த ஏப்ரல் 30ல் அறிவிக்கப்பட்டது. ரோகித் சர்மா தலைமையில் 15 பேர் கொண்ட இந்திய அணியில் 4 சுழற்பந்துவீச்சாளர்கள், 3 வேகப்பந்து வீச்சாளர்கள், 2 விக்கெட் கீப்பர்கள் இடம் பெற்றிருந்தனர். ரோகித் சர்மா, விராட் கோலி, ஜெய்ஸ்வால், சூர்யகுமார் யாதவ் ஆகியோர் டாப் ஆர்டர் பேட்டிங்கில் இடம் பிடித்திருந்தனர். ரிஷப் பந்த், சஞ்சு சாம்ஸன் ஆகிய 2 விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

குல்தீப் யாதவ், யுஸ்வேந்திர சாஹல் ஆகிய இரு ஸ்பெஷலிஸ்ட் ஸ்பின்னர்களுடன், ரவீந்திர ஜடேஜா, அக்ஸர் படேல் ஆகிய சுழற்பந்துவீச்சு ஆல் ரவுண்டர்கள் அணியில் இடம் பிடித்துள்ளனர். வேகப்பந்துவீச்சை கவனித்துக் கொள்ள ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ் ஆகியோருடன் அர்ஷ்தீப் சிங் சேர்க்கப்பட்டுள்ளார். ஹர்திக் பாண்டியா, ஷிவம் துபே ஆகிய இருவரும் வேகப்பந்துவீச்சு ஆல்ரவுண்டர்களாக வாய்ப்பு பெற்றுள்ளனர். ஹர்திக் பாண்டியா இந்திய அணியின் துணை கேப்டனாகவும் அறிவிக்கப்பட்டுள்ளார்.




இந்திய அணியில் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, வேகப்பந்துவீச்சாளர் ஒருவர் குறைக்கப்பட்டு, கூடுதலாக ஒரு சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன் மாற்று வீரர்களாக, சுப்மான் கில், ரிங்கு சிங், கலீல் அகமது, ஆவேஷ் கான் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

டி20 உலகக்கோப்பைக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்ட அந்த விநாடியே, இந்தியா முழுவதும் அதுகுறித்த விவாதங்கள் தொடங்கிவிட்டன. அதுவும் ஐபிஎல் கிரிக்கெட் வேளையில் அறிவிப்பு வெளியானதால் அது இன்னும் கூடுதல் கவனத்தை பெற்றுவிட்டது. சமூக ஊடகங்களில் ரசிகர்கள் பலரும் இந்திய அணி தேர்வு குறித்த தங்களது பார்வையை பதிவிடத் தொடங்கிவிட்டனர்.

டி20 உலகக்கோப்பைக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே “நடராஜன்” என்ற பெயர் சமூக வலைதளங்களில் டிரெண்டிங்காக மாறியது.



எஸ்.சூர்யா

நடராஜன் இந்திய அணியில் தேர்வு செய்யப்படாதது குறித்த அதிருப்தியில் இருந்த தமிழ்நாட்டு கிரிக்கெட் ரசிகர்களின் குமுறலை அதிகப்படுத்திவிட்டது. நடப்பு ஐ.பி.எல். தொடரில் வேகப்பந்து வீச்சாளர்களின் செயல்பாடுகள் குறித்த புள்ளிவிவரங்களை ஒப்பிட்டு நடராஜனின் செயல்பாட்டை பாராட்டு சமூக ஊடகங்களில் அவர்கள் எழுதத் தொடங்கிவிட்டார்கள்.

நாமும் ஐபிஎல் இணையதளத்தில் வீரர்களின் செயல்பாடுகள் குறித்த புள்ளிவிவரங்களை ஆராய்ந்தோம். அதன்படி பார்த்தோமானால், இந்திய அணி அறிவிக்கப்பட்ட போது நடராஜன், சன்ரைசர்ஸ் அணிக்காக 7 போட்டிகளில் ஆடி 13 விக்கெட்டுகளை எடுத்திருந்தார். அவர் ஓவருக்கு சராசரியாக 9 ரன்களை விட்டுக் கொடுத்திருந்தார். தமிழ்நாட்டின் தொழிற்துறை அமைச்சரான டிஆர்பி ராஜா தனது ட்விட்டர் பக்கத்தில், "இது விரிவாக விவாதிக்கப்படுவது சிறப்பான ஒன்று. தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு பலமுறை அவர்களுக்குரிய இடத்தைக் கொடுக்காமல் டெல்லி மறுத்துள்ளது. இது சமீப காலமாக அதிக அளவில் நடக்கிறது. இது ஆட்சிக்கெல்லாம் அப்பாற்பட்டது. பல விளையாட்டுகளிலும் டெல்லி இவ்வாறுதான் குறுகிய பார்வையுடன் செயல்படுகிறது. தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறந்த திறன் மிக்க விளையாட்டு வீரர்கள் குறித்து டெல்லி பெரும்பாலான நேரங்களில் பாராமுகமாகவே இருக்கிறது." என்று பதிவிட்டார்.. விளையாட்டிலும் அரசியல் என்று ரசிகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அதேநேரத்தில், உலகக்கோப்பைக்கான அணியில் தேர்வாகியுள்ள முகமது சிராஜ் 9 போட்டிகளில் 6 விக்கெட்டுகளை மட்டுமே கைப்பற்றியுள்ளார். ஓவருக்கு சராசரியாக 9.50 ரன்களை அவர் விட்டுக் கொடுத்துள்ளார். அணியில் தேர்வாகியுள்ள மற்றொரு வேகப்பந்துவீச்சாளரான அர்ஷ்தீப் சிங் 9 போட்டிகளில் 11 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது எகானமி ரேட் 9.68.

ஜஸ்பிரித் பும்ரா மட்டுமே நடராஜனை விட சிறப்பாக செயல்பட்ட வேகப்பந்துவீச்சாளர் என்று ஐ.பி.எல். புள்ளிவிவரம் கூறியது. அவர் 10 போட்டிகளில் 14 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் தனது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கையை 15ஆக உயர்த்திக் கொண்டுள்ள நடராஜன், அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளருக்கான நீலத் தொப்பியை வசப்படுத்தியுள்ளார்.

# மனசும் அறிவும்



கடுமையாக உழைப்பவனுக்குக் கவலைப்பட நேரமில்லை. தலை வலிக்கிறது என்று ஒரு மருந்து கடைக்கு சென்று ஒரு மாத்திரை வாங்குகிறோம். கையில் இருப்பது 100 ரூபாய். மாத்திரை விலை ஐந்து ரூபாய். கடைக்காரர் சில்லறையாக இருந்தா கொடுங்க என்கிறார்.

இப்போது என்ன செய்வீங்க.

நாம்வாகனம் ஓட்டிக்கொண்டு சாலையில் செல்கின்ற போது எதிரில் வந்தவர் கவனக்குறைவாக நம் வண்டி மீது மோதி விட்டார்.

இப்போது என்ன செய்வீங்க.

முக்கியமான பொருள் ஒன்று வீட்டுக்குவரும்போது வாங்கி வரும்படி_உங்கள் துணைவியார் கூறி இருந்தார். அதை வாங்க மறந்து வீட்டிற்க்கு வந்து விட்டீர்கள்.

இப்போது என்ன செய்வீங்க.

அன்றாடம் தினசரி வாழ்க்கையில் நாம் சந்திக்க கூடிய சின்னச் சின்ன பிரச்சனைகளுக்கு எளிய வழிகள் என்று_பல யோசனைகள் வைத்திருப்போம்.

அதைப்போல பெரிய விஷயங்களுக்கும்.. வருமுன் காப்போம் என்பது போன்ற_முன்னேற்பாடான சிந்தனைகள் சிலவும் நாம் வைத்திருக்க வேண்டும். அல்லது பழகிக் கொள்ள வேண்டும்.

திடீர் மின்சார தாக்குதலை சந்திக்கின்ற போது, தீபரவலை சந்திக்கின்ற போது, நம்மைச் சேர்ந்தவர்கள் திடீர் சுகவீனத்தில் விழுகின்ற போது, அவசர பணத் தேவையின் போது, பொருளாதார நெருக்கடிகளின் போது, தொழில், குடும்ப, நிர்வாக சிக்கல்களை சந்திக்கின்ற போது,ஐஎது வரினும் சரி நாம் எதிர் கொள்வோம் என்கிற அசட்டு தைரியங்களை, எண்ணங்களை, தவிர்த்து.. எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று மனம்குழம்பாமல்.. பதட்டம் கொள்ளாமல் நிதானமாக செயல்படுவதற்கு எந்த சூழ்நிலையிலும் நம்மை நாம் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

அதுதான் எப்படி.

அடுத்தவர்கள் சந்திக்கக்கூடிய பிரச்சனைகளை அன்றாட வாழ்வில் நிறைய கவனிக்கிறோம். அவைகளை வெறும் காட்சிகளாக மட்டும் மனதில் இருத்திக் கொள்ளாத படி.. அவர்கள் கையாண்ட விதங்களைக் கவனிக்க வேண்டும்.

அல்லது இதை விட இப்படி செய்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்குமே என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால் பிறர் படுகிற துன்பங்கள் கூட நமக்கும் வாழ்க்கை பாடம் ஆகி விடுகிறது, அதுவே நமக்கும் அனுபவமாகி விடுகிறது.

புத்திசாலித்தனமான முடிவுகளை எடுப்பது என்பது இப்படித் தாங்க, கண் காண்கின்ற காட்சிகளின் விபரங்கள் நேரடியாக அறிவுக்கு செல்வதும், அறிவு விஷயத்தை சொல்வதற்கு முன்பாகவே நம்முடைய கை, கால்கள், செயலுக்கு தயாராவதும் வேண்டும்.

பல பேருக்கு_ பார்த்து, கேட்டு, அறிந்து, உணர்ந்து, தெளிந்து, அதன் பிறகுமனசும், அறிவும், கூட்டு சேர்ந்து ஆலோசித்து.. ஒரு செயலுக்கு வருவதென்றால்.. இதன் பெயர் நிதானப் போக்கு அல்ல. அதன் பெயர் மந்த நிலை என்பது, இந்த மந்த நிலை என்பது தான் பதட்டத்திற்கு காரணமாகவும் இருக்கிறது.

எனவே புத்திசாலித்தனமான முடிவுகளை வேகமாகஎடுப்பதற்கு_சிறந்த உபாயம் என்பது கண்கள் பார்த்த உடனே கைகள் தன் வேலையை உடனே செய்யணும்.

வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது முக்கியமல்ல. அதை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதே முக்கியம்.

எதிர்பார்ப்பு இன்றிப் பழகுவோம், ஏன் என்றால் அதுவே ஏமாற்றமற்ற வாழ்வைத் தரும்.

அனைத்தும் நன்மைக்கே என்று மகிழ்ச்சியோடு ஏற்போம் நல்லதே நடக்கும்.

# வாசிப்போம்! வாசிப்பை சுவாசிப்போம்!
# உலக புத்தக தின விழா










தமிழ் நாடு பள்ளிக் கல்வித் துறை பொது நல நூலக இயக்ககம், சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு திருவான்மியூர் முழு நேரக் கிளை நூலகம் சென்னை 41ல் வாசகர் வட்டம் நடத்திய உலக புத்தக தின விழா ஏப்ரல் 23.2024 அன்று நடைபெற்றது. நூலகப் பணியாளர் மோ.உமா வரவேற்க விழா இனிதே தொடங்கியது!

இவ் விழாவில் வழக்கறிஞர் R.கிருஷ்ண மூர்த்தி, குழந்தை எழுத்தாளர் கன்னிக்கோயில் இராஜா, கவிஞர் மயிலை மா.சந்திரா கவிஞர் செம்போடை வெ.குணசேகரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்!

புத்தகம் வாசிப்பின் அவசியம் பற்றி வழக்கறிஞர் கிருஷ்ண மூர்த்தியும் குழந்தைகளுக்கு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தி கவிஞர் கன்னிக் கோயில் இராசா நன்னெறி கதைகள் மூலம் விளக்கியும் கவிஞர் மயிலை மா.சந்திரா நடப்பு சம்பவங்களை எடுத்துக் காட்டி விழுப்புணர்வூட்டும் நல்ல புத்தகங்களை தேடிக் கண்டறிந்து படிக்க வேண்டுமெனவும் கோடை விடுமுறையில் ஒவ்வொரு குழந்தையும் ஒரு கதையை எழுதி நூலகருக்கு அனுப்பி வைத்தால் அவை தேர்வு செய்யப் பட்டு புத்தகமாக வெளியிட ஆவன செய்யப்படும். என செம்போடை வெ.குணசேகரனும் எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றினர்!

விழாவில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு கன்னிக் கோயில் இராஜா தான் எழுதிய புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்!

குறளமுது இலக்கியப் பேரவை சார்பில் சிறப்பு விருந்தினர்களுக்கும் பார்வையாளர் சிலருக்கும் கவிஞர் மயிலை மா. சந்திரா நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்!

நிறைவாக நூலகர் பா.சந்தானலட்சுமி நன்றி நவில விழா இனிதே முடிந்தது!



# சொத்து பிரிக்க உயில் அவசியமா?

ஒருவர் தன்னுடைய சொத்துக்களை தன் வாழ்நாளுக்கு பிறகு, தன்னுடைய உறவினர்களுக்கு சேரும்படி எழுதி வைக்கும் பத்திரமே "உயில் பத்திரம்" ஆகும்.. இது முழுக்க முழுக்க சுயநினைவுடன் மட்டுமே எழுத முடியும். ஒருவர் தான் சுயமாக சொந்தமாக சம்பாதித்ததை, சொத்துக்களை மட்டுமே உயிலாக எழுதி வைக்க முடியும்.. பூர்வீக சொத்தாக இருந்தாலும் அதை யாருக்கும் உயிலாக எழுத முடியாது, பிரித்து எழுதி வைக்கவும் முடியாது..

உயில் எழுதும்போது, சொத்தை, யாருக்கு, எவ்வளவு தருவது என்று யோசித்து எழுத வேண்டும். இதில் 2 சாட்சி கையெழுத்துக்கள் முக்கியம். ஆனால் சாட்சி கையெழுத்து போடுபவர்கள், உயிலுக்கு சம்பந்தம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். அதேபோல, உயிலில் டாக்டர் மற்றும் வக்கீல்களின் சாட்சி கையெழுத்துக்களும் அவசியம்.

நீங்கள் எழுதிய உயிலை ரத்து செய்யலாம், திருத்தம் செய்யலாம்.. இதற்கு முத்திரைத்தாள் தேவைப்படாது.. சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, பதிவு செய்துகொள்ளலாம்.. அரசு நிர்ணயம் செய்துள்ள பதிவு தொகையை மட்டும் செலுத்தி, பதிவு செய்துகொள்ளலாம்

ஒருவர், உயிலை எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம்... ஆனால், கடைசியாக எழுதும் உயில் மட்டுமேதான் கணக்கில் எடுத்து கொள்ளப்படும்.. அதேபோல, உயில் எழுதிய பிறகும்கூட அந்த சொத்தை அவரால் விற்க முடியும்... ஒருவேளை, உயில் எழுதியவர் இறந்தபின்னர், உயிலில் குறிப்பிட்ட சொத்து விற்கப்பட்டிருந்தால் சொத்து வாங்கியவரிடம் உயிலின் பேரில் கேட்க முடியாது.

ஒருவேளை வாரிசு இருந்தும், அவர்களை தவிர்த்து பிறருக்கும் உயில் எழுதி வைக்கலாம். அப்படி எழுதி வைத்தால் வாரிசுகளால் அதை கேள்வி கேட்கவோ, எதிர்க்கவோ முடியாது.

அதுக்காக, வாரிசுகளுக்கு எழுதி வைத்தால், அந்த சொத்து மனைவிக்கு கிடைக்கும் என்றும் அர்த்தம் கிடையாது... வாரிசுக்கு எழுதி வைக்கும்போது, மனைவியையும் ஒரு பங்குதாரராக சேர்த்து உயில் எழுதினால் சிறந்தது.. அல்லது வாரிசுதாரரையே நாமினியாக சேர்த்துக் கொண்டால் பிரச்சனைகளுக்கான வாய்ப்புகள் குறைவு.

உயில்களை வாரிசுகளுக்கு மட்டுமே எழுதி வைக்க வேண்டும் என்பதில்லை.. தனக்கு விருப்பமானவர்கள் அல்லது டிரஸ்ட்களுக்கும் எழுதி வைக்கலாம்.. ஒருவேளை, 18 வயது நிரம்பாத நபருக்கு உயில் எழுதப்பட்டால், அதற்கு (கார்டியன்) காப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.. இன்னும் பிறக்காத குழந்தையின் பேரில்கூட, உயில் எழுதலாம்., பிறக்கப்போகும் பேரக்குழந்தையின் மீதும் உயில் எழுதலாம்.

உயில் எழுதியவர் இறந்ததுமே, அந்த உயிலை கோர்ட்டில் மெய்ப்பிக்க வேண்டும்.. 3 வருடத்துக்குள் உயிலை மெய்ப்பிக்காவிட்டால், தாமதத்துக்கான காரணங்களை கோர்ட்டில் சொல்ல வேண்டியிருக்கும்.

அதேபோல, உயில் இல்லாமல் சொத்துக்களை பிரிக்க முடியுமா? எப்படி பிரிப்பது? இந்து வாரிசுரிமை சட்டம் 1956ன்படி, சொத்தின் உரிமையாளர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அந்த சொத்தை முதல் வாரிசுகள் என்று சொல்ல கூடிய மனைவி, மகன், மகள் அல்லது தாய் போன்றவர்களுக்கு பிரித்து கொடுக்கலாம்.

அதுவே முதல் வாரிசுகள் இல்லாத பட்சத்தில், அதாவது உரிமையாளரின் மனைவி, குழந்தைகள் இல்லாத பட்சத்தில், அந்த சொத்தை 2ம் வாரிசுகளுக்கு, அதாவது மகனின் மகள் அல்லது மகன், மகளின் மகள் அல்லது மகள், சகோதரன், சகோதரி போன்றவர்களுக்கு அச்சொத்தை பிரித்து தரலாம் என்கிறார்கள்.. எனவே, உயில் எழுதுவது குறித்த சந்தேகங்களை வழக்கறிஞர்களிடம் கேட்டு தெளிவு பெற்றுக்கொள்ளலாம்.



# இடி இடிப்பது இப்படித்தான்!

இடி எவ்வாறு உருவாகிறது... உங்களுக்கு தெரியுமா.. மழையும், வெயிலும் இல்லாமல் குளிர்ச்சியான காற்று, திடீரென பூமியில் இருந்து மேலே எழும்பும். அந்தக் காற்று ஈரமாக இருப்பதால் அது மேலே செல்வதற்கு ஆற்றல் வேண்டும். அந்த ஆற்றலை, குளிர்ந்த காற்று தனக்குள் இருந்தே எடுத்துக் கொள்ளும். இந்த ஈரக்காற்று, குளிர்ச்சி அடைந்து நீர்த்துளிகள் அதாவது மேகங்கள் உருவாகின்றன.

இந்த நீர்த்துளிகள் மேலே சென்று ஏற்கனவே அங்கிருக்கும் மேகங்களுடன் உராயும்போது, 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் டிகிரி செண்டிகிரேடு வரை வெப்பம் உருவாகும். இந்த வெப்பத்தினால் அந்தப் பகுதி விரிவடைந்து வெளிச்சமும், சத்தமும் உருவாகிறது. ஒளியை மின்னலென்றும், ஒலியை இடியென்றும் சொல்கிறோம். மேகங்கள் வேகமாக மோதிக்கொள்ளும் போது, 10 மில்லியன் கிலோ வாட்ஸ் அளவுக்கு மின்சக்தி உருவாகும். இது நேரடியாக மனிதர்களைத் தாக்குகிறது.

உயரமான கட்டிடங்கள், உயரமான மரங்கள் போன்றவை இதனால் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றன. உயரமான மரங்களுக்கு கீழே ஒதுங்கி நிற்பவர்களை இடி தாக்குகின்றது. கூட்டமாக நடந்து செல்லும்போது, உயரமாக இருப்பவர்களை இடிதாக்கும் வாய்ப்பு அதிகம். திறந்த வெளியில் இருப்பவர்களையும் இடிதாக்கும் வாய்ப்பு அதிகம்.



மின்னல் ஏற்படும் சமயத்தில், மின்சாரத்தை அதிகம் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. செருப்பு அணிந்து நடக்கும்போது, இடிதாக்கும் வாய்ப்பு குறைவு. மழை நேரங்களில் குடைபிடிக்கும் போது, அதன் பிளாஸ்டிக் கைப்பிடியை பிடிப்பதன் மூலம், இடிதாக்குவதில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும்.

இடி, மின்னல் இரண்டும் ஒரே நேரத்தில் ஏற்பட்டாலும் மின்னல் முதலில் நம் கண்ணுக்கு தெரியும். சிறிது நேரம் கழித்து இடி சத்தம் கேட்கும். காரணம், ஒளியின் வேகம் (மின்னல்) ஒரு நொடிக்கு 3 லட்சம் கிலோ மீட்டர் ஆகும். ஒலியின் வேகம் ஒரு நொடிக்கு 330 மீட்டர் மட்டும் ஆகும். இடியால் ஏற்படும் மின்சாரம், உயரமான மரங்கள், கட்டிடங்கள் மூலமாக பூமிக்கு பாய்ந்து செல்வதால், மரங்கள் எரிந்து விடுகின்றது கட்டிடங்கள் இடிந்து விடுகின்றன. உயரமான பொருள் எதுவும் கிடைக்காத போது, நமது தலையில் விழுந்துவிடும். ஆகவே பரந்த வெட்ட வெளியில் தனியாக செல்லக் கூடாது. தனியாக உள்ள மரத்தின் அடியில் நிற்க கூடாது.

உயரமான கட்டிடங்களின் மீது தடித்த கம்பிகளை பொருத்தி அதை பூமியுடன் இணைப்பு ஏற்படுத்தி எர்த் செய்து விடுவார்கள். கட்டிடத்தை இடி மின்சாரம் தாக்கும் போது மின்சாரம் வேகமாக பூமிக்கு சென்றுவிடும். அப்போது கட்டிடம் பதுகாப்பாக இருக்கும். கட்டிடத்தின் மீது அமைக்கப்படும் அந்த தடித்த கம்பிக்குப் பெயர் இடிதாங்கி எனப்படும். இடி மின்னலில் உண்டாகும் மின்சாரம் பல லட்சக்கணக்கான வோல்டு அழுத்தமுள்ளதாக இருக்கும். ஆகவே இதன் தாக்குதல் மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும்.

– ஆனைமலைராஜ்

மித்ரா கிட்சன்

# ஜில் ஜில் Rusk Kulfi





தேவையான பொருட்கள்: ரஸ்க் – 15, சர்க்கரை – 250 கிராம், ஏலக்காய் – 5, பால் – அரை லிட்டர், பால்பவுடர் – 10 ஸ்பூன், பாதம் – பிஸ்தா – முந்திரி – தேவையான அளவு.

செய்முறை: முதலில் ஒரு மிக்ஸி ஜாரில் 15 ரஸ்க்கை துண்டு துண்டாக உடைத்து போட்டுக் கொள்ளவும்.அதனுடன் 200 கிராம் சர்க்கரை மற்றும் 5 ஏலக்காய் சேர்த்து பவுடராக அரைத்துக் கொள்ளவும். பிறகு பால்பவுடர் மற்றும் 50 கிராம் சர்க்கரையை பவுடராக அரைத்து தனியாக வைத்துக் கொள்ளவும்.பிறகு அடுப்பில் ஒரு PAN வைத்து அரை லிட்டர் பாலை தண்ணீர் சேர்க்காமல் காய்ச்சவும். பால் லேசாக கொதி வந்ததும் நாம் அரைத்து வைத்துள்ள ரஸ்க் பவுடரை அதில் சேர்த்து நன்றாக கட்டிகள் இல்லாமல் கலக்கவும். பிறகு அதனுடன் நாம் அரைத்து வைத்துள்ள பால்பவுடர் சர்க்கரை பொடியையும் சேர்த்து நன்றாக கெட்டியாகும் வரை கலக்கவும்.கெட்டியானவுடன் ஆற வைத்து அதை ஒரு மிக்ஸி ஜாரில் சேர்த்து ஒரு டம்ளர் ஆறிய பால் சேர்த்து நன்றாக கட்டிகள் இல்லாமல் மறுபடியும் அரைக்கவும். பிறகு அதை ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொள்ளவும். பிறகு அதனுடன் பாதம் ,பிஸ்தா , முந்திரி இவைகளை சிறு சிறு துண்டுகளாக உடைத்து அதனுடன் சேர்ந்து நன்றாக கலக்கவும்.அதன் பின்பு இதை KULFI MOULD ல் ஊற்றி அதில் ஐஸ் குச்சியை வைத்து விடவும். . இதை ஆறு மணி நேரம் FREEZER ல் வைக்கவும். KULFI MOULD இல்லை என்றால் டம்ளரில் கூட ஊற்றி வைக்கலாம். பிறகு ஆறு மணி நேரம் கழித்து வெளியே எடுக்கவும். இப்பொழுது மிக மிக சுவையான, அட்டகாசமான, சூப்பரான,டேஸ்ட்டான அனைவருக்கும் பிடித்த வெயிலுக்கு ஏற்ற ஜில் ஜில் ரஸ்க் குல்பி ரெடி.





S.கவிதா
சிட்லபாக்கம்

ஐஸ்கிரீமில் உள்ள நன்மைகள்:

1.ஐஸ்கிரீமில் கால்சியம் அதிகமாக இருக்கிறது. எப்படியென்றால் ஐஸ்கிரீமை பால் கொண்டு செய்வதால் தான். இதை சாப்பிடுவதால் எலும்புகள் வலுவடைவதோடு, உடலுக்கு சக்தியையும் தருகிறது.

2 ஐஸ்கிரீமில் கால்சியம் அதிகம் நிறைந்திருப்பதால் அது பற்களை பாதுகாப்பதுடன், ஈறுகளும் நன்கு வலுவடைகிறது.

3.ஐஸ்கிரீமில் உடலுக்கு தேவையான புரோட்டீன் இருக்கிறது. இதனால் உடலுக்கு தினமும் தேவை, ஏனென்றால் உடலில் உள்ள தசைத் திசுவை தினமும் சரிசெய்ய தேவைப்படுகிறது.

4.சில ஐஸ்கிரீமானது கொழுப்பு குறைவாக உள்ள பாலாடையால் ஆனது. இப்படிப்பட்ட ஐஸ்கிரீம் உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானது.

தொடர் 25

## நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

# எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு எடுபடாத அரசியல் களம்!

**ஜெ**யகாந்தன் என்று சொன்னவுடன் எல்லோருக்கும் அவர் எழுதிய சிறுகதைகள் தான் நினைவுக்கு வரும்!.

அந்த சிறுகதை உலகத்தின் மாமன்னனை நினைக்கும் பொழுது, நான் சில மணி நேரம் அவரோடு கழித்த அந்த நாள் ஞாபகங்கள் தான் வருகிறது!

1962. ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் சமயம். கோபி பாராளுமன்றத் தொகுதிக்கு என் அருமை நண்பர் ஜோதிநாத் சிங் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் வேட்பாளராக நின்றார்.

1961 லிருந்தே ஆனந்த விகடன், கலைமகள், புதுமை, தமிழ்நாடு போன்ற பத்திரிகைகளில் என் சிறுகதைகள் வந்து கொண்டிருந்தன. என்னைப் பற்றி நண்பர் ஜோதிநாத் சிங்கிற்கு நன்றாகத் தெரியும்!

தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்திருந்த நேரத்தில், ஒரு நாள் காலை நேரத்தில் நண்பர் வீட்டிற்கு வந்தார், "எந்த வேலையிருந்தாலும், அதையெல்லாம் விட்டு விட்டு, இன்று மாலை நான்கு மணிக்கெல்லாம் நீங்கள் பெருந்துறை வந்து விட வேண்டும்!" என்று அன்புக் கட்டளையிட்டார்..

"எதற்காக?" என்று கேள்வி எழுப்பினேன். .

" இன்று இரவு 7 மணிக்கு எங்கள் கட்சி சார்பில் ஒரு பொதுக் கூட்டம் இருக்கிறது!..."என்றார் சிரித்துக் கொண்டே!

"அரசியல் கூட்டங்களில் எனக்கு என்ன வேலை? நான் தான் எந்தக் கட்சியிலும் சேராதவன் என்று உங்களுக்குத் தெரியுமே?.." என்றேன்.


"அது எனக்குத் தெரியாதா?...இன்றைய சிறப்பு பேச்சாளர் எழுத்தாளர் ஜெயகாந்தன். அவர் மாலை நான்கு மணிக்கெல்லாம் பெருந்துறை வந்து விடுகிறார். கூட்டம் ஆரம்பிக்க ஏழு மணிக்கு மேல் ஆகி விடும்!..அதுவரை அவரோடு பேசிக் கொண்டிருக்க சரியான ஆள் தேவைப் படுகிறது!.....அதற்குத் தான் உங்களைக் கூப்பிட வந்தேன்!.." எழுத்தாளர் ஜெயகாந்தன் என்றவுடன் எல்லோருக்கும் நினைவுக்கு வருவது அவரது சிறுகதைகள்தான்!

காரணம் அவர் படைத்த பல சிறுகதைகள் காலத்தை எதிர்த்து நிற்கக் கூடியவைகள்! பல பிரச்னைகளைத் தீர்க்கமாக சிந்தித்துப் , புதிய கோணத்தில் தன் சிறுகதைகளின் மூலம் தீர்வு தந்திருக்கிறார்!

தமிழ் சிறுகதை உலகில் ஜெயகாந்தன் ஒரு மாமன்னன் என்பதை அவரைப் பிடிக்காதவர்கள் கூட ஒத்துக் கொள்வார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை!

அதைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷப் பட்டேன்! மாலை மூன்று மணிக்கே தயாராகி பெருந்துறைக்குப் புறப்பட்டு விட்டேன்

நான் பெருந்துறை போன பொழுது, குன்னத்தூர் ரோட்டில் ஒரு டைலர் கடையில் திரு.ஜோதிநாத் சிங்கும், ஜெயகாந்தனும் வெளிப் பக்கமாக இரண்டு ஸ்டூல்களைப் போட்டு, அதில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்!



அந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை எல்லாம் இது போன்ற சாதாரணக் கடைகளில் தான் பார்க்க முடியும்!

நான் போனவுடன் ஜோதிநாத் சிங் என்னை ஜெயகாந்தனுக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். அதன் பின், அவர் பொதுக் கூட்ட மேடை அமைக்கப் பவானி ரோட்டிற்குப் போவதாகவும், சரியாக ஏழு மணிக்கு திரு. ஜெயகாந்தனை அந்த இடத்திற்கு என்னை அழைத்து வரும்படி சொல்லி விட்டு அவர் கிளம்பி போய் விட்டார். சொன்னபடி அழைத்துச் சென்று நண்பர் ஜோதிநாத் சிங்கை அழைத்து, எழுத்தாளர் ஜெயகாந்தனை அவர் பொறுப்பில் விட்டு விட்டு நான் எனது ஊருக்கு கிளம்ப நினைத்தேன்!

இந்த வித்தியாசமான மனிதர் என்ன பேசப் போகிறார் என்பதை கேட்க என்னை அறியாமல் ஒரு ஆசை வந்து விட்டது! அதனால் கூட்டத்தில் ஒரு ஓரமாகப் போய் நின்று கொண்டேன். தினசரி நடக்கும் ஏதாவது ஒரு செய்தியின் மேல் தன் எழுத்துத் திறமை அத்தனையும் காட்டி, அதை வேறு மாதிரி மக்களுக்கு காட்ட முயற்சி செய்வார்! அது எடுபடாது! நடந்த நிகழ்ச்சி மக்களுக்கு சரியான முறையில் பல விதங்களில் எட்டி விடும்! அதை வேறு விதமாக மக்களுக்கு மாற்றிக் காட்ட முடியாது என்பதை அவர் உணராததே அவர் அரசியலில் பிரகாசிக்க முடியாமல் போனதற்கு காரணம்!

தி.மு..க.வும், கலைஞரும் உச்சப் பட்ச செல்வாக்கோடு இருந்த காலத்தில் இப்படிப் பட்ட முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வியை தழுவினார்! அரசியல் வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமில்லை என்பதை காலம் அவருக்கு உணர்த்தி விட்டதை பிற்காலத்தில் அவர், கலைஞர் பக்கத்தில் சிரித்துக் கொண்டே பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கும் புகைப் படங்களைப் பார்த்து மக்கள் புரிந்து கொண்டார்கள்!

எழுத்தாளர் ஜெயகாந்தன் தன் வாழ்நாளில் தன் எழுத்தை அரசியல் வாழ்க்கைக்காகவும் நீண்ட நேரத்தை செலவிட்டிருக்கிறார்.



துடுப்பதி ரகுநாதன்

# உயிரின மேலாண்மை

முனைவர். பா. ராம் மனோகர்

சமீபத்திய ஆய்வு தகவல்களின் படி நம் நாட்டில் நான்கு சிற்றின பறவைகள் ஆரோக்கியமான எண்ணிக்கையில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. குரல் இனிமை, வண்ணம், தோற்றம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிடும் அந்த பறவைகள் சூழலுக்கு ஏற்றவாறு தம்மை தகவமைத்துக்கொண்டு தமது இனத்தின் எண்ணிக்கை பெருக்கியுள்ளன. பெரும்பாலும் இவை, மனிதர்களின் வாழிடங்களை ஒட்டிய இயற்கை பகுதிகளில் வசிக்கின்றன.




சாம்பல் கதிர் குருவி (ASHY PRINIA), இந்திய மயில் (PEA FOWL) பாறைப் புறா (ROCK PIGEON), ஆசிய குயில் (ASIAN KOEL) ஆகிய நான்கு இன பறவைகள், நம் நாட்டில் ஆரோக்கிய நிலையில், இனத்தொகையிலும், ஓரளவு அதிகம் என்ற நிலையில் உள்ளன.

சாம்பல் கதிர் குருவி, மிக சிறிய சாதாரண பறவை,நாம் அவற்றை கண்ணால் காண்பதை விட, அதன் இனிமை கலந்த, வெவ்வேறு வித பாடும் அல்லது கூவி மகிழும் ஒலிகள் மூலம் அறிய இயலும். உடல், மேற்புறம், வால் பகுதி சாம்பல் கலந்த பழுப்பு நிறம் மற்றும் . மெல்லிய கருநிற அலகு கொண்டவை ஆகும். செங்கல் சிவப்பு நிறமுட்டைகள்இடும். இந்தியாவில் பெரும்பான்மையான வாழிடங்களில் இயற்கை பகுதிகளில் காணப்படும்.2000ஆம் ஆண்டுக்கு பின்னர் எண்ணிக்கையில் அதிகரித்து இருக்கின்றன.




நம் தேசிய பறவை இந்திய மயில் பறவை அழகு, நாம் அனைவரும் ரசிக்காமல் இருக்க இயலாது. அதன் தோற்றம் வண்ண தோகை, கொண்டை, கண்கள், இந்த குறிப்பிட்ட பறவைகளின் வாழிடம் விரிவடைந்து கொண்டிருக்கிறது. ஆம், கேரளா, இமாலய பகுதி, மேற்கு தொடர்ச்சி மலை, சமீபத்தில்கிராமங்கள் நகரங்கள்,ஆகியவற்றிலும் கூட இவற்றின் எண்ணிக்கை பெருகிவிட்டது.

மயில்கள் பெருகியதால், விவசாய நிலங்கள், தானியங்கள் உற்பத்தி பாதிப்புகளை அடைவது என்பது உண்மையாகும். எதிரி விலங்குகள் குறைவாக இருப்பது என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். எனினும் சரியான காரணம் அறியப்படவில்லை.

நீல பாறை புறா என்ற (ROCK PIGEON)மற்றொரு பறவைகள் எண்ணிக்கை, தற்போது மிக அதிகம் ஆகிவிட்டது. இவை மனித வாழ்விடங்களில், குடியேறி, குறிப்பாக உயர் அடுக்கு மனித குடியிருப்புகளில் (HIGH RISE APARTMENTS) அதிகம் வசிக்கின்ற நிலை நாம் கண்டு வருகின்றோம். நகரப் பகுதியில், உணவு, காய்கறி சந்தை, ஆகிய இடங்களில் இயல்பாக, எவ்வித அச்சம் இல்லாமல் வசிக்கின்ற இந்த உயிரினம், முன்னொரு காலத்தில், வனப் பகுதியில், பாறை, கோவில்கள், பழங்கால கட்டிடங்கள் ஆகியவற்றில் மட்டுமே காணப்பட்டவையாகும். இந்த புறா பறவைகள் ஒலி எழுப்புதல், முனகல் போன்று சற்று வேறுபட்டு இருப்பதால் பலரும் வெறுப்பதும், அவற்றின் உதிரும் இறகுகள், எச்சம் ஆகியவற்றால், எளிதில் சுவாச நோய்கள் மனிதர்களுக்கு பரவ வாய்ப்புகள் அறியப்பட்டுள்ளது. தோட்டங்களில், நம் வீடுகளின், கொல்லை என்ற இயற்கை பகுதியில் நாம் சமீப காலமாக, அதிகாலை நேரத்தில், ஆசிய குயில் (ASIAN KOEL) எழுப்பும் இனிமையான ஒலிகளை கேட்டு மகிழ வாய்ப்புகள் உள்ளது அல்லவா !? ஆம், இந்த பறவைகள் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. இலக்கியங்களில், திரைப்படங்கள், கிராம வழக்கு என மனித வாழ்க்கையுடன் ஒருங்கிணைந்து, வசிக்கும் அழகிய பறவை "ஒட்டுண்ணி முறை "(PARASITIC) இனப்பெருக்கம் மேற்கொள்கின்றன.

வெவ்வேறு வகையான வாழிடங்களில் வசிக்கும் குயில் பறவை 2000 ஆம் ஆண்டுக்கு பிறகு, எண்ணிக்கை கூடிக்கொண்டு உள்ளது. ஆனால் இதற்கான சரியான காரணம் , அறியப்படவில்லை. சாம்பல் கதிர் குருவி, ஆசிய குயில், நீல பாறை புறா, இந்திய மயில் என்ற நான்கு வெவ்வேறு சிற்றின நில பறவைகள் எண்ணிக்கை பெருகி வருவது ஒரு புறம் மகிழ்ச்சி அளிக்கிறது. எனினும் இயற்கை, சூழல் சமநிலை கோட்பாடு அடிப்படையில், ஒவ்வொரு சிற்றினமும், (PREY) குறிப்பிட்ட எண்ணிக்கை தொகை அளவில் குறிப்பிட்ட வாழிடத்தில் இருக்க வேண்டும். அதற்கு மேல்,எண்ணிக்கைஉயருகையில், அதனை கட்டுப்படுத்த, எதிரி கொல்லும்இனம் (PREDATOR) சார்ந்த விலங்கு அதே வாழிடத்தில் இருக்க வேண்டும். எதிரி கொல்லும் விலங்குகளின் எண்ணிக்கை குறைவதும், உணவாக உள்ள விலங்கு சிற்றினங்கள், அவை வசிக்கும் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தகவமைத்துகொள்வது, ஆகிய காரணிகள் குறிப்பிட்ட விலங்கு அல்லது பறவைகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்க முக்கிய காரணம் ஆகிவிட்டது. ஆரோக்கியமான எண்ணிக்கை, ஒரு உயிரின வாழ்க்கைக்கு அவசியம்தான், ஆனால், பறவைகள், மற்றும் விலங்குகள் அபரிமித, உயர் இனத்தொகை, மனிதர்கள் வாழ்விடம் ஆக்கிரமிப்பு, மனிதர்களுக்கு அன்றாட வாழ்வில் தொந்தரவு, நோய்கள் ஆகியவற்றால் பாதிப்புகள் மற்றும் பிரச்சனை ஏற்பட்டால், அப்போது அறிவியல் பூர்வமான அணுகுமுறை கொண்டு அங்கு உயிரின மேலாண்மை (WILDLIFE MANAGEMENT) மேற்கொள்ள அரசு துறைகள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.அப்போதுதான் மனித விலங்கு, பறவை இடையில்ஆரோக்கியமாக சமநிலை பேணப்படும்.சிந்திப்போமா !!!



# ஆண்ட்ராய்ட் அதிசயமும், ஆபத்தும்!

**அ**னுமதியில்லாமலே நீங்கள் இருக்கும் இடத்தை 'காட்டிக்கொடுக்கும்' ஆண்ட்ராய்டு செல்பேசிகள்..

படத்தின் காப்புரிமை GETTY IMAGES பெரும்பான்மையான ஆண்ட்ராய்டு திறன்பேசிகள் அதன் இருப்பிட சேவை அணைக்கப்பட்டிருந்தாலும் பயனரின் இருப்பிடம் சார்ந்த தரவுகளை கூகுள் நிறுவனத்துக்கு அனுப்புவதாக தெரியவந்துள்ளது.

ஆண்ட்ராய்டு திறன்பேசிகள் அருகிலுள்ள செல்பேசி கோபுரங்கள் சார்ந்த தகவல்களை திரட்டி அவற்றை கூகுள் நிறுவனத்திடம் பகிர்வதாக குவார்ட்ஸ் என்ற இணையதள செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அந்தரங்க உரிமைக்காக வாதிடும் ஒருவர், இது பயன்பட்டாளர்களை "காட்டிக்கொடுப்பதற்கு" சமம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். தானாக ஒலியை பதிவு செய்த செக்ஸ் பொம்மை செயலியால் அதிர்ச்சி "அசோக்குமாரின் அகால மரணம் போல் இனி நிகழவிடக்கூடாது" கமல் இதுகுறித்து குவார்ட்ஸுக்கு பதிலளித்துள்ள கூகுள் நிறுவனம், இதுபோன்று பெறப்பட்ட தரவுகள் சேமிக்கப்படவில்லை என்றும் இந்த செயற்பாட்டை நிறுத்துவதற்காக ஆண்ட்ராய்டின் மேம்படுத்தப்பட்ட பதிப்பு வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

கூகுள் பிலே சர்வீஸ்சஸ் என்னும் செயலி ஆண்ட்ராய்டு திறன்பேசியின் பின்னணியில் இயங்கும்போது இப்பிரச்சனை ஏற்பட்டுள்ளது. கூகுள் பிலே சர்வீஸ்சஸ் கூகுளின் பெரும்பாலான செயலிகள் இயங்குவதற்கு அவசியமானதாகும். மேலும், இது பெரும்பான்மையான ஆண்ட்ராய்டு திறன்பேசிகளில் முன்பதிந்து வெளியிடப்படுகிறது.திறன்பேசிகள் செல்பேசி கோபுரங்களின் முகவரிகளை இனங்கண்டு அதிலுள்ள குறிப்பிட்ட இலக்கங்களின் மூலம் குறிப்பிட்ட செல்பேசி கோபுரங்கள் குறித்த தகவல்களை பிரித்து அதை கூகுளுக்கு அனுப்புவதை குவார்ட்ஸ் கண்டறிந்துள்ளது.

ஒருவர் இருக்கும் இடத்தை கண்டறிவதற்கு இந்த தரவுகளை பயன்படுத்தலாம்.

இருப்பிட சேவை அணைக்கப்பட்டிருக்கும் போது மற்றும் திறன்பேசியில் சிம் கார்டுகள் எடுக்கப்பட்டாலும் கூட மேற்கண்ட இந்த செயற்பாட்டை திறன்பேசிகள் நிகழ்த்துகின்றன.

இச்செயற்பாட்டை நிறுத்துவதற்குரிய தேர்வு திறன்பேசிகளில் இல்லை.

தரவுகளை சேமிப்பதில்லை "திறன்பேசிகளில் செய்திகளை அனுப்புவதன் வேகம் மற்றும் திறனை மேம்படுவதற்காக செல்பேசி கோபுரங்களின் சிக்கனல்களை கூடுதலாக ஆராய்தோம்" என்றும் இதை கடந்த 11 மாதங்களாக செய்து வருவதாகவும் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

"செல் குறியீட்டை எங்களின் வலைப்பின்னல் ஒத்திசைவு அமைப்போடு ஒருபோதும் இணைப்பதில்லை என்பதால் சேகரிக்கப்பட்ட தரவுகள் உடனடியாக அழிக்கப்பட்டுவிடும்" என்று அந்நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.பின்னணியில் திறன்பேசிகள் என்ன செய்கின்றன என்பதைக் கட்டுப்படுத்துவதில் பயனர்களுக்கு உரிமையேதும் இல்லை என்பதை இது காட்டுவதாக இணையம் சார்ந்த உரிமைகள் தொடர்பான குழுவான பிரைவசி இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

"நாம் ஒரு திறன்பேசியை வாங்கும்போது அது நம்மை காட்டிக்கொடுக்கும் என்பதை எதிர்பார்ப்பதில்லை" என்று பிரைவசி இன்டர்நேஷனல் அமைப்பை சேர்ந்த மில்லி கிரஹாம் கூறுகிறார்.

"இச்செயற்பாட்டை நிறுத்தவுள்ளதாக கூகுள் அறிவித்தாலும், இது பயனரின் கவனத்துக்கு செல்லாமல் என்னவெல்லாம் செய்கிறது மற்றும் எதற்காக செய்கிறது என்ற கேள்வியை எழுப்புகிறது," என்றும் அவர் கூறியுள்ளார்.

ப.முத்துராஜ்

# மனிதனை விட மரங்களை நம்பலாம்!



மரம்,செடி,கொடிகளின் இலைகளின் உருவங்களில் (நீள,அகலம்) தான் எவ்வளவு வேறுபாடு. கருவேலம் மரத்தின் மிகச்சிறிய இலைகள் ஒன்று அல்லது இரண்டு மில்லி மீட்டர் நீள அகலம் கொண்டவை. தேக்கு மரத்தின் இலைகள் அவற்றைக் காட்டிலும் நூறு மடங்குப் பெரியவை. வாழை இலைகள் ஆயிரம் மடங்குப் பெரியவை. எல்லா இலைகளிலுமே ஒரு உணவுத்தொழிற்சாலை உள்ளது. இலைகளின் செல்களில் உள்ள பச்சையம் (க்ளோரோஃபில்) சூரிய ஒளியிலிருந்து பெறும் சூரியனின் ஆற்றலை, காற்றிலுள்ள கரியமில வாயு மற்றும் வேரிலிருந்து உறிஞ்சப்பட்டு இலையை அடையும் நீரின் நுண்துளிகளையும் (மாலிக்யூல்கள்) பயன்படுத்தி, சர்க்கரைச் சத்தாக மாற்றுகிறது. இதைத்தான் ஒளிச்சேர்க்கை என்கிறோம்.

சத்து தண்டுப்பகுதி வழியாக செடி மரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது.நெல்மணிகள், கரும்பின் இனிப்பு, மாம்பழம், முந்திரி, பாதாம், பாகற்காய் எல்லாவற்றுக்குமே இந்த உணவுதான் ஆதாரம்.

இந்த உணவு உற்பத்தித் திறன் காரணமாகத் தாவரங்கள் தாமும் வாழ்ந்து ஏனைய உயிரினங்களையும் ஆடு, மனிதன் உள்பட வாழ வைக்கின்றன.

சர்க்கரை அல்லது மாவுச்சத்தின் உபரிப் பொருளாக ஆக்சிஜன் (பிராண வாயு) இலைகளின் அடிப்பகுதியின் மேற்பரப்பில் உள்ள ஸ்டோமேட்டா என்றழைக்கப்படும் செல்கள் வழியாக வெளியேற்றப்படுகிறது.

கூடவே சற்று உபரி நீரும் ஆவியாக வெளியேறுகிறது. இதன் காரணமாகவே நாம் வெயில் பொழுதில் மரத்தடியில் நாம் ஒதுங்கும்போது புத்துணர்வு பெறுகிறோம், குளிர்ச்சியும் உண்டு.

இதே ஸ்டோமேட்டா செல்கள்தான் ஒளிச்சேர்க்கை நிகழாக சமயங்களில் சூரியஒளி இல்லாத பகல்பொழுதிலும், இரவு நேரங்களிலும் ஏனைய உயிரினங்களைப் போல காற்றைச் சுவாசிக்கின்றன.

அதாவது காற்றிலுள்ள பிராண வாயுவை உள்வாங்கி கரியமில வாயுவை வெளியேற்றுகின்றன. அதனால் இரவு நேரங்களில் மரத்தடியில் இளைப்பாறும்போது புத்துணர்வு தோன்றாது.

கொஞ்சம்கூடக் காற்றின் அசைவு இல்லாத சமயங்களில் பெரிய அடர்ந்த புளியமரம் போன்ற மரத்தடியில் உறங்கினால் உங்களைப் பேய் அடித்துக் கொல்லும் என்பார்கள் பாமர மக்கள்.

காற்று அசைவு இல்லாவிடினும் இலைகள் சுவாசிக்கும்போது வெளியேறும் கரியமிலவாயு காற்றைவிடச் சற்று கனமானது. கரியமில வாயு காற்றில் சாதாரணமாக 0.5 விழுக்காடுதான் உள்ளது. இரவு நேரங்களில் அதுவும் காற்றின் சலனம் இல்லாவிடில் மரத்தடியில் கரியமிலவாயுவின் அளவு அதிகரிப்பதால் நமக்கு மூச்சு அடைக்கும். உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களின் உயிரை எடுப்பது இந்தப் பேய்தான்.

ஆஸ்திரேலியா நாட்டில் வளரும் சில தைல மரங்கள் (யூக்கலிப்டஸ்) 300 அடி உயரம் வளரக் கூடியவை. அமெரிக்க கண்டத்தில் வளரும் சேக்கோவியா மரங்கள் 400 அடிக்கும் கூடுதலாக வளர்கின்றன. அவற்றை நாம் பார்த்ததில்லை.

நாம் பார்த்துள்ள, பார்த்து வரும் பெரியபுளியமரம் அல்லது வேப்பமரங்கள் 6070 அடி உயரம் வளர்கின்றன. 2030 அடி உயரம் உள்ள தடிமனான அடிமரம் பிறகு அவற்றிலிருந்து பிரிந்து செல்லும் கிளைகள், கொப்புகள், அவற்றில் வளரும் இலைகள், காய்க்கும் காய்கள், பழங்கள் எல்லாம் 607 டன்களுக்கு மேல் எடை கொண்டவை. காற்றுக்கும் வளைந்து கொடுத்து அதே சமயம் உறுதியாக நிற்பவை.

இந்த ஒட்டுமொத்த எடையைப் பூமிக்கடியில் வேர்கள் ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரம் போல் தாங்கிக் கொள்கின்றன. அடிமரத்திலிருந்து பிரியும் கிளைகள், கோப்புகள் எல்லாமே ஒரு கணிதம். குறிப்பாக ஜியோமிதி கணித அடிப்படையில் பிரிந்து செல்கின்றன. அதாவது கட்டிடக்கலை வல்லுநர் திட்டமிடுவதுபோல மரமும் ஒரு திட்டத்துடன்தான் கிளைகளைப் பரப்புகிறது.

அதே சமயம் இலைகளுக்குப் போதுமான அளவில் சூரிய ஒளி கிடைப்பதையும் உறுதி செய்து கொள்கிறது. அப்போதுதான் நாம் முன்பே குறிப்பிட்ட ஒளிச்சேர்க்கை உணவு தயாரிப்பு எல்லாமே நிகழ முடியும்.

– பொள்ளாச்சி முத்து

# எம் பதில்கள்

## சிலர் கேள்வி மட்டுமே கேட்கிறார்களே?

கேள்வி கேட்பவன் அந்தக் கணத்துக்கு மட்டுமே முட்டாள். கேள்வியே கேட்காதவன் ஆயுள் முழுக்க முட்டாள்' என்றொரு சீனப் பழமொழி உண்டு.

நம்மில் பலருக்கும் கேள்வி கேட்பதும் பிடிக்காது... கேள்விகள் கேட்ப வரையும் பிடிக்காது. 'பதில்கள் தெரிந்திருப்பவனல்ல புத்திசாலி... கேள்விகள் கேட்கத் தெரிந்தவனே அறிவாளி' என்பதை அறியாததன் விளைவே, எங்கேயும் எப்போதும் நாம் கேள்விகளைத் தவிர்ப்பதன் பின்னணி.

தயவு செய்து கேள்வி கேட்பதை ஊக்கப்படுத்துங்கள். தெரிந்தால் பதில் சொல்லுங்கள். தெரியாவிட்டால் தெரிந்து கொண்டு சொல்ல முயற்சி செய்யுங்கள். எக்காரணம் கொண்டும் பதில் சொல்வதைத் தவிர்க்கவோ, பொய்யான பதில்களைச் சொல்லவோ வேண்டாம். கேள்வி கேட்பதென்பது உங்களில் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி அதிகப்பிரசங்கித்தனமானதில்லை. அதற்கொரு கிரியேட்டிவிட்டி தேவை. கேள்வி கேட்க ஒரு தைரியம் வேண்டும். கேட்கப்படுகிற கேள்விகளில் நியாயம் இருக்க வேண்டும். கேள்வி கேட்கிற இந்த குணத்தை அனுமதிக்கவும் ஆதரிக்கவும் செய்யுங்கள்.

## பணம் மட்டுமே வாழ்க்கையா?

இன்றைய சூழலில் அப்படித்தான் இருக்கிறது. ஆனால் நமது முன்னோர்கள் காலத்தில் அறிஞர்கள் சொன்னது வேறு போல இருக்கிறது. பணத்தைவிட நண்பர்களே முக்கியமாக சில நேரங்களில் பண விஷயத்தில் நண்பர்களே மாறக்கூடிய சூழலும் இருக்கிறது. கூடப்பிறந்தவன் சுற்றத்தினர் என்று பார்க்காதீர்கள்.

எங்கோ பிறந்த மருந்துதான் நோயைப் போக்கும்; தீர்க்கும். அந்த மருந்து போன்ற மனிதர்களும் உண்டு என்கிறார் நம் ஔவையார். "உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்; உடன்பிறந்தே கொல்லும் வியாதி உடன்பிறவாமாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்;

அம்மருந்து போல்வாரும் உண்டு" என்பதே பாட்டு. உறவைக்காட்டிலும் நல்ல நண்பர்களைப் பெற்றுக் கொண்டால் அதுவே மருந்தாகும்.

என்ன அற்புதமான பாட்டு. கூடவே பிறந்த நோய் அவனைக் கொல்கிறது. எங்கோ மலையில் தோன்றிய மருந்து அவனுயிரைக் காக்கிறது. எல்லாரையும் சொல்லவில்லை.

ஒரு சிலர் உள்ளனர். பணத்தை சம்பாதிக்கும் அதே வேளையில் சொந்தம் உறவுகள் நண்பர்கள் ஆகியவற்றையும் சேமிக்க வேண்டும். சேர்க்க வேண்டும்.

## இசைஞானி இளையராஜா குறித்த செய்திகள் பத்திரிகைகளில் வந்தவண்ணம் வந்துள்ளதே?

தனது இசையால் தமிழ் திரை உலகத்தை அகில உலக அளவில் திரும்பிப் பார்க்க வைத்தவர் இளையராஜா. ரசிகர்கள் தங்களது சோகங்களை மறக்க அவரது பாடல்களை கேட்பார்கள் என்று அனைவரும் சொல்ல கேட்டு இருக்கிறோம். பாட்டு எப்படி உலக அளவில் பேசப்படுகிறதோ அந்தப் பாட்டுக்கு தான் மட்டுமே உரிமையாளர் என்று இளையராஜா அடிக்கடி சொல்லுவதும் நீதிமன்றம் செல்லுவதும் வாடிக்கையாகிவிட்டது .நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அது குறித்து நாம் அதிகம் பேசவே முடியாது. சரி இந்த பிரச்சனை எப்படி வந்தது என்று பார்ப்போம்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினி நடிக்க இருக்கும் கூலி படத்தின் டைட்டில் டீசர் வெளியாகி ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு பெற்று வருகிறது. அந்த டீசரில் இளையராஜா இசையில் ரஜினிகாந்த் நடித்த "தங்க மகன்" படத்தில் இடம்பெற்ற "வா வா பக்கம் வா" என்ற பாடல் மறு உருவாக்கம் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்த படத்தில் தன்னுடைய இசையை



அனுமதி இன்றி பயன்படுத்தியதாக சன் பிக்சர்ஸ் நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு இளையராஜா நோட்டீஸ் அனுப்பியுள்ளார். ஏற்கனவே கேசட் வெளியிடும் நிறுவனம் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அது நடந்து வருகிறது.

இளையராஜாவின் 4,500 பாடல்களை பயன்படுத்த 'எக்கோ' மற்றும் 'அகி' உள்ளிட்ட இசை நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்திருந்தன. ஒப்பந்த காலம் முடிந்த பிறகும், காப்புரிமை பெறாமல் தனது பாடல்களை பயன்படுத்துவதாக கூறி, இளையராஜா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற தனி நீதிபதி, தயாரிப்பாளர்களிடம் உரிமைப் பெற்று, இளையராஜா பாடல்களைப் பயன்படுத்த இசை நிறுவனங்களுக்கு உரிமை உள்ளது. அதேநேரம், இளையராஜாவுக்கும் இந்தப் பாடல்கள் மீது தனிப்பட்ட தார்மீக சிறப்பு உரிமை இருக்கிறது என்று கடந்த 2019ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து இளையராஜா தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு, இளையராஜா பாடல்களை பயன்படுத்த இசை நிறுவனங்களுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. இதனிடையே, படத்தின் காப்புரிமை தயாரிப்பாளரிடம் இருப்பதால், அவர்களிடம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாடல்களைப் பயன்படுத்த தங்களுக்கு அதிகாரம் இருப்பதாகக் கூறி எக்கோ நிறுவனம் சார்பிலும் மேல்முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டது.

இளையராஜா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன், " இசையமைப்பு என்பது கிரியேட்டிவ் பணி என்பதால் காப்புரிமை சட்டம் இதற்குப் பொருந்தாது" என கூறினார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், "அப்படி என்றால் பாடலின் வரிகள், பாடலைப் பாடும் பாடகர் என அனைத்தும் சேர்ந்துதான் ஒரு பாடல் உருவாகிறது. வரிகள் இல்லை என்றால் பாடல் இல்லை. அப்படி இருக்கும்போது, பாடலுக்கு பாடலாசிரியரும் உரிமை கோரினால் என்ன ஆகும்?" என கேள்வி எழுப்பினர்.

ஒரு விழாவில் வைரமுத்து இசையும் பாடல் வரிகளும் இரண்டு முக்கியம் என்று சொல்ல அதற்கு இளையராஜாவின் தம்பியும் இயக்குனருமான கங்கை அமரன் அவரை விமர்சித்தார். இதே கங்கை அமரன் தான் இதுகுறித்து ஏற்கனவே கருத்து தெரிவித்த போது இளையராஜாவை விமர்சித்து இருந்தார் என்பதை இணையதளத்தில் வெளியிட்டு ரசிகர்கள் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் தயாரிப்பாளர் கே. ராஜன் ஒரு



விழாவில் பேசும்போது சொன்ன கருத்து பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறது.

குற்றம் தவிர் படத்தின் தொடக்க விழா சென்னை பிரசாத் லேபில் பூஜையுடன் தொடங்கியது. தயாரிப்பாளரும், விநியோகஸ்தர் சங்கத் தலைவருமான கே. ராஜன் விழாவில் கலந்து கொண்டு படக்குழுவினரை வாழ்த்திப் பேசும்போது, ஒரு படத்தின் பாடல் மொத்தமாக இசை என்பதே தயாரிப்பாளருக்குத்தான் சொந்தம். ஏனென்றால், கதையை நாங்கள் தேர்ந்தெடுத்து, இயக்குநருடன் பேசி, கதாநாயகனுடன் பேசி, பிறகு இசையமைப்பாளருடன் பேசுகிறோம். இயக்குநர் கதைக்கேற்ற சூழலைச் சொல்லி, அதற்கு ஏற்ற மெட்டை இசையமைப்பாளரிடம் இயக்குநர் தான் வாங்குகிறார்.

இயக்குநர் சொல்லும் வேலையைத்தான் இசையமைப்பாளர் செய்ய வேண்டும். இசையமைப்பாளர் தன்னிச்சையாக தன் இஷ்டத்திற்கு எதுவும் செய்ய முடியாது. 10 ட்யூன் வாங்குவோம். சில நேரம் 25 ட்யூன் கூட வாங்கித் தேர்ந்தெடுப்போம். கொத்தனார் வீடு கட்டுகிறார். அந்த கொத்தனார் தினசரி கட்டிடம் கட்டுகிறார். அவருக்கு கூலி கொடுத்து விடுகிறோம்.

கட்டட வேலைகள் எல்லாம் முடிந்து கிரகப்பிரவேசம் செய்யும் போது அந்தக் கட்டடம் எனக்குத் தான் சொந்தம், நான்தான் கட்டினேன் என்று சொன்னால் எப்படி முட்டாள்தனமாக இருக்குமோ, அதேபோல, பாடல் இசை இசையமைப்பாளருக்குத் தான் சொந்தம் என்று சொல்வது மிகப்பெரிய தவறு. என்று பேசி பரபரப்பை உண்டாக்கி இருக்கிறார். இளையராஜாவின் பாடலை எப்படி ரசித்து கேட்டார்களோ அதைப்போல இது போன்ற செய்திகளையும் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள் ரசிகர்கள்.

பகுதி 5

# திரையா? சிறையா?

## குடி கெடுக்கும் குடி

முனைவர் .பா.இறையரசன்

தேவதாஸ் காதல் தோல்வியால் குடித்துக் குடித்து அழிவதாகக் காட்டும்படம். இது போல் காதல் தோல்வியும் சாவும் எனக் காட்டும் படங்கள் சில.

சோகத்தில் வெற்றிகண்ட படங்கள் பல.

ஆனால் காதலில் சிறிது தோல்வி அல்லது இடைவெளி, முதல் மறுப்பு, பெற்றோர், சாதி, மத / சமுதாய எதிர்ப்பு/ ஒருதலைக் காதல்நிலை என்றாலும் காதலன் குடிகாரனாகிக் கேடடைதல் அல்லது சாவு எனப் பல படங்கள்.

காதல் காதல் காதல்

காதல் போயின் சாதல்"

எனப் பாடி முடிவடைதல் காதலுக்கு மரியாதை இல்லை, துன்பியலைப் பிழிந்து கூட்டம் சேர்க்கும் முயற்சி.

பாரதியார் சித்தர்கள் (சாமியார்கள்) சேர்க்கையாலும் பசிக்கொடுமையா லும் கஞ்சாவுக்கு மயங்கினார் என்பர்.

(பாட்டில்) போட்டால் தான் பாட்டில் சிறந்த நயம் லயம் வரும் என்று போதையில் கிடந்து பாதை இழந்த கவிஞர்கள் கலைஞர்கள் பலர்.

"கோப்பையிலே என் குடியிருப்பு" என்று கவியரசு கண்ணதாசன் பாடியவாறே "காவியத்தில் நான் தலைவன்" என்று பேர் காத்துப் பெருங்கவியாகவே வாழ்ந்தார். கலையும் குடியும், கவிஞனும் குடியும் பிரிக்க முடியாதவை எனப் பதியவைக்கும் பல படங்கள் தொடர்ந்து வருகின்றன. நடனக் கலைஞன் (கமல், விஜயகாந்த்,.......) குடியால் அழிதல் இசைக்கலைஞன் /பாடகன் (சிவக்குமார், மோகன்..... குடியால் அழிதல் எனக் குடியால் பெருங்கலைஞர்கள் அழிவதைக் காட்டும் படங்கள் பல.

இக்குடிப்படங்கள் சோகத்தைப் பிழிகின்றன என்பதை விட இத்தகு படம் பார்க்கும் இளைஞர்களை மறைமுகமாகத் தூண்டிக் குடிக்க வைக்கின்றன / அடிமையாக்குகின்றன.

குடியைத் தடுக்க மதுவிலக்கு கொண்டு வரலாம்; வெளிநாட்டுச் சாராயத்தையும் உள்நாட்டுச் சாராயத்தையும் தடுத்து, கள்ளுக்கடைகளைத் திறக்கலாம் என்கின்றனர்.



கள்ளச்சாராயத்தில் போதை அதிகமாக ஏற்ற, கண்டகண்ட இரசாயன / பூச்சிகொல்லி நச்சுகளையும் கலக்கின்றனர்; அதனால்தான் நிறைய சாவுகள் நிகழ்கின்றன. குடிப்பிகளில் 21% பூச்சிமருந்து உள்ளது என அவர்களே புட்டில்கள் மேல் அச்சிட்டுள்ளனர். இப்போது சில 63% உள்ளதாக அச்சுறுத்துகின்றனர். அப்படியும் வாங்கிக் குடிக்கின்றனர் ; அதிகம் விற்பனை ஆகின்றது.

கள்ளச்சாராயம் மட்டுமல்லாமல், இளைஞர்களிடம் மாணவர்களிடம் பள்ளி மாணவிகளிடமும் போதை மருந்து, ஊசி எனப் பரவி வரும் நிலை உள்ளது. சுண்டக்கஞ்சி என்பதுபோல, இளைஞர்கள் சில இரசாயனப் பொருள்களைக் கலந்து போதையாக்கிப் பயன்படுத்துகின்றனர்.

"மாதமோ சித்திரை,

மணியோ பத்தரை,

உதயசூரியனுக்கு

அளியுங்கள் முத்திரை "

என அறிஞர் அண்ணா தேர்தல் நேரத்தில் இரவு நேர எல்லை கடக்கும் கடைசி நொடிகளில் பேசிட நேர்ந்த போது இரண்டு வரிகளில் பேசினாராம். தேர்தல் நேரத்திலும் குடி எல்லைமீறிப்போகும். திரைப்பட விழா, பிறந்த நாள், திருவிழா, வீட்டுச் சிறப்பு நிகழ்வு, திருமணம், ஊர்ப்பெருவிழா, மாநாடு, கோயில் விழா, அரசியல் கூட்டம், ஆன்மிகக் கூட்டம், தேர்வு முடிவு, தேர்தல் முடிவு, வாழ்க்கை முடிவு (இறப்பு), பிறப்பு என எங்கும் குடித்துத் தீர்ப்பது மக்களிடம் பரவி உள்ளது.

ஊதியம் வாங்கிய அன்று மாலையில் தெருவில் அமர்ந்து குடித்துக் கொண்டாடும் தொழிலாளத் தோழர்களும் (ஆசிரியர்களும்கூட) காணலாம். பெண்கள் சமத்துவம் குடியிலும் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் தமிழ்க்குடி மக்கள் ஆக விளங்குகின்றனர். குடி/ மது, போதை ப் பழக்கம் தமிழ்க்குடியை ஏழைகளை பாட்டாளிகளை (மாணவர்களையும், இளம் பெண்களையும்) குடி/ போதை கெடுத்துவருகிறது. இந்நிலையை மாற்றுவதே நம் மக்களின் பணம், பண்பு, குடும்பம், நாகரிகம், நலவாழ்வு காக்கும்.

"குடிப்பதைத் தடுப்பதே

கோடி கோடி புண்ணியம்"

– நாமக்கல் இராமலிங்கனார்.

தொடரும்...

# அங்கவையும் சங்கவையும்



முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளலை நமக்குத் தெரியும். அவருடைய மகள்கள் அங்கவையையும் சங்கவையையும் (சிவாஜி படத்தில் காட்டப்பட்டவர்கள் இல்லை) பற்றிய கதை இது. அக்கா அங்கவை தங்கை சங்கவையை விட ஆறு வயது மூத்தவள். முதல் மகள் அங்கவை என்ன நினைக்கிறாள் என்பதைப் பாரியால் மிகச் சரியாகச் சொல்ல முடியும். அதே போல் பாரியின் கண்களின் வழியாகத் தான் இந்த உலகையே பார்த்தாள் அங்கவை. அவ்வளவு நெருக்கம் அப்பாவும் மகளும். ஒரு நாள் அருவியில் குளித்துவிட்டுப் பக்கத்தில் இருந்த பாறை மேல் ஏறி நின்று பாரி எதையோ பார்த்துக் கொண்டிருந்தார். சமையல் தயாராகிக் கொண்டிருந்தது.

அப்போது பாரியுடைய மனைவி ஆதினியும், மகள் அங்கவையும் அங்கே வந்தார்கள். 'அங்க என்னப்பா பாத்துக்கிட்டு இருக்கீங்க?' என்றாள் அங்கவை. 'நீயே கண்டுபிடி, பார்ப்போம்' என்றார் பாரி. அந்தப் பாறையில் இருந்து பார்த்த போது, பரந்து விரிந்த காடு, கொட்டும் அருவி, பறவைகளின் சத்தம் இவையெல்லாம் கேட்டன. 'இங்கே நிறையப் பறவைகளின் சத்தம் கேக்குது. அதுல ஒரே ஒரு குரல் மட்டும் வித்தியாசமா இருக்கு. அந்தப் பறவை எதோ சோகத்துல கத்துது போலன்னு தானே பாக்குறீங்க?' என்றாள் மனைவி ஆதினி. உடனே அங்கவை, 'இல்லம்மா. அப்பா அதப் பாக்கல' என்று சொன்னவுடன், அவளைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தார் பாரி. இப்போது ஆதினிக்கு ஒரு சிறு கோபம். ஒரு முறை கூட கணவர் நினைப்பதைத் தம்மால் சரியாகச் சொல்ல முடியவில்லையே என்று. அந்தக் கோபத்துடன் 'சரி. அப்பாவும் பொண்ணும் என்னதான் பாத்தீங்க? சொல்லுங்க' என்றாள் ஆதினி. 'அதோ தூரத்துல தெரியுதே, ஒரு சந்தனவேங்கை மரம். அதத்தான் அப்பா பாத்தாரு. இல்லப்பா?' என்று அங்கவை சொன்னவுடன், ஆதினி ஒரு சிறு வெட்கத்துடன், 'அதையா பாத்துக்கிட்டு இருந்தீங்க?' என்று கேட்டாள். ஏனென்றால் அந்தச் சந்தனவேங்கை மரத்தில் ஜோடிக் கிளிகள் இரண்டு அமர்ந்திருந்தன. உடனே பாரி சொன்னார், 'நம் மகளுக்குக் காதல் வந்துருச்சு. இன்னும் கொஞ்ச நாள்ல கல்யாணம் செஞ்சுக்கிட்டுப் போயிடுவா. அவ போறதுக்குள்ள இந்தப் பறம்பு நாட்டுக்குக் கபிலர், பரணர் போன்ற எழுத்துப் படிச்ச புலவர்களை அழைத்து நம் பிள்ளைகளுக்கும், நம் நாட்டு மக்கள் சிலருக்கும் எழுத்துச் சொல்லிக் கொடுக்கச் சொல்லணும். அது தான் என்னுடைய ஆசை!' என்று சொல்லிவிட்டு அங்கவை, 'போய்ச் சமையல் தயாராயிடுச்சான்னு பாரு!' என்று சொல்லி அங்கவையை அனுப்பி வைத்தார்.

அனுப்பிவிட்டு மனைவி ஆதினியிடம், 'நம்ம பொண்ணுக்கு கல்யாண வயசு வந்திருச்சு. அதனால தான் அவ கண்ணுக்கு அந்தச் சந்தனவேங்கை மரமும் அந்தக் கிளிகளும் தெரிஞ்சிருக்கு. ஆனா, நீ தான் என் கண் கொண்டு பாத்த. நீ சொன்னது தான் சரி. அதோ தூரத்துல கேக்குதே அந்தப் பச்சைப் புறாவின் சோகக் குரல். அதைத்தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன்' என்றார். ஆதினிக்கு மிகவும் மகிழ்ச்சி. 'இதை ஏன் நீங்க அவ இருக்கும்போதே சொல்லல?' என்றாள் ஆதினி. அதற்குப் பாரி இப்படிச் சொன்னார், 'நம்ம பிள்ளைகள்கிட்ட நாம தோற்றுப்போகும் போதும், அவர்களுக்கு விட்டுக்கொடுக்கும் போதும் தானே, ஓர் ஆண் தாய்மையை உணர்கிறான்'. இந்தக் காட்சியை மிக அழகாகச் சித்தரித்திருப்பார் 'வீரயுக நாயகன் வேள்பாரி' என்ற நீண்ட சுவையான நாவலை எழுதிய எழுத்தாளர் சு. வெங்கடேசன் அவர்கள். இவ்வளவு பாசமான குடும்பம் தான் பாரியின் குடும்பம்.

பாரி விரும்பியபடியே கபிலர் ஒரு நாள் பறம்பு மலைக்கு வந்து இவர்களின் நெருங்கிய நண்பரானார். அதற்கெல்லாம் பிறகு தான் சேர, சோழ, பாண்டியர் மூவரும் இணைந்து பாரி மேல் போர் தொடுத்துத் தோற்றுப் போனார்கள். அதன் பின் பாரியை வஞ்சகமாகக் கொன்றார்கள். பாரி இறந்த பின் ஆதரவில்லாமல் இருந்த அங்கவையையும் சங்கவையையும் கபிலர் பாதுகாத்து வந்தார். ஒரு குடிசையில் அவர்கள் தங்கியிருந்த போது, ஒரு நாள் இரவு கபிலர் அசதியில் நன்கு தூங்கிவிட்டார். அங்கவையும் சங்கவையும் தூக்கம் வராமல் குடிசை வாசலில் உட்கார்ந்திருந்தார்கள்.

அன்று பௌர்ணமி. அப்போது சங்கவை அக்காவிடம், 'அக்கா, அதோ தூரத்துல நிலா வெளிச்சத்துல உனக்கு என்ன தெரியுது?' என்று கேட்டாள். அங்கவை அங்கே பார்த்துவிட்டு, 'எனக்கு நல்லாத் தெரியுதுடி. அது நம்முடைய பறம்பு மலை. ஒரு காலத்துல நம்முடைய மலையா இருந்தது' என்றாள் கலங்கியபடி. 'ஒரு காலத்துல என்னக்கா? இதோ போன பௌர்ணமில அது நம்ம மலையா இருந்துச்சு. நம்ம அப்பாவும் நம்ம கூட இருந்தாரு. நாம எவ்வளவு மகிழ்ச்சியா இருந்தோம். ஒரு மாசத்துக்குள்ள, இந்தப் பௌர்ணமில நம்ம மலையும் நம்மகிட்ட இல்ல. நம்ம அப்பாவையும் வஞ்சகத்தால கொன்னுட்டாங்களேக்கா' என்று விக்கி விக்கி அழுதாள். 'விதியின் கோரத் தாண்டவம் அப்படித்தான் இருக்கும்' என்று தானும் கண்ணீர் சிந்திக்கொண்டே அவளுக்கு ஆறுதல் சொன்னா அங்கவை. அவர்கள் இருவரும் பாடிய ஒப்பாரிப் பாட்டுத்தான் இது.

புறநானூறு – 112

*அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்*
*எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர்கொளார்*
*இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்*
*வென்றெறி முரசின் வேந்தர் எம்*
*குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே.*    *பாரி மகளிர்*

– ஜெயா மாறன் அட்லாண்டா, அமெரிக்கா

# மூங்கில் மரம் சொல்லும் வாழ்க்கை தத்துவம்!



**ம**னிதனுக்கு இயற்கையிலேயே சில ஆலோசனைகள் புத்திமதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை மரம் செடி கொடிகளாக இருக்கலாம் மிருகங்களாக இருக்கலாம் இயற்கை அம்சங்களாக இருக்கலாம். அப்படி மூங்கில் மரம் மனிதனுக்கு வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் என்கிற தத்துவத்தை சொல்லுகிறது!

மூங்கிலைப் பயிரிட்டு தண்ணீர் ஊற்றுவார்கள். பருவங்கள் போகும். ஆனால் செடி வளரவே வளராது. ஒரு இன்ச் அளவு கூட வளராமல் அடம்பிடித்து அப்படியே இருக்கும். முழுசாய் நான்கு வருடங்கள் செடி அப்படியே இருக்கும். செடிக்குத் தண்ணீர் ஊற்றுபவர் பொறுமையுடன் அதை பராமரிக்க வேண்டும். நான்கு ஆண்டுகளாய் அவருக்கு சிலாகிக்கவோ, மகிழ்ச்சி கொண்டாடவோ எதுவுமே இருப்பதில்லை.

ஆனால் அதற்கு அடுத்த பருவத்தில் எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்த மூங்கில் வளரத் துவங்கும். அதுவும் எப்படி? சடசடவெனும் அசுர வளர்ச்சி. ஒரே ஆண்டில் அது எட்டிப் பிடிக்கும் உயரம் எவ்வளவு தெரியுமா? 80 அடிகள். நான்கு ஆண்டு காலமாக அமைதியாக இருந்த செடி, எப்படி ஐந்தாவது ஆண்டில் மட்டும் விஸ்வரூப வளர்ச்சியை எட்டுகிறது?

ஆராய்ந்து பார்த்தால் ஆச்சரியம் தரும் ஒரு ரகசியம் இதில் இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். இயற்கையின் அற்புதம், கடவுள் படைப்பின் மகத்துவம் இது.

முதல் நான்கு ஆண்டுகள் அந்த மூங்கில் வேர்களை பூமியில் நன்றாக இறக்கி மிகச் சிறந்த பிடிமானத்தை உருவாக்கிக் கொள்கிறது. ஐந்தாவது ஆண்டில் என்பது அடி உயரமாக வளரப் போகிறேன், என்னைத் தாங்கிப் பிடிக்கும் வல்லமை என் வேர்களுக்குத் தேவை என மூங்கில் முழு மூச்சாய்த் தன்னைத் தயாரிக்கும். அதனால் தான் ஐந்தாவது ஆண்டில் அசுர வளர்ச்சி அடையும் போது அது தடுமாறுவதும் இல்லை, தடம் புரள்வதும் இல்லை!

பொறுமை உயரமான வெற்றிகளை உருவாக்குகிறது. அவசரப்பட்டு முளைத்து, சடசடவென வீழ்ந்து விடாமல், நமது அடித்தளத்தை வலுவாக்கிக் கொள்ள பொறுமை நம்மைத் தூண்டுகிறது.

மூச்சு உள்ளவரை முயற்சி செய்வோம். முடியாதது என்று இங்கு ஒன்றும் இல்லை!

## மழலை ஓவியம்



வை.ஷான்வி, பெங்களூர் – 16



# உலகின் கதவுகள்!

**கவிஞர்.மோகன், பெரம்பலூர்**



எனது மனைவி, அதுதான் அந்தப் பொல்லாதக் கிழவி. என்னை எதற்கும் துப்பில்லாதவனென்று எப்போதும் திட்டிக்கொண்டேயிருப்பாள். எனக்கும் அந்தப் பொல்லாத கிழவிக்கும் இடையே அந்த சண்டை அன்று முன்னிரவிலேயே தொடங்கிவிட்டது. வீட்டு வரவு செலவு கணக்கில் ஒரு சிறிய இடறல். அது வெறுமனே ஒரு அசட்டுக் காரணம்தான். சண்டையில் பழைய முடிந்துபோன பிரச்சினைகளையெல்லாம் கிளறி எடுத்துவந்து தேவையில்லாமல் கிழவி கத்திக்கொண்டிருந்தாள். இரவு உணவு பரிமாறும்போது பாத்திரங்களை சத்தமாக வைத்தாள். மிளகாய் வற்றல் தீர்ந்து ஒரு வாரமாகிவிட்டது. தாளிப்பதற்கு கூட ஒன்றும் இல்லை என்று முணுமுணுத்தாள்.

மனைவி கோபமாக கடுஞ்சொல்லாடும்போது, ஒரு செவிடனைப் போல இருக்கக் கற்றுக்கொண்டுவிட்டால், இல்லறத்தில் ஏற்படும் விரிசல்களை ஏறத்தாழ தவிர்த்துவிடலாம் என்பது என் அனுபவம். ஆனால் அன்று நடந்த சண்டையின் உச்சகட்டமாக வீட்டின் கதவை, அது உடைந்துபோய்விடும் அளவிற்கு அவள் வேகமாய் அறைந்து பெரும் சத்தத்துடன் சாத்தியபோது, பொறுக்கமாட்டாமல் எழுந்து சென்று கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டேன்.

மனிதர்களின் கோபத்திற்கு கதவுகள் ஏன் வதைபட வேண்டும் ? சடப்பொருட்களுக்கும் வலி உணர்வு இருக்குமானால், உலகின் எல்லாக் கதவுகளும் தம்மைப் பெயர்த்துக்கொண்டு நகர்ந்தோடி எங்காவது ஆற்றில் அல்லது கடலில் விழுந்து மாய்ந்துவிடும் போல தோன்றியது.

அழுதுகொண்டே கட்டிலில் முகம் புதையப் படுத்துக்கொண்டு விசும்பத் தொடங்கிவிட்டாள். கண்ணீரை பெண்கள் எங்குதான் சேமித்து வைத்திருக்கிறார்களோ!

தலையணை கொஞ்சம் கொஞ்சமாய் நனைந்தது. விசும்பல் அடங்க வெகுநேரமானது. அப்படியே தூங்கிப் போய்விட்ட அவளை அசையாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். மந்தமான விளக்கொளியில், ஒரு குழந்தையைப் போல தெரிந்தாள் அவள்.

நரைத்துச் சுருங்கிய அவள், தன் வாழ்வில் குழந்தைகளற்ற போதாமையை என்மீது சொற்களால் எறிந்துகொண்டிருந்தாள். எறியப்படும் எதுவும் ஏதாவதொன்றை தாக்கிவிட்டு அமைதியடைந்துதானே தீரவேண்டும். ஆனால் பல ஆண்டுகளாகியும் கிழவி அமைதியடையாமல் கத்திக்கொண்டுதானிருந்தாள்.

**கவலைகளை**
**சிறைப்பிடித்து**
**சில மணி நேரம்**
**காணாமல் போகச் செய்யும்**
**மந்திரவாதிகள்....**
**குழந்தைகள்!!!!**
**- உமாஸ்கந்தவேள்**



# உலகின் ஏழு அதிசயங்கள்

**1.சிச்சென் இட்ஷா (கிபி 800 க்கு முந்தையது), யுகாட்டன் தீபகற்பம், மெக்சிகோ**

சிச்சென் இட்ஷா என்பது, பண்டைய மாயன் நாகரீகத்தில் அரசியல் மற்றும் பொருளாதார மையமாக விளங்கிய புகழ் மிக்க கோவில் நகரமாகும். குக்குல்கானுடைய பிரமிட், சாக் மூல் கோவில், ஆயிரம் தூண் மகால், கைதிகள் விளையாட்டு மைதானம் போன்ற பல்வேறு அமைப்புகள், கட்டிடக் கலைக்கும் வடிவமைப்புக்கும் அவர்கள் காட்டிய அதீத ஈடுபாட்டை வெளிக்காட்டும் வகையில் இன்றும் காண முடிகிறது. இந்த கடைசி பிரமிட், மாயன் நாகரீக கோவில்களில் மிகப் பெருமை வாய்ந்தது.

**2.கிறிஸ்து மீட்பர் (1931), ரியோடிஜெனிரோ, பிரேசில்**

ரியோடிஜெனிரோ நகரை பார்க்கும் வகையில் அமைந்த கார்கோவடோ மலை மீது, 38 மீட்டர் உயரத்தில் கிறிஸ்துவின் இந்த சிலை உள்ளது. பிரேசில் நாட்டின் ஹைட்டர் டா சில்வா கோஸ்டா என்பவரால் வடிவமைக்கப்பட்டு, பால் லாண்டோவ்ஸ்கி என்ற பிரஞ்சு சிற்பியால் உருவாக்கப்பட்ட இச்சிலை, உலகெங்கும் நன்கு அறியப்பட்ட நினவுச்சின்னமாகும். உருவாக்க ஐந்து ஆண்டுகள் ஆன இச்சிலை, 12, அக்டோபர் 1931 அன்று திறந்து வைக்கப்பட்டது. வந்தாரை வரவேற்கும் பிரேசில் மக்களின் விருந்தோம்பலுக்கும், ரியோடிஜெனிரோ நகருக்கும் அடையாளச் சின்னமாக இச்சிலை விளங்குகிறது.

**3.ரோமக் கேளிக்கைக் கூடம் (கிபி 7082), ரோம் நகரம், இத்தாலி**

வெற்றி பெற்ற படையணியினர் மற்றும் ரோம சாம்ராஜ்ஜியத்தை பெருமைப்படுத்தும் விதமாக, ரோம் நகர மையத்தில் இந்த பிரசித்தி பெற்ற நடுவட்டரங்கம் நிர்மாணிக்கப்பட்டது. இதன் வடிவமைப்பு, காலத்தை கடந்து, 2000 ஆண்டுகளுக்கு பின்பும் வடிவமைக்கப்படும் நவீன விளையாட்டரங்க வடிவமைப்புக்கு அடிப்படையாக, அதனைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

**4.தாஜ்மகால், (கிபி 1630)**

மறைந்த காதல் மனைவியின் நினைவை போற்றும் வகையில், முகலாயப் பேரரசின் ஐந்தாம் பேரரசர் ஷாஜகான் உத்தரவுப்படி, இந்த பிரமாண்டமான மசூதி கட்டப்பட்டது. இந்தியாவின் முகலாய கட்டிடக்கலையின் மகுடமாக விளங்கும் தாஜ்மகால், நன்கு வடிவமைக்கப்பட்ட தோட்டத்தின் மத்தியில், வெள்ளை சலவைக்கற்களை கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**5.சீனப் பெருஞ்சுவர் (கிமு 230 மற்றும் கிபி 13681644), சீனா**

ஏற்கனவே இருந்த கோட்டை அமைப்பை வலுப்படுத்தவும், அடிக்கடி தொடர்ந்த மங்கோலிய



படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் சீனப் பெருங்சுவர் நிர்மாணிக்கப்பட்டது. மனிதனால் கட்டப்பட்ட அமைப்புகளிலேயே மிகப்பெரிய இச்சுவர், விண்வெளியிலிருந்து காணக்கூடிய ஒரே அமைப்பு என்றும் கூறப்படுகிறது.. இந்த சாதனைச் சுவரை நிர்மாணிப்பதில், பலர் தங்களுடைய உயிரையும் தந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

**6.மச்சு பிச்சு (கிபி 14601470), பெரு**

மச்சு பிச்சு (பழைய மலை) என்று அழைக்கப்பட்ட மேகம் தவழும் மலை மீது, பேரரசர் பச்சகுட்டிக் என்பவர் பதினைந்தாம் நூற்றாண்டில் ஒரு நகரை நிர்மாணித்தார். இந்த நகரம் ஆண்டஸ் பீடபூமிக்கு மேலே பாதி வழியில், அமேசான் காடுகளுக்கு மத்தியில், உருபம்பா நதிக்கு மேல் உள்ளது. சின்னம்மை நோய் தொற்றால் இன்கா மக்களால் இந்நகரம் காலி செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஸ்பானியரால் இன்கா பேரரசு தோற்கடிக்கப்பட்ட பிறகு, ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாக இந்நகரம் காணாமல் போனதாக கருதப்பட்டது. 1911 ல் ஹிரம் பிங்கம் என்பவரால் இது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.



**7.பெட்ரா (கிமு 9 கிபி 40), ஜோர்டான்**

அரேபியன் பாலைவனத்தின் ஓரத்தில், நார்பாட்டியன் சாம்ராஜ்ஜியத்தின் அரசர் நான்காம் அரிட்டாஸ் ன் கிமு 9 முதல் கிபி 40 வரை) தலைநகராக பெட்ரா நகர் விளங்கியது. நீர் நிர்வாகத்தில் நிபுணர்களாக விளங்கிய நார்பாட்டியர்கள், தங்கள் நகரில் நீர் வழித்தடங்களையும், சேமிப்புக்களையும் நிர்மாணித்திருந்தார்கள். கிரீக்ரோமன் மாதிரிகள் அடிப்படையில் அமைந்த அரங்கம், 4000 பார்வையாளர்கள் அமரக் கூடியதாக இருந்தது. எல் டீர் மடத்தில் அமைந்துள்ள பெட்ரா அரண்மனையின் கல்லறைகள், 42 மீட்டர் உயரமுள்ள ஹெலினியக் கோவிலின் முன்புறம் ஆகியவை மத்தியக் கிழக்கு நாகரீகத்தின் அடையாளமாக இன்றும் காணக் கிடைக்கின்றன.

# ஆசிரியர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்!



ஓய்வு பெற்ற நீதிபதி.உயர்திரு. பிரபுதாஸ் – திருமதி.சி.நிர்மலா இணையரின் மகள், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் செல்வி.பி.பிரியங்கா–செல்வன்.ஜே.ஜி.நவீன் தீபக் ராஜ் (திரு.ஜே.ஜார்ஜ்ஜெயராஜ் – திருமதி.சுசீலா இணையரின் மகன்)திருமணம் 4.4.2024அன்று நாகர்கோவிலில் நடைபெற்றது.13.4.2024 அன்று சென்னையில் நடந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதிகள் உயர்திரு கலையரசன், உயர்திரு.கோகுல்தாஸ் மற்றும் நீதிபதி.உயர்திரு.பாஸ்கர், ராதா எக்ஸ்போர்ட் நிறுவனர் திரு.கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்தினர்.



சென்னை எஸ்.வி.எஸ்.கிளப் முன்னாள் செயலாளர் மகள் திருமண விழாவில் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் ராதா எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனர் திரு.கிருஷ்ணன் வாழ்த்தினார்.

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 May 2024

# ஆசிரியர் பங்கேற்ற ஆலய நிகழ்ச்சி!










Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY